Regd. No. 2514 Swadesamitran Illustrated Weekly

சங்கீத நூல்கள்

★

	ரூ.	அ.
கந்தகானமுதம் (2-பாகம்) (N. கோடீச்வரய்யர்)	5	0
கீர்த்தன மாலை (3-பாகம்) 2வால்யூம்கள் (ஸ்ரீபாபநாசம் சிவன்)	2	8
புரந்தர மணிமாலை (கானகலா பூஷணி லலிதாங்கி)	2	4
முருகன் மதுர கீர்த்தனைகள் (T. R. விச்வநாத சாஸ்திரியார்)	2	4
தக்ஷிணாத்ய கானம் (C. R. S. அய்யங்கார்)	2	4
சங்கீத தத்வப் ப்ரதர்ச்னி I (Prof. வேதாந்த பாகவதர்,	2	0
குருகுஹ.கானாமிர்த வர்ஷனி	1	8
கானமஞ்ஜூஷா	1	0
பேரின்ப கீர்த்தனங்களும் பதிகங்களும் (N. கோடீச்வரய்யர்)	1	0
மிருதங்க ஸ்வபோதினி (துரைராஜ அய்யர்)	1	0
அஷ்டபதி (C. R. S. அய்யங்கார்)	1	0
வேதபுரிக் கீர்த்தனைகள் (T. R. விச்வநாத சாஸ்திரியார்)	0	2

தபாற்செலவு, ரயில் செலவு பிரத்யேகம்.

எமது எல்லா ரயில்வே புத்தகசாலைகளிலும், ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

இவைகள் தவிர வியாபாரிகளுக்கும், வாசக சாலைகளுக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் கோர்வையான அகப்படக்கூடிய நாவல்கள் முதலியன ஆர்டரின் பேரில் அனுப்பப்படும்.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

Printed and Published by T. S. Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor, C. R. Srinivasan, B.A.

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 7 15-3-'42 Price 2 Annas.

சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு
15—3—42

சென்ற வார நிகழ்ச்சிகள்

★

மிஸ்டர் அமெரியின் பிரசங்கம்

மிஸ்டர் அமெரி ஆக்ஸ்போர்ட் மாணவர் சங்கத்தில் பேசுகையில் கூறியதாவது:—

சுதந்திர நாட்டினர் சுதந்திரமாகச் சேர்ந்ததே பிரிட்டிஷ் சாம்ராஜ்யம். இது, யுத்தம் சமாதானம் இரண்டையும் சமாளிக்குமா என்பது இனித்தான் தெரியவேண்டும். சமீபத்தில் நாம் அடைந்துள்ள தோல்விகளின் விளைவாக, பிரிட்டிஷ் காலனி ஆட்சியையே—அதிலும் முக்கியமாக, நம் தூரகிழக்கு ஆட்சியை-குறைகூறுவது வழக்கமாகிவிட்டது. ஹாங்காங்கும், சிங்கப்பூரும் 100 வருஷங்களுக்கு முன் பொட்டலாக இருந்தன. பிரிட்டிஷ் சர்க்காரின் நியாயமான ஆட்சி காரணமாக அங்கு பல நாட்டு மக்கள் வந்து மூலதனம் போட்டார்கள். பக்கத்து நாடுகளிலிருந்து தொழிலாளர்களும் ஆவலாக வந்தார்கள். வந்தவர்களெல்லாம் செல்வந்தராகி சந்தோஷ வாழ்வெய்தினர்கள். மலேயாவில் சில்லரை சமஸ்தானங்களின் கொள்கைகளும், தகராறுகளும் பிரிட்டிஷ் பாதுகாப்பின் விளைவாக முடிவுற்றன. மலேயா மக்களின் வாழ்க்கை முறையைக் குலைக்காதவகையில் ஐரோப்பியரும், சீனரும், இந்தியரும் சுதந்திரமாகவும் சந்தோஷத்துடனும், நிறக்கொடுமையின்றி ஒத்துழைத்து மலேயாவை அபிவிருத்தி செய்தார்கள்.

இந்தியா விஷயத்திலும் இதே மாதிரிதான். பிரிட்டிஷ் சேனைகளால் இந்தியாவை ஜயிக்கவில்லை. இந்தியாவிலுள்ள சுதேசத் துருப்புகளைக் கொண்டே, இந்திய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தோம். இதை இந்தியரும் விரும்பினர். இந்தியாவில் சில சுதேசித் துருப்புகளே அமைதியை நிலை நாட்டி வந்தனர்.

இந்திய சர்க்கார் ராணுவ உணர்ச்சி மிகுந்தது; யுத்தமுயற்சிக்காக ஏழை ஜனங்கள் மீதுள்ள சுமை தாங்க முடியாமல் அதிகரிக்கிறதெனச் சில வருஷங்களுக்கு முன் கூறிய பேர்வழிகள் இப்போது கூறுவதென்ன? அரசியல் மாறுதல் எதையாவது பிரிட்டிஷ் சர்க்கார் அறிவித்தால் கோடிக்கணக்கான ஆயுதபாணிகள் குதித்து விடுவரென அதே பேர்வழிகள் கூறுகிறார்கள்.

* * * *

ஜாவாவுக்குள் ஜப்பானியப்படை

“மேற்கு ஜாவாப் போரை நடத்த அதிக சுதந்தரம் பெறுவதற்காக டச்சுப்படைகள் பட்டேவியாவைக் காலி செய்துவிட்டதாக” உத்தியோக முறையில் வெளியிடப்பட்ட டச்சு ராணுவ அறிக்கை கூறுகிறது.

ஜப்பானிய சர்க்காரின் நியூஸ் ஏஜென்ஸிக்கு ஜாவாவிலிருந்து வந்த செய்தி கூறுவதாவது:—

ஜப்பானியத் துருப்புகள் பட்டேவியாவுக்குள் நுழைந்தன. ஜப்பானியர் பட்டேவியா நகரை வசப்படுத்திக் கொண்டது முதல் நகரில் அமைதி நிலவுகிறது. ஏறக்குறைய மேற்கு ஜாவா முழுவதும் ஜப்பானியர் வசமாகியிருக்கிறது. நேசதேசத் துருப்புகள் மற்ற விடங்களிலிருந்து வாபீஸ் பெறப்பட்டிருக்கின்றன. இப்போது ஜாவா தலைநகரம் எதிரிகள் முன்பு காலியாகிவிட்டது. டாக்டர் வான் மூக் ஆஸ்திரேலியாவுக்கு ஓடிவிட்டார்.

* * *

பாரிஸ் மீது பிரிட்டிஷ் குண்டு வீச்சு

பிரிட்டிஷ் விமானங்கள் மார்ச் 3-ந் தேதி இரவு பாரிஸிலுள்ள ராணுவத் தளவாட உற்பத்தி சாலைகளைத் தாக்கின. பாரிஸில் ஜெர்மன் வசமாயுள்ள பிலென்கோர்ட் பகுதியிலுள்ள ரேனல்ட் மோட்டார் தொழிற்சாலை மீது குண்டுகள் வீசப்பட்டன.

பிரும்மாண்டமான ரேனல்ட் மோட்டார் தொழிற்சாலை ஜெர்மனிக்காக யுத்த தளவாட உற்பத்தி செய்து வந்தது. அச்சு நாடுகளுக்காக யுத்த தளவாடங்கள் உற்பத்தியாகும் தொழிற்சாலைகளில் வேலை செய்தால் ஆபத்துக்குள்ளாவர் என்று பிரெஞ்சு மக்கள் ஏற்கெனவே எச்சரிக்கப்பட்டிருந்தனர்.

பிரான்ஸில் பல தொழிற்சாலைகள் ஜெர்மனிக்காக யுத்த தளவாடம உற்பத்தி செய்வதாயும், இதைத் தடுக்க வேண்டுமெனவும் பிரெஞ்சு மக்களிடமிருந்து லண்டனுக்குச் செய்தி கிடைத்தது.

பிரான்ஸ் மீது விமானத் தாக்குதல் செய்வதால் ஜெர்மனிமீது குண்டு வீச்சு குறைவாகாது. ஜெர்மனி பிரான்ஸ் இரண்டு நாடுகளிலும் தாக்க வேண்டிய



ஜனாதிபதி ரூஸ்வெல்டின் யுத்த ஆலோசனை சபை

அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் தமது யுத்த மந்திரி சபையில் தலைமை வகிக்கிறார். இந்த சபையில் முக்கிய மந்திரிகளும் மற்றும் சில பெரிய இலாகாத் தலைவர்களும் கூடியிருக்கின்றனர். (இ என். பி)



வாஷிங்டனில் விமானப் படை யெடுப்பு பாதுகாப்பு

அமெரிக்காவில் வாஷிங்டனில் வர்த்தக இலாகா கட்டிடத்தின் மேல் தளத்தில், விமானப் படையெடுப்பு நேர்ந்தால் அதை எதிர்த்து சமாளிப்பதற்காக பீரங்கிகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. (இ. என். பி)

விமானங்கள் பிரிட்டனிடமிருக்கின்றன. அச்சு நாடுகளின் உற்பத்தியை எங்கெங்கு தடுக்க முடியுமோ அங்கெல்லாம் தடுக்க நடவடிக்கைகளெடுத்துக் கொள்ளப்படும்.

* * * *

பிரிட்டிஷ் விமானப்படை முஸ்தீப்பு

"பிரிட்டன் ரஷ்யாவுக்கு அனுப்பும் விமானங்களின் எண்ணிக்கை வரவர அதிகரித்து வருகிறது. விமான பலம் சம்பந்தப்பட்டவரை ரஷ்யாவின் கை ஓங்க இது மிக்க உதவியாயிருக்கிறது." என்று பிரிட்டிஷ் விமான இலாகா மந்திரியான ஸர் ஆர்ச்பால்ட் ஸிங்ளேர் மார்ச் 4-ம் தேதி காமன்ஸ் சபையில் அறிவித்தார். விமான இலாகா செலவினக்கோரிக்கைகளை அவர் சமர்ப்பித்தார்.

"கூடிய சீக்கிரத்தில், கூடிய வரை அதிகமான விமானங்களைக்கொண்டு ஜெர்மனியைத் தாக்க உத்தேசித்திருக்கிறோம். ஹிட்லர் ரஷ்யா மீது வசந்த காலத்தாக்குதலை ஆரம்பிக்கையில், நமது குண்டு வீசும் விமானங்கள் ஜெர்மன் ஆயுதத்தொழிற்சாலைகளை மிகத் தீவிரமாகத் தாக்கும்.

இந்த யுத்த ஆரம்பத்தில் நமது விமானப் படைபலம் ஜெர்மன் பலத்தைவிட மிக்கக் குறைவாயிருந்தது. ஆனால் இப்போது பகலிலும் இரவிலும் போர் நடத்துவதில் நமது விமான பலம் நமது எதிரிகளின் கூட்டு பலத்தைவிட அதிகமாகி விட்டது.

பிரிட்டன் மிக ஆபத்தான நிலைமையில் தூரகிழக்குக்கு பெருவாரியான விமானங்களை அனுப்பியது. வழியிலேயே அவற்றில் சில நாசமாயின. கடும் போரில் பல அழிந்தன. எனினும் உதவிப்படைகள் மேன்மேலும் அங்கு போய்ச் சேர்ந்து கொண்டிருக்கின்றன.

ஜெனரல் ஆசின்லெக் லிபியாவில் முன்னேற ஆரம்பித்ததற்கு முன்னதாக உள்ள ஆறுமாத காலத்தில் நமது விமானப் படையும் கடற்படையும் மத்திய தரைக் கடலில் 1,75,000 டன் நிறையுள்ள எதிரிக் கப்பல்களை மூழ்கடித்திருக்கிறது" என்றும் ஸர் ஆர்ச்பால்டு ஸிங்க்ளர் தெரிவித்தார்.

* * * *

ருஷ்ய யுத்தம்

மார்ஷல் டிமோஷெங்கோவின் படைகளின் வலப்பாகம் ஜெனரல் ஷுகாவ் சேனைகளின் இடப்பாகத்துடன் சேர்ந்து கொண்டு, ஓரெலை வளைத்துக் கொண்டுவிட்டது. ஓரெலில் இரு ஜெர்மன் டிவிஷன்களிருக்கின்றன. ஓரெல் எச்சமயத்திலும் ரஷ்யப்படைகளால் தாக்கப்படக்கூடும்.

ஸோவியத் படைகள் வயாஸ்மாவிலிருந்து சில மைல் தூரத்தில் வந்துவிட்டன.

பதுங்கியடிக்கும் ரஷ்யர் மும்முரமாக வேலை செய்கின்றனர். சமீபத்தில் ஸ்மாலன்ஸ்க் பிரதேசத்தில் 1,074 ஜெர்மனியரை நாசம் செய்திருக்கின்றனர்.

மார்ச்சு 6-ம் தேதி 35 நாஸி விமானங்கள் அழிக்கப்பட்டன. மாஸ்கோவுக்கருகில் இன்று 3 நாஸி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என்று ஸோவியத் அறிக்கை கூறுகிறது.

கரேலிய முனையில் ஸோவியத் படைகள் குவிக்கப்பட்டிருந்தன. ஆனால் அவை பின்னிஷ் விமானப்படையால் சிதறடிக்கப்பட்டன என்று நாஸி அறிக்கை தெரிவிக்கிறது.

* * * *

ஜப்பானிய விமான குண்டு வீச்சு

ஜப்பானிய விமானங்கள் புரூம், விண்ட்ஹாம் என்ற இரு ஆஸ்திரேலிய நகரங்களைத் தாக்கின.

விமான நிலையங்கள் மீதும், தரையிலிருந்த விமானங்கள் மீதும் குண்டு வீசப்பட்டதாகவும் இரு நகரங்களிலும் சொற்ப சேதம் ஏற்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

* * * *

கெய்ரோவில் கைதிகள் ஊர்வலம்



லிபியாவில் பிரிட்டிஷாரால் கைது செய்யப்பட்ட எதிரிப் படையினர் கெய்ரோ கோட்டைக்குக் கொண்டு போகப்படுகின்றனர். (இ. என். பி.)

மதமும் மணமும்

ஸ்ரீமதி இந்திராநேரு விவாக நிச்சயதார்த்தத்தைப் பற்றி காந்தி ஜி ஹரிஜனில் பின்வருமாறு எழுதுகிறார்:—

இந்திராநேருவுக்கும் பிரோஜ் காந்திக்கும் கலியாணம் நிச்சயமானது பற்றி கோபத்துடன் பலர் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். பிரோஜ் காந்தி பார்ஸியாயிருக்கிறாரே என்ற ஒரு குற்றம் தவிர வேறெவ்வித குற்றமும் அவர்மீது சாட்டப்படவில்லை.

கலியாணத்தை உத்தேசித்து யாரும் மதத்தை மாற்றிக் கொள்ளக் கூடாதென்பது என் திடமான அபிப்பிராயம் உடையை கழற்றி எறிவது போல் மதத்தைக் களைந்து விடக் கூடாது.

இந்தக் கலியாணம் சம்பந்தப்பட்டவரை மத மாற்றப் பிரச்னை எதுவும் எழவில்லை. பிரோஜ் காந்தி பல வருஷங்கள் நேரு குடும்பத்தாரோடு வசித்து வந்தார். கமலாநேரு வியாதியாயிருக்கையில் அவளுக்கு சிச்ருஷை செய்துவந்தார். அவளுக்கு ஒரு மகன் போலிருந்தார் பிரோஜ் காந்தி. ஐரோப்பாவில் இந்திரா நோயுற்றிருந்தபோதும் உதவினார், இதிலிருந்து இந்திராநேருவுக்கும் பிரோஜ் காந்திக்கும் இயற்கையான சிநேகம் எழுந்தது, அதுவே பரஸ்பர வசீகரிப்பாகக் கனிந்தது. ஆனால் இருவரும் ஜவஹர்லாலின் சம்மதியின்றி மணம் புரிய நினைக்கவில்லை: இருவரின் சிநேகமும் திடமானதென்பதை அறிந்த பின்னரே ஜவஹர் சம்மதியளித்தார், காலக்ரமத்தில் இம்மாதிரி விவாகங்கள் சமூகத்துக்கே பயனளிக்கும்,

பரஸ்பரம் சகிப்புத் தன்மையை நாம் இன்னும் அடையவில்லை. சகிப்புத்தன்மை ஏற்பட்டு அதனால் பரஸ்பர மதிப்பும் ஏற்பட்டால், இம்மாதிரி கலியாணங்களை நாம் வரவேற்கலாம். அறிவை ஆதாரமாகக்கொள்ளாத எம்மதமும் வருங்கால சமூகமாறுதலில் பிழைக்க முடியாது. வருங்கால சமூக மாறுதலில் மனிதர்களின் ஒழுக்கம் தான் அவர்கள் தரத்துக்கு அறிகுறியாகுமே தவிர, பிறப்பும் பட்டமும் பயன் தரா.

ஜொராஸ்டர், மோஸஸ், கிறிஸ்து, மகம்மது, நானக் முதலிய தீர்க்கதரிசிகளின் படிப்பினை இதுதான்; 'கோபமும் வெறுப்பும் இல்லாமலிருப்பவர் கடைப்பிடிக்கும் மதமே உண்மை மதமென்றறி''. மதம் அத்தன்மையதாயில்லாவிட்டால் அது அழியும்

பிரிட்டிஷ் மந்திரி கண்ட காட்சி

பிரிட்டிஷ் வெளி நாட்டு மந்திரி மிஸ்டர் அந்தோனி ஈடன் க்ளிம் எனுமிடத்திற்கருகே எம். மெய்ஸ்கியுடன் விஜயம் செய்தார். தடி கம்பிளி போர்த்திருக்கும் அவர் சில ஜெர்மன் பிரேதங்கள் கிடப்பதைப் பார்க்கிறார். இங்கு பனி அதிகம்.

பித்தார். இந்த சந்தர்ப்பத்திலும் பின்பு இம்மசோதா விவாதத்திற்கு வந்த காலங்களிலும்; சட்டசபை மெம்பராக இருந்த பண்டித மதன்மோஹன் மாளவியா, தமது கக்ஷியை மிகுந்த சாமர்த்தியத்துடன் எடுத்துக் காட்டினார்; குற்றம் கூறுவோருக்குத் தகுந்த பதில் தந்தார் கடைசியாக சட்டம் தயாராகி சட்டசபையில் நிறைவேறியது. ஸர் கங்கா ராம் பஹதூர் கட்டிடம் கட்டுவதற்கான திட்டங்களைத் தயாரித்துக் கொடுத்தார்: கட்டிட வேலையும் வெகு விரைவில் ஆரம்பமாகியது.

அஸ்திவாரக் கல் நாட்டு விழா

1916-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 4-ம் தேதி காசி ஹிந்து சர்வ கலாசாலையின் அஸதி வாரக்கல் நாட்டு விழாவை ராஜப்பிரதிநிதி ஹார்டிஞ்ஜ் பிரபு நடத்தி வைத்தார்: இதற்காக ப்ரும்மாண்டமான பந்தல் போடப்பட்டது, வைதீகக் க்ரியைகளும் நிர்விக்னமாக நடந்தேறின. பண்டித மாளவியாவை இவ்விஷயத்தில் உத்சாகப்படுத்திய மஹாமஹோபாத்யாய பண்டித ஆதித்ராம் பட்டாசார்யர் வேதோக்தப்படி எல்லாம் நடப்பதற்கு உதவினர். பஹீபதிகளும் மஹாஜனங்களும் இவ் விழாவை அலங்கரித்ததுடன், மஹாத்மா காந்திஜியும் அச்சமயம் பிரசன்னராக இருந்தார். "ஹிந்துஸ்தானத்தின் பல பாகங்களிலிருந்தும் இவ்வளவு பிரபலஸ்தர்கள் இங்கு கூடியிருப்பதேன்? இவர்கள் இங்கு ஆகர்ஷித்தது எது? அது இதோ என் முன் நிற்கும் சலவைக் கல் தான்; பார்க்க மிகவும் எளிமையானது; ஆனால் சென்ற 5 வருஷ காலத்தில் நான் நாட்டியவற்றைக் காட்டிலும் வேறுபட்டது: அது பார்ப்பதற்கு மிகவும் சாதாரணமாகத் தோன்றினாலும் அதன் சூக்ஷ்மம் மிகவும் அதிகம்: இந்தியாவில் கல்வி முறையில் ஏற்பட்டிருக்கும் ஒரு மாறுதலை அது சூசிப்பிக்கிறது. இந்தியர்கள் ஆவலுடன் கோரி வந்த லக்ஷியம் பூர்த்திபெற இந்த அஸ்திவாரக் கல் உதவும் உயர்தரக் கல்வி அபிவிருத்திதவிர இன்னும் அதிகமான சேவையையும இந்த சர்வ கலாசாலை சாதிக்கப் போகிறது, இதன் அமைப்பு விதங்களில், நாம் இந்தியாவில் இது வரை கண்டிராத சில அம்சங்களைப் பார்க்கிறோம்: அதாவது இது பாடபோதனையுடன் வித்தியார்த்திகள் தங்கியிருக்கவும் வசதியளிக்கிறது. மற்ற சர்வகலாசாலைகள் பரீக்ஷைகளைமட்டும் நடத்தி வருகின்றன. இந்த அம்சங்கள் புதியவை என நான் கூறுவது தப்பிதமாகக்கூடும்: பண்டைய காலத்தில் இந்து நாம் தற்காலம் காணும சர்வ கலாசாலை இருந்தது எனக் கூறமுடியாதாயினும், இதற்கு ஏறககுறைய நிகரான ஸ்தாபனம் இங்கு அக்காலத்திலும் இருந்ததுண்டு. வஸிஷ்டரையும் கௌதமரையும் பல்லாயிரம் சிஷ்யர்கள் அண்டியதாக அறிகிறோம். பல சிஷ்யர்கள் பய பக்தியுடனும் வினயத்துடனும் தங்கள் குருவை அண்டிப் படிப்பது தான் பண்டைய இந்தியக் கல்வி முறையின் அம்சமாகும்: அவர்கள் குருவிடம் ப்ரவசனம் பண்ணியதுடன் தங்களது வாழ்க்கைகளையும் அவரது உதவியினால் உருப்படுத்தினர்; ஆச்சார்யர்களது நீதி நெறிகளை கடைப் பிடித்து நல் நிலை எய்தினர்" இந்த சம்பவத்தைக் குறிக்கும் சாஸனத்தில் பின் கண்ட சுலோகங்கள் வரையப்பட்டன.

माघे शुक्ले प्रतिपदि तिथौ
शुक्रवारे शिलाया
न्यासं काश्यां युगनगमहीसंमिते
विक्रमाब्दे।
प्राच्यं धर्मं परिकलयितुं विश्वविद्यालयस्या
काषीत् सम्राट् प्रातिनिधि रो
लार्ड् हार्डिङ् सुकीर्तिः॥

சர்வகலாசாலை ஆரம்பம்

இந்த சர்வகலாசாலையின் முதல் அத்யக்ஷராக மைசூர் மஹாராஜா நியமிக்கப்பட்டார்; ஸர் சுந்தர்லால் முதல் உப அத்யக்ஷராக இருந்தார். இரண்டுவருஷ காலம் தான் ஸர் சுந்தர்லால் பதவி வஹித்தார்; அவரது அகால மரணம காசி சர்வகலாசாலைக்குப் பெருத்த நஷ்டமாகியது. அவருக்கப்புறம் ஸர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் ஒரு வருஷ காலம் உப அத்யக்ஷர் பதவியை வஹித்தார். அவரது காலத்தில், 1919-ம் வருஷம் ஜனவரி மாதம், இந்த சர்வ கலாசாலையின் முதல பட்டமளிப்பு விழா நடைபெற்றது. மைசூர் மஹாராஜா இதற்கு தலைமைவகித்தார். அச்சமயம் அவர் பேசியதன் சாரம் வருமாறு; "இந்தியா தனது உரிமைகளைத் தானே நிர்ணயித்துக் கொண்டு அதற்கேற்ப சொந்த முயற்சி செய்யமுடியும் என்பதற்கு இந்த சர்வகலாசாலை சிறந்த நிரூபணமாகும் ஹிந்து இந்தியாவின் உட்கருத்தை எடுத்துக் காட்டி அதன் மேன்மையான சம்பிரதாயங்களையும், உயர்தர லக்ஷியங்களையும், பக்திமயமான கலா ரசத்தையும் பிரபலப்படுத்த வேண்டும். இது பொதுஜனங்களது முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது; ஸர்க்கார் ஸ்தாபனம் மாதிரி அல்ல. பழம் பெருமை பொருந்திய ஹிந்துக்களாகிய நாம், பழைய நாளைய சம்பிரதாயங்களைப் பின்பற்றுவதும், நவீனமானவற்றைவிரோதிப்பதும்தான் தேசபக்தி என்று தப்பாகக் கருதக்கூடாது; பிற நாடுகளுடன் வர்த்தகம் பண்ணுவதால் ஒரு தேசமும் கெடுவதில்லை; பிற நாகரிகங்களுடன் தொடர்பு கொள்வதால் எந்த நாகரிகமும் க்ஷீணிப்பதில்லை. இந்த காசி சர்வகலாசாலை பல தேசங்களில் பல காலங்களில் நிலவிய நல்ல விசேஷங்களைக் கிரஹித்து, தற்கால முற்போக்குக்குப் பின் வாங்காமல் இருந்து, இந்திய மக்கள் சிறப்பெய்துவதற்கு உதவும் என நம்புகிறேன், ஹிந்துக்களின் விசேஷ மதிப்புக்கு உரித்தாவதுடன், இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் பல மதத்தாரையும் இது வரவேற்கும் என்பது எனது ஆசை."

சர்வ கலாசாலையின் முதல் அத்யக்ஷராக இருந்த மைசூர் மஹாராஜா.

பெருமக்கள் பாராட்டு

1921-ம் வருஷம் டிசம்பர் மாதம் சர்வ கலாசாலை லார்ட் ரெக்டர் பதவி வகித்த ராஜப்பிரதிநிதி ரெடிங் பிரபு இங்கு விஜயம் செய்து தமது பாராட்டைத் தெரிவித்தார். அப்போது பண்டித மதன் மோஹன மாளவியா உப அத்யக்ஷர் பதவியைவஹித்தார். பண்டித மாளவியா 1919 முதல் சென்ற வருஷம் வரை இந்த சர்வ கலாசாலையில் இந்தபிரதான பதவியை நிர்வகித்து செய்த சேவை மிகவும் விஸ்தாரமானது. 1921-ம் வருஷம் சர்வகலாசாலை கட்டிடத்தை அப்போது வேல்ஸ் இளவரசராக இருந்த வின்ஸர் பிரபு திறந்து வைத்தார். அப்போது 5 கலாசாலைகள் தோன்றின. மாணவர் தொகையும் 1000 இருந்தது. 1924ம் வருஷம் நடந்த பட்டமளிப்பு விழாவில் பரோடா கெய்க்வார் தலைமை வகித்து பின்கண்டபடி பேசினார். "ஒரு ஹிந்து சர்வகலாசாலைக்கு காசியைவிட தகுதியான வேறு எந்த இடம் இருக்க முடியும்? இங்குதான் ம்ருகதாவத்தில் புத்தபிரான் தமது உபதேசத்தைப் பண்ணினார். பிறகு அவர் ஸ்தாபித்த மதம் எங்கும் பரவியது. சங்கராச்சாரியார் காசிக்கு வந்து மாயாவாதத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தார். இன்றும காசிக்கு, திபெத், சீனா, ஸியாம், பர்மா, இலங்கை முதலிய இடங்களிலிருந்து யாத்ரீகர்கள் ஆத்ம த்ருப்திக்காக வந்து குவிகின்றனர். காசியைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் பாழடைந்த தோற்றத்தைக் கண்டவர், ஒவ்வொன்றும் ஒரு பெரிய சரித்ரம் கொண்டது என்பதை உணருவர். காசி தான் நமது பண்டைய பெருமையைப் பிரகாசப்படுத்துகிறது; பல நூற்றாண்டுகள் மறைந்தும் காசிக்குக் கேடு இல்லை; காசியும் நிலைத்திருக்கிறது. ஹிந்து மதமும் தலை தூக்கி நிற்கிறது. இந்த சாஸ்வதமான நகரில் மறுபடியும் ஞானவாபி ஏற்பட்டு, எக்காலமும் வற்றாத ஊற்றுடன் இருக்கும் என எதிர்பார்க்கிறேன். பரமாத்மா இந்த விச்வ வித்யாலயத்தைப் பாதுகாப்பாராக!" 1925-ம் வருஷம் ஜுலை மாதம் ஐக்ய மாகாண கவர்னர் ஸர் வில்லியம் மாரிஸ் இங்கு விஜயம் செய்து சர்வ கலாசாலையில நாளுக்கு நாள் தோன்றி வரும் அபிவிருத்தியைப் பெரிதும் சிலாகித்தார். இரண்டு வருஷங்களுக்கப்புறம் ராஜப் பிரதிநிதி இர்வின் பிரபு "ஸயாஜி ராவ் கெய்க்வாட் லைப்ரரி"யைத் திறந்து வைத்தார், அப்போது அவர் ஹார்டிஞ்ச் பிரபு எதிர்பார்த்தபடி

சர்வகலாசாலை அத்யக்ஷர் பிகனீர் மஹாராஜா

கும்பமேளா விழாவின் போது பிரயாகையில் எடுத்த படம். இந்த விழாவிற்காக ஏராளமான ஜனத்திரள் கூடியிருப்பதை படத்தில் காணலாம்.

என் ரயில் பிரயாணம்

ஸ்ரீமதி
விஜயலக்ஷ்மி பண்டிட்
எழுதியது

"சௌந்தர்யமும் சௌர்யமும் சேர்ந்த நாடு! சிறப்புடன் சேவை செய்த சிரேஷ்டர்களை சிருஷ்டித்த நாடு: மானமிழப்பதைவிட மரணமே மேல் என மதித்த மேலோர் மலிந்த நாடு! பல்லாண்டுகளுக்குப் பின்பும் நாட்டிற்குப் புத்துயிர் அளிக்கும் பழக்க வழக்கங்களைப் பாதுகாத்து வந்த புத்ரிகா ரத்னங்களைப் பெற்றெடுத்த பூமி! தற்போது இந்தியா பிரிந்து நிற்கிறது. சகோதரர்களிடையே சண்டை. சுய நலத்தைக் கருதியே ஒவ்வொருவரும் வாழ்கின்றனர்! ஸ்திரீகளின் அறியாமையும் குருட்டு நம்பிக்கையும் தான், நம் ஜாதி க்ஷீண தசையடைந்திருப்பதற்கு முக்கிய காரணம்" என்கிறார் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட். ஒரு ரயில் பிரயாணத்தின் போது தம் உள்ளத்தில் தோன்றியவற்றை எடுத்துரைத்திருக்கிறார் அவர் இக்கட்டுரையில். நம் நாட்டுக்கு அழிவு இல்லை என்பதே அவரது நம்பிக்கை.

அதிக குதூஹலம்

நான் ஹரித்வாரத்திற்குப் பிரயாணமானேன்: அங்கு கும்பமேளாவுக்காக இந்தியாவின் நாலு பக்கங்களிலிருந்து ஏராளமாக ஜனங்கள் திரண்டு கொண்டிருந்தனர்: எனக்கும் அங்கு போய்ச்சேர அதிக ஆவல். நான் அங்கு போவதற்காக திட்டம் போடுவதும் அதைக் கலைப்பதுமாகவே இருந்து வந்தேன்: அநேகரை அங்கு வரும்படி வருந்தியழைத்தேன்: முதன் முதல் ஒரு விருந்துக்குப்போகும் குழந்தைக்கு எவ்வளவு குதூஹலம் இருக்குமோ, அவ்வளவும் எனக்கும் இருந்தது: விழா மட்டுமே என்னை அவ்விடம் ஆகர்ஷிக்கவில்லை. பிரயாகையில் நான் அநேகம் மேளாக்களைப் பார்த்து மகிழ்ந்திருக்கிறேன்: என் மூதாதைகளில் ஒருவர் பயபக்தி மிகுந்த பிராம்மண சிரேஷ்டராக இருந்திருக்க வேண்டும்: அவரது ரத்தம் என் தேகத்திலும் ஊறி, என் உள்ளே, ஒரு வித உணர்ச்சியைத் தூண்டியெழுப்பிக்கொண்டிருந்தது: ஸதி குண்டத்தில் தீர்த்தமாடவேண்டும் என்ற என் ஆசையை, என் நவீனப் படிப்பினாலும் தடுக்க முடியவில்லை: இந்த புனிதமான தடாகத்தில் தான், அவமதிக்கப்பட்ட ஸதி, தன் பதியின் கௌரவத்தை நிலை நாட்டத் தனது உயிரையும் தியாகம்செய்ததாகப் புராணம் கூறுகிறது.

என் மனோநிலை

ஆகவே நான் இந்த பிரயாணத்தைப் பற்றியே கனவு கண்டு திட்டம் போட்டு வந்தேன். ஆனால் என்ன பலன்? "நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கிறது". நான் லக்ஷ்மணபுரியை விட்டுப் புறப்பட வேண்டிய தினம், என் பிரயாணத்திற்குத் தடையாக முக்கியமான மந்திரி ஸபைக் கூட்டம் ஒன்றும், மற்றும் இதர சில அலுவல்களும் தோன்றின. இதனால் எனக்கு ஏமாற்றம் ஏற்பட்டதா? எனக்கு ஏற்பட்ட மனோநிலையைத் தெரிவிப்பதற்கு "ஏமாற்றம்" என்ற பதம் மிகவும் சாமான்யமானது. என் மனம் புண்பட்டது: எனக்கு அவமானம் மேலிட்டது. எனக்கு கோபமும் பொங்கியெழுந்தது: இவ்விதம், இருந்த எனக்கு ஈஸ்டர் விடுமுறையின் போது ஒருவரிடமும் சொல்லாமல் முஸோரிக்குப் போய்விடவும், அங்கிருந்த என் பெண்களுடன் அமைதியாகச் சில நாட்கள் தங்கியிருக்கவும், யோசனை உதயமாகியது.

அவசரம் அவசரமாய்

புதன் கிழமை பிற்பகல்: அவசரம் அவசரமாகப் புறப்பட ஆயத்தமானேன்: எதோ சில துணிகளைப் பொறுக்கி மூட்டை கட்டி வைத்தேன்: ஆபீஸில் அதிக நேரம் நான் தாமதிக்க நேர்ந்தால், நான் அங்கிருந்து நேராக ஸ்டேஷனுக்கு வந்து விடுவதாயும், என் மூட்டைகளையும் ஸ்டேஷனுக்கே அனுப்பும்படியாகவும் வீட்டில் கூறியிருந்தேன். மந்திரி சபைக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போது, என் மனம் எங்கோ சஞ்சாரம் செய்து கொண்டிருந்தது: மலைகளைப் பற்றிய எண்ணம் முளைத்தது: மந்திரிகள் கூடும் அறையிலும் பரிமளமான சுகந்தத்தையே நான் நுகர்வதாகத் தோன்றியது. கடைசியில் கூட்டம் கலைந்தது: ஒருவரிடமும் விடைபெற்றுக் கொள்ளாமல் கீழே விரைவில் இறங்கி வந்து எனக்காகக் காத்துக் கொண்டிருந்த மோட்டார் காரில் ஸ்டேஷனுக்குப் போனேன். ரயில் புறப்பட்ட பின்னர் தான், எனது உள்ளம் சற்று ஆறுதலடைந்தது. கடைசியாக நான் ஆசைப்பட்ட இடத்திற்குக் கிளம்பி விட்-

கும்பமேளா விழா சமயத்தில் மற்றொரு காட்சி, சில ஸாதுக்கள் யானைமீது ஊர்வலம் போவதைப் படத்தில் காணலாம்.

டேன்: எனக்கு எதுவும் எதிராக நிற்கவில்லை: என் குழந்தைகளின் சிரிப்பில் நானும் சேர்ந்து கொண்டு சில தினங்கள் சுகமாய் சந்தோஷிக்கலாம் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. என் இடத்தில் அமர்ந்துகொண்டு ஒரு பத்திரிகையைப் புரட்டிப் பார்த்தேன்: சிரத்தையுடன் படிக்கவும் முயற்சித்தேன்: பொழுது வெகு வேகமாகப்போயிற்று: இரவும் கவலையின்றி கழிந்தது: மறு நாள் விடியற்காலை விழித்துக்கொண்டபோது ரயில் ஹரித்வாரத்தை சமீபிப்பது தெரிந்தது. மறு க்ஷணம், முந்திய நாள் மாலையிலிருந்த சாந்தி மறைந்தது: ஒரு விதமான படபடப்பு பிடித்தது: எந்த கோபத்தை அடக்கி வைத்ததாக நான் நினைத்தேனோ, அது பீறிட்டெழுந்தது. ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக்கொண்டே வந்தேன்: ரயிலும் ஹரித்வாரம் வந்துசேர்ந்தது: இங்கு மங்கும் நடமாடும் ஒரே ஜனத்திரள் மயமாக பிளாட்பாரம் இருப்பதைக் கண்டேன்.

கங்கா தீர்த்தம்

ஸ்நான தினம் முடிவாகிவிட்டது: ஆகவே ஜனங்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்: இந்தியாவின் நான்கு திசைகளிலிருந்தும் ஆயிரக்கணக்கில் மக்கள் அங்கு குழுமியிருந்தனர்: பிரயாணிகள் வண்டி ஒவ்வொன்றிலும் ஸ்திரீ புருஷர்கள் நுழைந்தனர். பற்பல பாஷைகள் பேசப்பட்டதால் எல்லாம் ஒரே கலவரமாக இருந்தது: அவர்களிடம் வித விதமான மூட்டை முடிச்சுகள் இருந்தன: மிகப் பவித்திரமான கங்கா தீர்த்தம் பிடித்து, அரக்கினால் பத்திரமாக மூடப்பட்ட பித்தளை லோட்டாக்கள் அவர்களிடம் இருந்தன: இதை அவர்கள் இத்தேசத்தின் பல பாகங்களுக்கும் கொண்டு போய், நோயால் வருந்தும் போதோ, அல்லது கவலையால் மெலிந்து வரும்போதோ உபயோகிப்பார்கள்.

பிரயாணப் பேச்சு

இதர வண்டிகளில்போல், நான் இருந்தவண்டியிலும் அநேகர் ஏறிக்கொண்டனர்: இவர்களுள் ஒருவர் பஞ்சாபி; அவர் ஒரு யுவர்: தமது பத்திரிகைக்கு மேளாவைப்பற்றி எழுதுவதற்காக முதல் நாள் அங்கு போயிருந்தவர்: ஆகவே அவர் பேச்சுக்குக் குறைவில்லை. எனக்கு இந்தப் பேச்சில் ருசிதட்டவே இல்லை. ஜன்னல் வழியாக ஜனசஞ்சாரத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தேன். ரயிலும் புறப்பட்டது: முதலில் மெதுவாக ஊர்ந்து சென்றது. ஆகவே வெளியே எட்டிப்பார்த்து தெருக்களில் இருந்த ஜனக்கூட்டத்தையும், நதியின் பிரவாகத்தையும், அதன் தீரத்தில் இருந்த கோவிலையும், அதன்மீது கட்டப்பட்ட பாலத்தையும் கவனிக்கமுடிந்தது. மேலும் மேலும் போகப் போக, ரஸ்தாக்களிலும் பஜார்களிலும் இருந்த ஜனத்திரள் மிகவும் அடர்த்தியாகவே காணப்பட்டது. ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் ஸ்திரீ புருஷர்கள் வந்து கூடியிருந்தனர்: நூற்றுக் கணக்கில் இங்கு மங்கும் ஒருவர்மீது ஒருவர் மோதிக்கொண்டு புகுந்து சென்றனர்: வானவில் பூமியில் விழுந்து விட்டதோ என்று எண்ணும்படியாக பலவித வர்ணங்களுடன் ரஸ்தாக்கள் சோபித்தன: ஜனங்களும் எவ்வளவு குதூஹல உடையணிந்திருந்தனரோ அதே மாதிரி மனோல்லாஸமாகவும் காணப்பட்டனர். இதைப்பற்றி நான் சிந்திக்கலானேன்! இந்த நூற்றுக்கணக்கான பேர் எங்கிருந்து வந்தனர்? இவர்களை ஹரித்வாரத்திற்கு வலித்திழுத்த சக்தி எது?—இவ்வாறு யோசனையிலாழ்ந்திருக்கும் போது, திடீரென எங்களுடன் பிரயாணம் செய்த அந்த இளைய நண்பர் என் கவனத்தைக் கவர்ந்தார். அந்த விழாவைப்பற்றிய தமது கருத்துகளை அவர் தெரிவித்துக்கொண்டிருந்தார்: முந்திய நாள் ஸ்நானத்திற்காக ஊர்வலமாகச் சென்ற "நாக சாதுக்"களை அவர் கடுமையாகக் கண்டித்துப் பேசினார்.

நண்பரின் கண்டனம்

"இதைப்போன்ற வெறுக்கத்தக்க காட்சியை நான் இது வரை கண்டதில்லை. ஹரித்வாரத்தெருக்களில் நிர்வாணமாகப் போய், கீழ்த்தர உணர்ச்சியை எழுப்பும் இந்த புருஷர்கள், அலக்ஷியமாக ஊர்வலம் செல்வதும், தாங்கள் நிர்வாணமாயிருக்கும் காரணத்தைக் கொண்டே ஆயிரக்கணக்கான மக்கள் தங்களை யோகிகள் என்று நினைத்து ஆதரிக்கிறார்கள் என்ற எண்ணத்துடன் அதிகாரிகளையும் புறக்கணிக்கத் துணிவதும் மிகவும் விரஸமானவை" என்று அந்த பஞ்சாபி நண்பர் அடுக்கிக் கொண்டே போனார். அதற்கப்புறம் அவர். "அந்த ஸ்திரீகள்—அப்பாடா, அவர்கள் இன்னும் மோசம்" என்று கூறியபோது அவரது தேகம் முழுதும் ஒரு நடுக்கம் எடுத்தது. வயது முதிர்ந்த ஸ்திரீகளும், யுவதிகளும், பணக்காரிகளும், பிச்சைக்காரிகளும். இந்த அயோக்கியர்களது காலடிகளில் வீழ்ந்து, இந்த பரம பரிசுத்தமான சாதுக்களின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக முரட்டுத்தனமாய்ப் போட்டியிடுவதை நான் மறுபடியும் பார்க்கமாட்டேன் என்றே நம்புகிறேன்" என்றார் அவர் மேலும்.

நான் மறந்தது

ஜன்னலுக்கு வெளியே பார்ப்பதை நிறுத்திவிட்டு திடுக்கென்று தற்கால நிலைமையைப்பற்றி சிந்திக்கலானேன். மக்களின் ஆர்வத்தைக் குறிப்பிடும் காட்சிகளைக் கொண்டு, நான் மாயக் கனவு கண்டு வருகையில், ரோஜாப்பூவில் முள் இருப்பதை நான் மறந்து விட்டேன்: அது எனக்கிப்போது நினைவுக்கு வந்தது. ஜனக் கூட்டத்தைப் பார்ப்பதை நிறுத்தினேன்: என் உள்ளத்தில் கண்ட அத்புதக் காட்சிகள் களிப்பூட்டுவதும் உடனே நின்றது: அடிமைப்பட்டு ஏழ்மையில் உழன்று, அவதியுறும் மக்களின் ஞாபகமே என் முன்னெழுந்தது: திடமும் கட்டுப்பாடுமற்ற உள்ளங்களையும், அதற்கனுகுணமாய் திடமும் பயிற்சியுமற்ற தேகங்களைக் கொண்டவர்களைப் பற்றியே என் மனம் எண்ணலாயிற்று. இந்தியா இத்தகைய தாழ்மை நிலையை அடைந்திருப்பதா?

நாட்டின் பெருமை

சௌந்தர்யமும் சௌர்யமும் சேர்ந்த நாடு: சிறப்புடன் சேவை செய்த சிரேஷ்டர்களை சிருஷ்டித்த நாடு: மானமிழப்பதைவிட மரணமே மேல் என மதித்த மேலோர் மலிந்த நாடு: பல்லாண்டுகளுக்குப் பின்பும் நாட்டிற்குப் புத்துயிர் அளிக்கும் பழக்கவழக்கங்களைப் பாதுகாத்துவந்த புத்ரிகா ரத்னங்களைப் பெற்றெடுத்த பூமி! தற்போது இந்தியா பிரிந்து நிற்கிறது! சகோதரர்களுக்கிடையே சண்டை! சுயநலத்தைக் கருதியே ஒவ்வொருவரும் வாழ்கின்றனர். ஸ்திரீகளின் அறியாமையும் குருட்டு நம்பிக்கையும் தான் நம் ஜாதி க்ஷீணதசையடைந்திருப்பதற்கு முக்கிய காரணமாகும்! எனக்கு துக்கம் தாங்கமுடியவில்லை: ரயிலின் வேகம் அதிகமாக அதிகமாக என் இதய துடிப்பும் சக்கிரச்சுழலும் ஒத்திருப்பது போலவே தோன்றியது: இந்தியா அழிந்துவிடும் என்று என்னிடம் சொல்வது போலும் இருந்தது.

புதிய நம்பிக்கை

வெளியே வெகுதூரத்தில் நீலவானை எட்டிநிற்கும் மலையுச்சிகளைக் கண்டதும் தான் என் உள்ளத்தில் ஒரு புதிய நம்பிக்கை உதயமாகியது. இந்தியாவுக்கு அழிவு ஏது என்ற எண்ணம் மேலோங்கியது. நம் முன்னோர்களின் நம்பிக்கை, தைர்யம், அன்பு, தியாகம் இவை மூலம் உருப்பெற்றது நம் இந்தியா தேசம். அவை நம்மிடமும் இருக்கின்றன. சச்சரவுகள் இருந்தபோதிலும் ஒற்றுமை பாவமும் அதிகம் தான். அறியாமை இருந்தபோதிலும் ஞானத்திற்குக் குறைவில்லை. ஆனால் நாட்டில் நிலவிவரும் மூட நம்பிக்கை கல்விப் பிரசாரத்தினால் விலகி வருகிறது என்று கூறுவது தவறு. நாம் தற்போது பிற நாடுகளுக்கும் பின்னடைந்திருக்கலாம்: பொழுது புலர்கிறது: உதயத்தின் பிரகாசம் சோர்வினால் வாடியிருப்பவர்களையும தட்டியெழுப்பி உத்சாகப்படுத்துகிறது. இவ்வாறு நான் நினைத்தது தான் எனக்கு அதிக மகிழ்ச்சியை உண்டுபண்ணியது. இந்தியா நீடித்திருக்கும்: அதன் எதிர்காலம் மிகவும் சோபிக்கும்—இவ்விதம் எண்ணி வந்த எனக்கு திருப்தி தரும் விதமாக ரயில் வண்டியின் போககும் மாறி, இந்தியா நீடித்திருக்கும் என்று உரைப்பது போல் எனக்குத் தோன்றியது.



அடுத்த வாரம் : ராஜீய வாழ்க்கையில் ஸ்திரீகளுக்குரிய பங்குப் பற்றிய கட்டுரை பிரசுரமாகும்.

தராசு

ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

★

வி. வி. ஸ்ரீனிவாஸய்யங்காரை நினைத்தால் போதும்! மனதிலே தனி எழுச்சி தோன்றுகிறது லோகத்திலே சுக துக்கங்கள் சகஜம். சுக துக்கங்களை சமமாகப் பாவிப்பது மாத்திரம் சிரமம். ஞான வைராக்கியம் வேண்டும். அநுபவ பூர்வமாகவோ அநுக்கிரக விசேஷததாலோ வி. வி. யிடத்தில் சமபாவம் காணக்கிடக்கிறது. நினைத்த மாத்திரத்தில் அவரிடத்தில் ஒரு பாசமும் பற்றும் ஏற படும் காரணம் இதுதான்: முத்தண்ணு என்று அவருக்கு செல்லப்பெயர். எல்லாருக்கும் முத்தண்ணு. ஜாதி மத பேதமில்லை. முத்தண்ணு என்றால் பத்தாம் பசலி பேர் வழியென்று நினைக்க வேண்டாம். மாடப்பிள்ளை முடுக்கு அவரிடம் இன்னும் காணலாம். சலவை வேஷ்டி தான கட்டுவார். அகல ஜரிகை வேஷ்டியில் பிரியம் ஜாஸதி. மடிப்பு கலையாத உடுப்பு தரிப்பார். அதன் மேல படாடோபமான அங்கவஸ்திரம். தலையிலே சன்ன ஜரிகைக் கோடுள்ள நெட்டிப்பாகை. நெற்றியிலே கவர்ச்சியளிக்கும் நாமம். கையிலே தடி. புதிது புதிதாய் நாளுக்கொன்று கொண்டு வருவார். கையில் தடியேந்தி கண்ணாடியில் ஒரு முறை பார்த்து விட்டு, வெளியே கிளம்பும் போது அவரைப் பார்த்தால் யார் மனம் குளிராது? சுக புருஷன் என்று சொல்லலாம். அவர் கஷ்டம் அவருக்குத் தான் தெரியும். சமீபத்தில் தர்ம பத்தினியை இழந்தார். துக்கம் கேட்கும் சம்பிரதாயம் ஒன்றுண்டு. பத்து நாளைக்குள் ஒரு நாள் போக எண்ணியிருந்தேன்: கனைத்தேன் மறுநாளே அவர் கிளப்புக்கு வந்து விட்டார்! அவரைப் பார்த்ததும் எனக்கு முன்பு சற்று அசடு தட்டியது. ஒதுங்கப் பார்த்தேன்: பிடித்துக் கொண்டார் எனக்கு ஆறுதல் சொல்ல நீ காத்துக் கொண்டிருக்காயோ என்றார். எவ்வளவு அகம்பாவம் உனக்கு என்று மேலும் அடுக்கினர். பதில் சொல்ல நாவெழவில்லை. வருத்தம் அவர் அறியாதவரல்ல; வருத்தம் காட்டாதவர். சுக புருஷர் அல்ல; திட புருஷர். திடமுள்ளவர்களையே தெய்வம் சோதிக்கும். தாங்குமிடத்தில் தான் சுமை தங்கும். சோதனையில் சோகப் போக வில்லை. ஞானஸ்தர் என்பதற்கு என்ன தடை? பிராசீன கிரந்தங்களைப் படித்தவர். வேதாந்த விசாரணைகளில் விளக்கம் கண்டவர். வேத மோதியவர்களிடம் உறவு கொண்டாடுபவர். வைதிக சிரத்தை மிகுந்தவர். வைதிக மென்றால் குருட்டு நம்பிக்கையும் அசட்டுப் பிடிவாதமும் அல்ல! வேஷதாரிகள் ஏமாற்ற முடியாது: விஷயம் அறிந்தவர்: விதரணை தெரிந்தவர். கீதா காலக்ஷேபத்தில் பிரியம் அதிகம். இல்லற வாழ்வுக்கும் இக தர்மத்திற்கும் கீதோபதேசமே அவருக்குத் துணை. வயதேறியும் வாலிப பர்வம் மறையாததின் மர்மம் அதுதான்.

ஸ்ரீ வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்.

வி. வி.யும் வன்பாக்கத்தைச் சேர்ந்தவர். ஸர். வி. பாஷ்யமய்யங்காரையும் ஸர். வி. ஸி. தேசிகாச்சாரியையும் ஈன்ற ஊர். ஊர் மண் களி மண்ணல்ல. அது தெளிவு. நியாயம் வழங்கிய ஊர் என்றும் சொல்லலாம். ஏனெனில் மற்றிருவரைப் போல் வி. வியும் வக்கீல் தொழிலே நடத்தினர். யாருடைய தயவையும் பிரதீக்ஷிக்க வில்லை, அப்பீல் கோர்ட்டில் வேலை வரக்காத்திருக்க வில்லை. அசல் கோர்ட்டில் ஆரம்பித்தார். வியாபாரிகளின் நம்பிக்கையைப் பெற்றார் கிரிமினல் பிராக்டீஸும் செய்தார். குறுக்கு விசாரணையிலும் கக்ஷியாடுவதிலும் நல்ல பெயர். வருவாய்க்குக் குறைவில்லை. மதிப்பும் பெருகி வந்தது. ஹைகோர்ட் ஜட்ஜ் வேலையும் அவரைத் தேடி வந்தது. சொற்ப காலமே பதவியில் இருந்தார். தொழிலுக்கே மீண்டும் திரும்பினர். இன்றைக்கும் ஊர் ஊராக கேஸ் நடத்த சென்று வருகிறார். இதென்ன வினைகெட்ட வேலை, ஓய்வில்லையா, ஒழிவில்லையா என்று கேட்கலாம். கேட்கவே கேட்டேன். சம்பாதித்தே என் காலக்ஷேபம் நடக்கும்: நான் பெற்ற வரன் அது என்றார். ஆச்சர்யமான கூற்று! ஆனால் உண்மை அடங்கியது. ஆயுசு முழுவதும் சம்பாதித்திருக்கிறார். லக்ஷக்கணக்கில சம்பாதித்திருக்க வேண்டும் சேமிக்க வில்லை. சேமித்தாலும் நிலைக்காது என்ற நம்பிக்கை அவருக்கு. வருமானத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி வைத்தால் அது கரையும் வரையில் மேற்கொண்டு வேலை வருவதில்லை என்றார் என்னிடமே ஒரு முறை. மீதம் பிடிக்காமல் செலவழித்தால் செலவுக்குத் தட்டாமல் பணம் கிடைத்து வருவதாயும் சொனனார். இறைத்த கிணறு சுரக்கும் எனபார்கள். வி. வி. அதற்கு பிரத்யக்ஷ பிரமாணம் போலும்! அக்ஷய பாத்திர அநுக்கிரஹம்! பரத்தில் பற்றுள்ளவர்களுக்கு இதுவே யோகம் என்று சொல்லலாம். பிரபஞ்சத்திலே பணமே பிரதானம். பணம் சேர குணம் சரியும் என்பார்கள் பொருள் ஈட்டுவோர் அருள் இழப்பது அநுபவம். பணத்திற்கு தட்டில்லாமல், குணத்திற்கு மட்டில்லாமல் வாழ வரன்பெற்றால், வேறு எனனவேண்டும்? சம்பாதித்த செல்வமெல்லாம் செல்வேன் செல்வேனென்று சென்ற வண்ணமிருந்தது. இல்லையென்று சொல்ல வாய்வராது மன்னனுக்கு. கையிலில்லாவிட்டாலும் மறுபுறை வரவே வாய் பேசும் விதரணையறியாத் செலவு; உதாரித்தனமான செலவு; உருக்காணாத செலவு. சம்பாதித்தே செலவழித்தார். குறை கூற யாருக்கு வாயுண்டு?

முத்தண்ணுவிடத்தில் எனக்கு மாத்திரம் தீராத குறையொன்றுண்டு. அறிவும அநுபவமும் உள்ளவர்களுடைய சேவை நாட்டுக்கு இன்றியமையாதது. பராதீனப்பட்ட நாட்டிலே ராஜீய வாழ்வே பிரதானம். ராஜீய வரையறைகள் எந்தத் துறையிலும் முயற்சியையும் முற்போக்கையும் வழி மறிக்கின்றன. வியாபாரிகளும் காலக்கிரமத்தில் இதையறிந்து ராஜீய இயக்கங்களில் கலந்துவருகின்றனர். வக்கீல் தொழில் புரிவோர் ராஜீய சேவையில் ஈடுபடுவது சகஜம். காரணம் உண்டு. வக்கீல்கள் கக்ஷியாடத் தேர்ந்தவர்கள். வகாலத்து வாங்கிப் பேசுவது பிழைப்பு. நாட்டுக்கு வகாலத்து வாங்கிப் பேசுவதில் ஆச்சர்யமில்லை. முத்தண்ணு ஏன் முன் வரவில்லை? ஆச்சர்யமல்லவா அது! செல்வாக்குண்டு. சம்பாத்தியத்தில் குறைவில்லை. செலவழித்ததும் கணக்கில்லை. உருவான வேலை எவ்வளவோ செய்திருக்கலாம். செய்யவில்லை. அது போகட்டும். பொது வாழ்வில் பங்கெடுக்கப் பிரியப்படுவோருக்கு எவ்வளவோ துறைகள் உண்டு. நகர க்ஷேமத்தில் அக்கரை காட்டியிருக்கலாம்: நகர சபையில் நுழையவில்லை. வித்தியாபிவிருத்தியில் கவனம் செலுத்தியிருக்கலாம். சிரத்தை கொள்ளவில்லை. நாடகக் கலையொன்றில் தான் சற்று நாட்டம் சென்றது. பல வருஷங்களாக சுகுண விலாஸ சபையின் உப தலைவர். நடைச் சித்திரங்கள் பல எழுதி வெளியிட்டிருக்கிறார். அவை நடிக்கப்பட்டு பலர் ரஸித்திருக்கின்றனர். சுவை நிறைய பேசவும் எழுதவும் சக்தி வாய்ந்தவர்: சக்தியும் செல்வாக்குமிருந்தும் பொது மக்களுக்கு பயன்படவில்லையே யென்பது தான் என் குறை. சுபாவம் இடம் தரவில்லைபோலும். தன்னந்தனியே நிற்பவர். தன்னாலியன்றதைச் செய்பவர். கூட்டுறவிலும் கட்டுப்பாட்டிலும் நம்பிக்கையில்லை. எவ்வளவு செய்தும் நிறக்கவில்லை. வயதேறிவருகிறது. இன்று 71-வயது ஆகிறது. கட்டுத்தளராமல் கஷ்டமறியாமல் காலக்ஷேபம் நடக்கவேண்டுமென்பதே பலர். பிரார்த்தனை!

விளம்பரம் வேண்டும்

★

சிறு கதை - என். நாராயணன்

புதுப் பட்டம் பெற்றார் ராவ் ஸாஹேப் ராமாநுஜம். தமது பெயர் எப்படியாவது பிரபலமாக வேண்டும் என்று அவருக்கு ஆவல். பத்திரிகையில் வேலை பார்த்த தன் நண்பனிடம் இதற்காக அவர் போனார்: கணபதி ஒரு யுக்தி சொன்னார். முதலில் ராவ் ஸாஹேபுக்கு அதில் இஷ்டமில்லை: பிறகு என்ன நடந்தது? கணபதிக்கு ஏற்பட்ட ஆச்சர்யம் என்ன?

வாழ்க்கையின் விசித்திரங்களில் ஒன்று, நாளை வரப்போவது இன்று தெரியாமலிருப்பதுதான். இன்று சர்வ சாதாரணமாகவிருக்கும் பேர்வழி நாளைக்கு ரொம்ப பெரிய மனிதனாகி விடுகிறான்!

அதேமாதிரிதான் சென்ற டிசம்பர் மாதம் 31-ம்தேதி இரவுவரையில் சாதாரண ராமானுஜமாகவிருந்த என் நண்பர், மறுநாள் காலையில் கண் விழித்தெழுந்து உட்கார்ந்து, அன்றைய தினசரியைப் புரட்டிப் பார்த்தவுடன், தான் ராவ் சாஹேப் ராமானுஜமாகி விட்டதை உணர்ந்தார். மெய் மறந்தார். ஆனந்தத் தாண்டவமாடினார்!

ராமானுஜத்தின்— இல்லை, ராவ்சாஹேப் ராமானுஜத்தின் ஒரே ஒரு குறை என்னவென்றால்—அதையும் குறை என்று சொல்வதற்கில்லை; ஏனென்றால், அது எல்லோருக்கும் சகஜமானதுதான்!-அவருடைய டாம்பீகத் தன்மையே. அதுவே அவருடைய வாழ்க்கையின் லட்சியம். உலகம் தன்னைப்பற்றிப் பேச வேண்டும், புகழ வேண்டும், தன்னுடைய அபிப்பிராயங்களை எதிர்பார்த்து ஏங்கி நிற்க வேண்டும் என்பதே அவரது ஒரே ஏக்கம்.

தனக்குப் புதுப்பட்டம் கிடைத்திருப்பதை ஊருக்கு—இல்லை உலகிற்குத்-தெரியப்படுத்த வேண்டியதே தனது முழு முதற் கடமையாகுமெனத் தீர்மானித்துக் கொண்டார் ராமானுஜம். அதற்கேற்ற உபாயம் என்னவென்பதைப்பற்றி வெகு நேரம் மண்டையை உடைத்துக் கொண்டார். ஒரு வழியும் புலப்படவில்லை.

கடைசியாக கணபதியே கதி என்று தீர்மானித்தார். நான் விக்னேஸ்வரரைக் குறிப்பிடவில்லை. விளம்பர விற்பன்னனும், மாஜி தினசரிப் பத்திரிகை ஆசிரியருமான கணபதியைத் தான் சொன்னேன். அவன் கட்டாயம் தகுந்த யுக்தி சொல்வான் என்று ராமானுஜம் நம்பினர்.

'ராவ் சாஹேப் ராமானுஜம்' என்ற வார்த்தை பத்திரிகைகளில் அடிபடவும், ஜனங்கள் அவரைப் பற்றிப் 'பேசவும்' வேண்டுமென்பதே தான் வந்த காரணத்தின் முக்கிய அம்சம் என்பதை உள்ளங் கைக் கொய்யாக் காயாக விளக்கினர் ராவ் சாஹேப். கணபதி மௌனமாகக் கேட்டுக் கொண்டு வந்தான். அடிக்கடி தலையைச் சொறிந்து கொண்டான். மிகவும் தீவிரமான யோசனையில் ஆழ்ந்திருக்கும் பொழுது அவன் அம்மாதிரி தலையைச் சொறிவது வழக்கம்.

"ஒரு பெண் பாடசாலையாயைவது, அநாதை விடுதியையாவது உங்கள் பேரில் கட்டுங்கள். கீர்த்தி உங்களைத் தேடிக் கொண்டு வரும்" என்றான், கடைசியில். ராவ் சாஹேப் தலையை அசைத்தார்.

"ஹூம் ஹூம், அதெல்லாம் நடக்கக் கூடிய காரியமல்ல. நான் இதற்காகப் பணம் செலவு செய்யத் தயாராயில்லை என்பதை இப்பொழுதே தெரிவித்துவிடுகிறேன். வேறு ஏதாவது வழியிருந்தால் சொல்லும்" என்றார்.

கணபதி பல்லைக் கடித்துக் கொண்டான். "காசு செலவழிக்க மாட்டானாம். கீர்த்தி வேண்டுமாம்! தரித்திரப்பயல்!" என்று முணுமுணுத்துக்கொண்டான் தனக்குள்ளாக.

ஒருநிமிஷம் யோசித்து விட்டு, "ஏதாவது வாசனைத் தைலத்திற்காவது, பற்பொடிக்காவது, உமது நற்சாட்சிப் பத்திரத்தை அளியுமே!" என்றான்.

"என்னை ஒருவரும் கேட்கவில்லையே!"

"உம்மை எவ்விதத் திறப்பு விழாவுக்காவது ஒருவராவது கூப்பிடவில்லையா?"

"ஐயோ, அதுதானே இல்லை!"

"ஹூம்!" என்று சொல்லி விட்டு கணபதி பேனாவைக் கடித்தான். சுமார் 18 நிமிஷங்கள் யோசனை செய்துவிட்டு, ராவ்சாஹேபைப் பார்த்து, நிதானமாக "எனக்குத்தோன்றுவதெல்லாம் ஒரு வழிதான். அதன்படி நடக்க நீங்கள் தயாராக இருப்பீர்களா?..." என்றான்.

"சந்தேகமென்ன? சொல்லும் சீக்கிரம்!"

"இதற்கு அதிகப்பணம் தேவையில்லை. கொஞ்சம் சாமர்த்தியம் வேண்டும். அவ்வளவு தான்!......"

"என்னவென்றுதான் சொல்லித்தொலையும்" என்று ராவ் சாஹேப் கதறினர் ஆத்திரத்துடன்.

"நான்கு பயல்களுக்குத் தலைக்கு ஒரு ரூபாய் கொடுப்பதாகச் சொல்லும். ஒரு குறிப்பிட்ட இரவில் நீங்கள் தெருவில் தனியாக வருவதாகவும், அப்பொழுது அவர்கள் உம்மை வழிமறித்து, அடித்துத் தள்ளி, உம்மிடமிருந்த பணத்தையும் விலையுயர்ந்த மோதிரம். கடிகாரம் போன்ற வஸ்துக்களைத் திருடிக்கொண்டு போய்விட்டதாகவும் பாசாங்கு செய்ய வேண்டும். அவ்வளவே! மறுநாள், பாரும், தினசரிகளில்! 'ராவ் சாகிப்புக்கு ஆபத்து! திருடர்களால் தாக்கப்பட்டார்!' என்றெல்லாம் பத்தி பத்தியாக எழுதித் தள்ளுவார்கள். உம்முடைய போட்டோவைக் கூடப் போட்டாலும் போடுவார்கள்! பிறகு கேட்பானேன்!"

ராவ் சாகிப் உதட்டைப் பிதுக்கினார். "பேஷ்! விளம்பரத்தின் பொருட்டு நான் குத்தும் உதையும் காசு கொடுத்து வாங்கிக் கட்டிக் கொள்ளவேண்டுமா? போதும் அப்பேன், உன் யோசனை!"

"அடடா! அவர்கள் உங்களை நிஜமாக ஒன்றும் செய்யமாட்டார்கள். எல்லாம் பாசாங்கு தான்! நாம் சொல்லிக்கொடுத்த பிரகாரம் தானே அவர்கள் நடந்து கொள்ளப் போகிறார்கள்! இதில் பயமென்ன?"

ராவ்சாஹேப்எழுந்தார். 'உன் யோசனையைப்பற்றி யோசித்து விட்டுச் சொல்கிறேன்!" என்று சொல்லி விட்டு விடைபெற்றுக் கொண்டார். கணபதியின் யோசனை அவருக்குப் பெருத்த ஏமாற்றத்தைத்தான் அளித்ததாகத் தோன்றியது:

* * * *

இரண்டு நாட்கள் சென்று விட்டன. ராவ்சாஹேப்பிடமிருந்து எவ்விதத்தகவலும் கிடைக்கவில்லை.

மூன்றும் நாள் காலையில் வழக்கம் போல் தினசரியைப் புரட்டிக்கொண்டிருந்த கணபதி, மூன்றும் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் வெளியாகியிருந்த தலைப்பைப் பார்த்தவுடன் கண்களைத் துடைத்துக் கொண்டான். அவனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை!

'நடுத் தெருவில் திருட்டு! ராவ்சாஹேப் தாக்கப்பட்டார்!! முரடர்களின் அட்டகாசம்!!! என்ற தலைப்புகளுக்கடியில், கீழ்க்கண்ட செய்தி வெளியாகியிருந்தது.

நேற்று இரவு சுமார் பத்து மணிக்கு, செல்வப் பிள்ளையார் கோவில் தெரு முனையில், ராவ் சாஹேப் ராமானுஜம் தன் மோட்டாரில் வந்துகொண்டிருக்கையில், நாலைந்து முரடர்களால் தாக்கப்பட்டு, படுகாயப்படுத்தப் பட்டார். மோட்டார் டிரைவருக்கும் காயம் ஏற்பட்டது. திருடர்கள், ராவ்சாஹேபிடமிருந்த முன்நூறு ரூபாய் பெறுமானமுள்ள வைர மோதிரத்தையும், கைக் கடியாரத்தையும், மணிபர்ஸையும் எடுத்துக் கொண்டு ஓடி விட்டனர். போலீஸார் புலன் விசாரித்து வருகின்றனர்.

"ராவ் சாஹேப் ஆஸ்பத்திரியில் சிகித்சை பெற்றுவருகிறார்."

கணபதி சிரித்துக் கொண்டான். "ஹூம் கடைசியில் நான் சொன்ன யுக்தி பலித்துவிட்டது போலிருக்கிறது! ராவ் சாகிப்பும் சாதாரணப் பேர் வழியல்ல!" என்று எண்ணியவனாய் நேரே ஆஸ்பத்திரிக்குக் கிளம்பினான். ராவ்சாஹேப் தன்னைப் பார்க்க ஆவலுடனிருப்பார் என்று அவனுக்குத் தெரியும்.

ஆஸ்பத்திரியில், படுக்கையில் கிடந்த ராவ் சாஹேப்பைக் கண்டதும், அவனுக்குத் தூக்கிப் வாரிப் போட்டது! அவருடைய தலையிலும், கைகளிலும் கால்களிலும் பெருத்த கட்டுப் போட்டிருந்தது!

"கடைசியில் யுக்தி பலித்து விட்டது!...ஹூம்...இதோ பாருங்கள்;...தினசரிகளிலெல்லாம் இன்று உங்களைப் பற்றி தான் எழுதியிருக்கிறார்கள்!". என்று கையிலிருந்த தினசரியை அவரிடம் நீட்டினான் கணபதி.

ராவ்சாஹேப் அவனை எரித்து விடுவது போல் பார்த்தார்.

"நீயும் உன் யுக்தியும் நாசமாய்ப் போக!...இந்தக் காயங்கள் எல்லாம் போலி காயங்களல்ல!...ஐயோ அப்பா!...வலி பொருக்க முடியவில்லையே;...பிராணன் போய் விடும் போலிருக்கிறதே!...நேற்று இரவு என் உறவினர் ஒருவரை ரயிலேற்றி விட்டுத் திரும்பி வீட்டிற்கு வந்து கொண்டிருக்கையில் நிஜமாகவே நான்கு தடியர்கள் குடிவெறியில் என் மோட்டாரை வழி மறித்து டிரைவரைக் காயப்படுத்தி விட்டு என்னையும் ஹிம்சித்துக் காயப்படுத்திய தோடல்லாமல் என்னிடமிருந்ததையெல்லாம் அடித்துக் கொண்டு ஓடிவிட்டார்கள்!... ஐயோ!... வலி தாங்க முடியவில்லையே!...என்று புலம்பினார் ராவ் சாஹேப்.

கணபதி விக்னேஸ்வரர் மாதிரி கல்லாய்ச் சமைந்து விட்டான்!

வீதிகளிலும் நம்பிக்கையற்ற கடைகளிலும் வாங்காதீர்கள்

நஞ்சன்கூடு பல்பொடி

I. D. L. G. மேடல்கேட்

பல வியாதிகளைத்தடுக்கவும், குணப்படுத்தவும்

ஊக்கம், உற்சாகம் ஊட்ட | ஜீர்சப் | அஜீர்ணம், பித்த சமனி

உஷ்ண சமனி | கூலாயில் | ஸ்நான தைலம்

கவனிக்க போலிகளால் பற்களுக்கே அபாயம்

சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதருஸ்

(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி) (தபால் மூலம் சிகிச்சை பெறுக)

ஹிந்திக் கதை

'காதல் - சாதல்'

★ ★

ஸ்ரீ பிரேம் சந்த்

எழுதியது

5

இரவு பத்து மணியாகிவிட்டது. ரணசோட்ஜியின் மந்திரில் பஜனை முடிந்தது. பல சாதுக்களும் ஒரு வைஷ்ணவ சாதுவும் பிரசாதத்திற்காக உட்கார்ந்திருந்தார்கள். மீராபாய் தானே பிரசாதங்களை எடுத்து வந்து அனைவருக்கும் பரிமாறினுள். சாதுக்களையும் விருந்தாளிகளையும் உபசரிப்பது என்ருல் மீராவுக்கு மிகவும் ஆனந்தம். சாதுக்கள் எந்தப் பொருளை உத்தேசித்து அன்னத்தை புசிக்கிருர்களோ அதைப்பற்றி சந்தோஷம் ஏற்படுகிறது. ருசியுள்ள வஸ்துக்கள், பக்தி, பஜனைமுதலிய சுகங்களைவிட எவ்விதத்திலும் சுகத்தைக் கொடுப்பதில்லை. நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்ட விபூதி தான் எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளைக் காண் முக்கியமான பாதையாகும். ஆனுல் இந்தச் சாதுக்கள் ஏன் 'உபவாசம்' என்ற செய்கையை விட்டுவிட்டார்கள்? அவர்கள் எப்பொழுதும் வயிற்றின் மீது கை வைத்துக்கொள்வதும், ஆசனத்திலிருந்தபடியே கால்களைச் சற்றுக்கொரு தடவை மாற்றுவதுமாக இருந்தார்கள். வாயினுல் 'இல்லை' என்று சொல்வது கோரமான பாபம் என்று அவர்கள் நினைத்தார்கள். எப்படி நாம் பகவானுக்காக பல சேவைகளைச் செய்கிருேமோ அதே போல்தான் என்று ஆத்மாவைத் திருப்தி செய்வதும்! அதனுல் சாதுக்கள் மண்டபத்தில் நிறைந்திருந்தனர்.

ஆனுல், அவர்களில் ஒரு மஹாத்மா மாத்திரம் கண்களை மூடிக்கொண்டு ஏதோ யோசனையில் ஈடுபட்டிருந்தார். சாப்பாட்டின் பக்கம் கொஞ்சம் கூடப் பார்வையைச் செலுத்தவுமில்லை. அவருடைய பெயர் ப்ரேமானந்தர்! அவர் அன்றுதான் அங்கு வந்தார். அவருடைய முகத்தில் ஒரு தனி சோபை மின்னிக் கொண்டிருந்தது. எல்லா சாதுக்களும் சாப்பாடு முடிந்து எழுந்து கூடப் போய்விட்டார்கள். ஆனுல் அவர் மாத்திரம் சாப்பாட்டில் விரலைக்கூட வைக்கவில்லை.

மீரா அவர் அருகில் வந்து கைகளைக் கூப்பிக்கொண்டு, தாழ்மையுடன் "ஸ்வாமி, தாங்கள் பிரசாதத்தைத் தொடக்கூட இல்லையே! அடிமையால் ஏதாவது அபசாரம் நடந்து விட்டதா?" என்று கேட்டாள்.

"இல்லை...இஷ்டமில்லை" என்ருர் ஸாதுஜி.

"ஆனுல் என்னுடைய வேண்டுகோளை மாத்திரம் தாங்கள் அங்கீகாரம் செய்யவேண்டும்."

"நான் உங்களுடைய வேண்டுகோளுக்கும் இணங்குகிறேன். நீங்களும் என்னுடைய ஒரு வார்த்தையைக் கேட்க வேண்டி வரும்!"

"சொல்லுங்கள், என்ன உத்திரவோ?"

"அங்கீகரிக்க வேண்டும்"

"ஆகா! தடையின்றி!"

"வாக்குக் கொடுப்பீரா?" என்று சாதுஜி கேட்டார்.

"சரி, அப்படியே கொடுக்கிறேன். தாங்கள் சாப்பிடுங்கள்."

ஸாதுஜி ஏதாவது பஜனை மடம் கட்டவோ அல்லது, ஏதாவது யாக யக்ஞம் செய்யவோ, உதவி கேட்பார் என்று மீரா நினைத்தாள். அந்த மாதிரி தினமும் வரும் சாதுக்கள் கேட்பதும் மீரா கொடுப்பதும் வழக்கமாக இருந்தது. ஆனுல் அந்த சாது அம்மாதிரி ஒன்றும் கேட்கவில்லை. அவன் மீராவின் காதோடு "இன்று இரவு இரண்டு மணிக்கு ராஜன் அரண்மனையின் திட்டுக் கதவைத்திறந்து விடவேண்டும்" என்ருர்.

மீரா திடுக்கிட்டு "நீர் யார்?" என்று கேட்டாள்.

"மந்தார் தேசத்து இளவரசன்."

மீரா அவனை ஒரு தடவை ஏற இறங்கப்பார்த்தாள். கண்கள் ஜ்வலித்துக் கொண்டிருந்தன: "க்ஷத்ரியர்கள் இந்த மாதிரி துரோகம் செய்யமாட்டார்கள்" என்ருள்.

"நான் விரும்புவதெல்லாம் பிரபாவைப் பார்ப்பதற்குத் தான்."

"அது நடக்காத விஷயம்."

"தாங்கள் வாக்குக்கொடுத்து விட்டீர்கள், அதைப் பூர்த்தி செய்வது தங்கள் கடமை."

"மஹா ராஜாவினுடைய ஆக்ஞைக்கு முன் என்னுடைய வாக்குதத்தம் பயன் அற்றது!"

"எனக்கு அதெல்லாம் தெரியாது, நீங்கள் கொடுத்த வாக்கைப் பூர்த்தி செய்வதாயிருந்தால் செய்யுங்கள்" என்ருன்,

மீரா சிறிது நேரம் யோசித்து விட்டுப் பிறகு, "அவளைப் பார்த்த பிறகு என்ன செய்வாய்?" என்று கேட்டாள்.

"இரண்டொரு பேச்சுப் பேசுவேன்."

மீரா யோசனையில் ஆழ்ந்து விட்டாள். ஒருபுறம் ராணுவின் கடினமான உத்திரவு! மற்றெருபுறம் தன்னுடைய வாக்குதத்தம்!! இரண்டும் சேர்ந்து அவள் கண்முன் பேய்க் கூத்தாடத் தொடங்கின. தசரதர் தன் வாக்கைப் பூர்த்தி செய்வதற்கு ஸ்ரீ ராமசந்திரபிரபுவைக் காட்டுக்கு அனுப்பினுர். அது போல் நானும் என்னமோ வாக்குக்கொடுத்துவிட்டேன். அதைப் பூர்த்திசெய்வதும் என்னுடைய வேலைதான். ஆனுல் பதியின் கட்டளையை எப்படி மீறுவேன்? அவருடைய கட்டளையை மீறினுல் இகத்திலும் பரத்திலும் நரகம் தான் சம்பவிக்கும், அவரிடம் சென்று எல்லாவற்றையும் சொல்கிறேன். என்ன, அவர் என்னுடைய ஒரு வாக்குதத்தத்தைக்கூடவா பூர்த்தி செய்யமாட்டார்? நான் இன்றுவரை அவரிடத்தில் எதுவும் கேட்டதில்லை. ஆனுல் இன்று மாத்திரம் அவரிடத்தில் இந்தப் பிச்சையைக் கேட்பேன். அவருடைய மனம் எவ்வளவு கபடமற்றது! அவர் கட்டாயமாக என் வாக்கைப் பூர்த்தி செய்யாமல் இருக்கமாட்டார்' என்று அவள் உள்ளுக்குள்ளேயே யோசித்துவிட்டுத் திரும்பவும், "எப்பொழுது திறக்க வேண்டும்?" என்று கேட்டாள்.

ராஜகுமாரன் குதித்தெழுந்து "நள்ளிரவில்" என்ருன்.

"நானும் உன்னுடன் வருவேன்" என்ருள் மீரா.

"ஏன்?"

"நீ முதலில் என்னை ஏமாற்றி விட்டாய். அதனுல் உன்னிடம் எனக்கு நம்பிக்கையில்லை"

ராஜகுமாரன் வெட்கமடைந்து "நல்லது, நீங்கள் கதவருகில் நின்றுகொண்டிருக்க வேண்டும்" என்ருன்.

"ஏதாவது விபரீதமாக நீ நடந்து கொண்டால் உன் உயிரை இழக்க நேரிடும்"

"நான் எல்லாவற்றிற்கும் தயாராகத்தான் இருக்கிறேன்" என்ருன் மந்தார் தேசத்து இளவரசன்.

6

மீரா அங்கிருந்து ராணுவின் அறைக்குப் போனுள். அவன் அவளை மிகவும் அன்புடன் நடத்தினுன். அவள் ராணுவின் முன் நின்ருள். அந்தச் சமயம் மீராவின் மனதில் மிகவும் சாதரணமான ஒரு விஷயமே உலவிக்கொண்டிருந்தது.

"பாயிஜீ! என்ன சமாசாரம்?" என்று ராணு கேட்டான்,

"தங்களிடத்தில் ஒரு பிச்சை கேட்க வந்திருக்கிறேன். அதைக் கொடுக்காமல் என்னைத் திருப்பி அனுப்பி விடக் கூடாது. நான் இன்றுவரை உங்களை எனக்காக எதுவும் கேட்டதில்லை. ஆனுல் இன்று ஒரு பிராம்மணன் கேட்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டது. அந்தப் பந்தத்திலிருந்து உங்களால் தான் என்னை விடுவிக்க முடியும்-மந்தார் தேசத்து இளவரசனை உங்களுக்குத் தெரியுமல்லவா?" என்ருள் மீரா.

"ஆஹா. நன்ருகத் தெரியும்"

"அவன் இன்று என்னை ஒரு விதத்தில் ஏமாற்றி விட்டான். வைஷ்ணவ பக்தன் போல் ரணசோட்ஜியின் மந்திரத்தில் வந்து என் பிரமாணத்தை வாங்கிக் கொண்டு, உண்மையைச் சொன்னுன். என் மனம் அவன் சொன்னதை உங்களிடம் மறைக்க எண்ணவில்லை"

"பிரபாவைக் காண்பித்து வைக்கும்படி ஒன்றும் சொல்லவில்லையே?"

"ஆமாம். அவனுடைய விருப்பம் பிரபாவைக் காண்பது, தான். ஆனுல் கேள்வி என்னவென்ருல் பாதிராத்திரியில் திட்டிக் கதவைத் திறந்து விடவேண்டுமாம். நான் அவனுக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். பயமுறுத்தினேன்-ஆனுல் எதற்கும் அவன் அஞ்சவில்லை! நான் பலவிதமாக யோசித்தே கடைசியில் அவனுக்கு வாக்கு கொடுத்தேன். எப்பொழுது நான் வாக்கு கொடுத்தேனே அதை நீர் தான் பூர்த்தி செய்யவேண்டும். நீங்கள் நினைத்தால் அதைப்பூர்த்தி செய்யாமல் என்னை அவமானப் படுத்தலாம். நீர் என் மேல் வைத்திருக்கும் அன்பினுல் நான் வாக்குக் கொடுத்தேன். அதை நீர்தான் காப்பாற்ற வேண்டும். இப்பொழுது என்னை இந்த கஷ்டத்திலிருந்து காப்பாற்றுவது உங்களுடைய கடமை"

இரண்டு காதலர்களும் ஒன்று சேர்ந்தார்கள். பிரபா ராஜகுமாரனுடன் போக சம்மதிக்கவில்லை. ஆனுல் பிரேமை என்ற விலங்கை அவளால் தகர்க்க முடியவில்லை. இருவரும் ராணுவின் மாளிகையிலிருந்தே, வாழ்க்கையை விட்டு எங்கோ ஒரு இடத்திற்குப் பிரயாணமானுர்கள்; வாடின புஷ்பம் மலரவே இல்லை: மோஹத்தில் மனிதன் குருடனுகிறன். இதன் உண்மை இக் கதையில் காணக் கிடக்கிறது.

ராணு சிறிது நேரம் யோசித்து விட்டு பிறகு, "நீ வாக்கு கொடுத்து விட்டாய். அதைப் பூர்த்தி செய்வது என் கடமை தான். நீ என் பிரத்யக்ஷ தேவதை. உன்னுடைய பேச்சை என்னுல் தள்ள முடியாது. கதவைத் திறந்து விடு. ஆனுல் பிரபாவுடன் அவன் தனித்துப் பேசுவது உசிதமில்லை. நீ அவனுடன் போகவேண்டும். எனக்காக அந்தக் கஷ்டத்தை நீ அனுபவிக்க வேண்டும். அவன் பிரபாவின் உயிரை வாங்கிவிட எண்ணியே இங்கே வந்திருக்கிருன். மோகத்தினுல் மனிதன் குருடனுகி விடுகிருன். மீரா, என்னுடைய மனதில் உள்ளதை உன்னிடம் சொல்லுகிறேன். பிரபாவைத் திருப்பி அனுப்பி விட எண்ணினேன். நான் முதலில் அவள் இங்கே சில நாள் இருந்தால் மனம் மாறி விடும் என்று நினைத்தேன். ஆனுல் அது முற்றிலும் ஏமாற்றமாக முடிந்தது. அவள் இன்னும் சில நாட்கள் இங்கேயே இருந்தால் கட்டாயம் இறந்துவிடுவாள், என்ற பயமும் எனக்குத் தோன்றுகிறது. அப்படி நடந்தால் என் மீது ஒரு நிரபராதியான பெண்ஹத்தி தோஷம் தொடரும். நான் அவளைச் ஜால்வாடிற்குப் போகும்படி சொன்னேன். ஆனுல் அவள் சம்மதிக்கவில்லை. இன்று நீ அவர்களிருவருடைய பேச்சையும் கேட்டுக்கொள். ஒரு வேளை அவள் மந்தார் இளவரசனுடன் போகச் சம்மதித்தால் நான் மனப்பூர்வமாக அவளை அவனுடன் அனுப்புகிறேன். என்னுல் அவள் மனம் நோகக்கூடாது. கடவுள் அந்த சுந்திர வடிவழகியை எனக்கு அளித்திருந்தால் என் மனம் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்! நான் உன்னிடத்தில் இந்த வார்த்தையைச் சொன்னதற்காக என்னை மன்னித்து விடு. உன்னுடைய பவித்ரமான ஹிருதயத்தில் இந்த அசமபாவிதங்களுக்கு இடமேது?" என்ருன்.

மீரா சங்கோசத்துடன் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டே "திட்டிக் கதவைத் திறக்க உத்திரவு இருக்கிறதா?" என்று கேட்டாள்.

"நீ இந்த வீட்டின் தேவதை! என்னிடம் கேட்க வேண்டிய அவசியமில்லை."

மீரா, ராணுவுக்கு நமஸ்காரம் செய்து விட்டு அறையை விட்டு வெளியே போய் விட்டாள்.

7

நள்ளிரவாகியது. பிரபா மௌனமாக விளக்கின் பக்கம் பார்த்து விளக்கை ஏற்றுவதால் வெளிச்சம் உண்டாகிறது. 'இந்த விளக்கு வேறு எங்காவது எரிந்தால் யாருக்காவது பிரயோஜனமுண்டு. அதனுல் எனக்கென்ன லாபம்? நான் என்ன செய்வது? என் வாழ்க்கைக்கு என்ன அவசியம்?' என்று பலவாறு யோசித்துக் கொண்டிருந்தாள்.

அவள் விளக்கின் பக்கம் இருந்த பார்வையைத் திருப்பி ஜன்னலின் வழியாக ஆகாயத்தைப் பார்த்தாள். கருமேகத்தில் நக்ஷத்ரங்கள் மின்னிக் கொண்டிருந்தன. "என்னுடைய அந்தகாரமான ஹிருதயத்தில் இந்த ஜோதிமயமான நக்ஷத்ரங்களின் ஒளி ஏது? என் வாழ்க்கையில் சுகமேது? 'விசனப்படுவதற்காகவா நான் பிறந்தேன்? இந்த மாதிரியான வாழ்க்கை எதற்கு? மேலும் வாழ்க்கையில் பல சுகங்களும் இருக்கின்றன. என் மனத்தினுள் உள்ளது யாருக்குத் தெரியும்? உலகம் என்னை நிந்தனை செய்யும், ஜால்வாடின் பெண்கள் என்னுடைய அந்திம சமாசாரத்தைக் கேட்க அதிக ஆவலாக இருப்பார்கள். என்னுடைய அருமைத் தாய் வெட்கத்தால் தலை தூக்க முடியாமல் வருந்தப்படுவாள். எப்பொழுது என் மரண சமாசாரம் அவள் காதில் படுகிறதோ, அப்பொழுது தான் அவள் தலையைக் கர்வத்துடன் உயர்த்துவாள். என்னுடைய வாழ்க்கை மிகவும் வெட்ககரமானது. பலவித துன்பத்துடனும், வெட்கத்துடனும், அவமானத்துடனும் பிழைத்திருப்பதை விட சாவதே மேல்" என்றும் எண்ணினுள்.

பிரபா தலையணையின் அடியிலிருந்து ஒரு மின்னும் கத்தியை எடுத்தாள். அவளுடைய கை நடுக்க முற்றது. கண்கள் கத்தியைப் பார்த்து மிரண்டன. மனம் மாத்திரம் திடமாக இருந்தது. கையை உயரத் தூக்கினுள்—ஆனுல்மேலே எழவில்லை! தேகம் குளிர்ந்து விட்டது. கண்கள் மேலும் மிரண்டன: தலை சுழன்றது: கத்தி கையிலிருந்து நழுவிக் கிழே விழுந்து விட்டது.

பிரபா கலவரத்துடன், நான் உண்மையில் பயங்கொள்ளியா? க்ஷத்ரியப் பெண்ணுக இருந்தும் சாவதற்குப் பயப்படுகிறேனு? மானம் அவமானத்திற்கு பயந்து ஜனங்கள் நடக்கிருர்கள். எந்த ஆசை என்னை இம்மாதிரி கோழையாக்கியது? ராணுவின் இன்பச் சொற்களா?—ராணு என்னுடைய ஜன்ம விரோதி. அவன் என்னைப் பசுவென்று நினைத்திருக்கிருன். நானும் கூண்டிலடைபட்ட பறவை போல் இருக்கிறேன். அவன் தன் இனிமையான வார்த்தைகளால் என்னை மயக்கி விடலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிருன். அவன் என் பக்கமாகச் சுற்றிச் சுற்றி வந்து எனக்குப் பலவித சுகபோகத்திற்குத் தேவையான பொருள்களைக் கொண்டு வந்து கொடுக்கும்படி தாதிகளுக்குக் கட்டளையிடுகிருன். ஹா! சண்டாளன் என் வாழ்க்கையை வீணுக்கி வெறும்விளையாட்டாக மாற்றி விட்டான். நான் அவனுடைய கபட நாடகத்தில் ஒரு பாகத்தை எடுத்துக்கொண்டு உயிர் வாழ்வதா?' என்று மேலும் யோசித்தாள்.

திரும்பவும் அவள், "பிறகு என்ன ஆசையிருக்கிறது? என்ன ராஜகுமாரரின் காதலா? அவரை நினைத்தால்கூட எனக்கு நரகம் தான் சம்பவிக்கும். நான் இப்பொழுது அவருக்குத் தகுந்தவளல்ல, அன்பரே! உங்களை வெகு நாட்களுக்கு முன்னமேயே என் மனதில் இருந்து விலக்கிவிட்டேன். நீரும் என்னை உங்கள் ஹிருதயத்திலிருந்து நீக்கிவிடுங்கள். இறப்பதைத் தவிர, எனக்கு வேறு எந்த சுக

FREE! FREE! FREE!

SAFETY-FIRST/



6-SHOT-REVOLVERS

லைசென்ஸ் தேவையில்லை

ஆடோமாடிக ரிபீடர்

திருடர்களையும், விலங்குகளையும் பயமுறுத்த ஆடோமாட்டிக் ரிபீடர். எவ்வித தொந்திரவுமின்றி 6 முறை சுடலாம். உண்மை ரிவால்வரைப்போல் சப்தம் கேட்கும். சுடும்பொழுது நெருப்புத் தெரியும். தீங்கான விலங்குகள், பறவைகளை விரட்ட உபயோகமானது. அவசரத்துக்கு ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டும். லைஸென்ஸ் தேவையில்லை. நெ. 7777 விலை ரூ. 4/8 - 35 ரவைகள் இலவசம். நெ. 8888. ரூ. 5/13/- 45 ரவை இலவசம். நெ. 9999. ரூ. 6/12/- 550 ரவை இலவசம். அதிகப்படி 1000 ரவை ரூ. 3/- பெல்டுடன் கேஸ் ரூ. 5/12/- ஆயில் ரூ. 1/12/- தபால் சார்ஜ் பிரத்யேகம்.

இலவசம்:—ஒரு தோலா லண்டன் நியூ கோல்ட் ஒரு அழகிய மியூட் கைக் கடியாரம், ஒவ்வொரு துப்பாக்கியுடன் இலவசமாகக் கொடுக்கப்படும். சேர்ந்தாற்போல் இரண்டு வாங்கினுல் 3 அழகிய மியூட் கடியாரங்கள், 3 தோலா லண்டன் நியூ கோல்ட், தபால் சார்ஜ்.

LONDON COMMERCIAL COMPANY.

(EAB) Post Box No. 165, (S.M.M.) LAHORE (India)

அபார சக்திவாய்ந்த டானிக்!

S.K.M.

Dr. N. V. ஸ்ரீராமாச்சார்லுவின்

—ஸித்தகல்ப—

மகரத்வஜம்

60 மாத்திரை ரூ. 10.
30 மாத்திரை ரூ. 5.

விவரத்திற்கு எழுதவும்:

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்.,

த, பெ. நெ. 151 (ஸ்தாபனம் 1915ஞு) 289, எஸ்பிளநேட், மதராஸ்.



கே. சுவாமிநாதன் & கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சீக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,

7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.



மும் இல்லை. ஹே பரமேஸ்வரா! என்னுடைய கோழை மனதிற்குத் தைரியம் கொடு! எனக்கு என் கடமையைச் செய்யப் பலம் கொடு!'' என்றும் எண்ணினாள்.

பிரபா திரும்பவும் கத்தியைக் கையில் எடுத்துக்கொண்டாள். மார்பு படபடத்தது. அவளுடைய கை மேலே எழும்பி கத்தி மார்பில் பாயும் சமயம் யாரோ உள்ளே வரும் சப்தம் கேட்டது. அவள் திடுக்கிட்டு சப்தம் வந்த திக்கைப் பார்த்தாள்—மந்தார் இளவரசன் மெதுவாக வந்து கொண்டிருந்தான்!

8

பிரபா திடுக்கிட்டு கத்தியை மறைத்தாள். ராஜ குமாரனைப் பார்த்ததும் சந்தோஷத்திற்குப் பதிலாக அவளுக்கு அதிக பயம்தான் ஏற்பட்டது. 'யாருக்காவது கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்டாலும் அவளுடைய உயிரைக் காப்பாற்றுவது மிகவும் கடினம். ராஜ குமாரன் உடனே வெளியே போய்விட வேண்டும். அவனுக்குக் கொஞ்சம் பேச இடம் கொடுத்தால் அவன் கோட்டையைப் பிடித்துக்கொண்டு விடுவான் மேலும் ராணாவுக்குத் தெரிந்தால் இவனை உயிருடன் விடமாட்டான்' என்று பிரபாவின் மனதில் மின்னலைப் போல் தோன்றியது. அவள் கம்பீரத்துடன் ராஜ குமாரனைப் பார்த்து ''உள்ளே வராதே'' என்றாள்.

ராஜகுமாரன் திடுக்கிட்டு ''என்னை நீ தெரிந்து கொள்ளவில்லையா?'' என்றான்.

''நன்றாகத் தெரிந்துகொண்டேன். ஆனால் இப்பொழுது பேச சமயமில்லை. ராணா உன்னைத் துலைத்துவிட எண்ணி இருக்கிறான். உடனே இங்கிருந்து போய்விடு?

ராஜ குமாரன் ஒரு அடி முன்னுக்குப்போய் அலட்சியமாக ''பிரபா, உனக்கு என்மேல் அன்பில்லையா?'' என்றான்.

பிரபா மேலும் அலட்சியமாக ''நீர் இங்கு தங்கினால் நான் கூச்சல் போட்டுவிடுவேன்'' என்றாள்.

ராஜ குமாரன் முரட்டுத்தனமாக ''நீ கூச்சல் போடுவதால் எனக்கு எவ்விதத்திலும் பயமில்லை. நானிங்கு வரும்பொழுது என்னுடைய உயிரைத் திருணமாக நினைத்தே வந்தேன். இன்று இரண்டில் ஒன்று ஆகிவிட வேண்டும்—ஒன்று ராணா இருக்க வேண்டும், அல்லது நான்! நீ என்னுடன் வருகிறாயா?'' என்றான்.

''மாட்டேன்''

ராஜ குமாரன் வினயத்துடன் ''ஏன்? சித்தோடின் ஜலம் பிடித்து விட்டதா?'' என்று கேட்டான்.

பிரபா கருணை நிறைந்த பார்வையுடன் ராஜ குமாரனைப் பார்த்துக்கொண்டே ''வாழ்க்கையில் நாம் நினைத்ததெல்லாம் பூர்த்தியாவதில்லை. எப்படி நான் இங்கு காலம் தள்ளுகிறேனென்பது எனக்குத்தான் தெரியும். ஆனால் வாழ்க்கையில் நான் ஒரு விதமாகத்தான் இருக்கிறேன். சம்சாரம் என்ற பார்வைக்கு சித்தோடின் ராணியாய்விட்டேன். இப்பொழுது ராணா எப்படிச் சொல்கிறாரோ அப்படித்தான் நடப்பேன். என் வாழ்க்கையில் கடைசி நேரம் வரை பணிவிடை செய்வேன். அவர் சொற்படி நடப்பேன். என் மனதில் உள்ள விஷயங்களை நானே தீர விசாரித்துக்கொள்வேன்—அப்படி என்னால் முடியாவிட்டால் விஷத்தைத் தின்றாவது, அல்லது கத்தியால் குத்திக் கொண்டாவது இறந்துவிடுவேன்—ஆனால் இதே இடத்தில் இந்த அரண்மனையை விட்டு ஒரு அடிகூட வெளிப்புறம் வைக்கமாட்டேன்'' என்றாள்.

ராஜகுமாரன் தன் மனதில், ''பிரபாவின் மேல் ராணாவின் வசிகர பாணம் பாய்ந்து விட்டது. அவள் என் மேல் தான் காதல் கொண்டிருந்தாள். காதல் என்பதால்தான் சகித்துவம் உற்பத்தியாகிறது'' என்று நினைத்து மிகவும் கோபத்துடன் ''இல்லாவிட்டால் நான் உன்னைத் தூக்கிக் கொண்டு போய் விடட்டுமா?'' என்றான்.

பிரபாவிற்குக் கோபம் அதிகரித்தது. அவள் 'அப்படியானால் ஒரு க்ஷத்ரியப் பெண் எப்படி நடந்து கொள்வாளோ அது போல்-ஒன்று கத்தியை உன் கழுத்தில் பாய்ச்சிவிட வேண்டும் அல்லது என் கழுத்தில்!'' என்றாள்.

ராஜகுமாரன் மேலும் ஒரு அடி முன்னுக்குப் போய் கோபத்துடன் ''ராணாவுடன் நீ சித்தோடிலிருந்து சந்தோஷமாக வந்தாயே; அந்தச் சமயம் இந்தக் கத்தி எங்கே போய் விட்டது?'' என்று கேட்டான்.

பிரபாவுக்கு அந்தச் சொல் அம்பு போல் தைத்தது. அவள் முழுமனதுடன் ''அந்தச் சமயம் இந்தக் கத்தியால் ஒரு ரத்த வெள்ளத்தையே உற்பத்தி செய்திருப்பேன். ஆனால் நான் அதை விரும்பவில்லை காரணம் என்னுடைய சகோதரர்களும், பந்துக்களும், குடி ஜனங்களும் உயிரை இழக்க வேண்டியதுதான். அதற்கு முன் நான் விவாகம் ஆகாமல் இருந்தேன் எனக்கு என் வாழ்க்கையில் ஒரு பயமுமில்லை. நான் பதிவ்ரதா சப்தமும் எடுக்கவில்லை. எனக்கு வாழ்க்கையே ஒருவிதமாக இருந்தது. நான் இப்பொழுதும் அதன் பார்வையில் தான் இருக்கிறேன். ஆனால் வாழ்க்கையின் திருஷ்டி இப்பொழுது வேறுவிதமாக மாறி விட்டது. உலகத்தவர் என்னை ராணாவுக்குப் பத்தினியாக்கி விட்டார்கள் பாரத்யத்தின் விலங்கு பலமாக என் காலில் மாட்டப்பட்டது. இப்பொழுது அதைக் காப்பாற்றுவது தான் என் தர்மம். அதற்கு

எதிரிடையாகவோ அல்லது வேறு விதமாகவோ அதை நடத்தினால் க்ஷத்ரியப் பெண்களுக்கே ஒரு அபகீர்த்தியை தேடியதாகும். நீர் என்னுடைய தேசத்தைப் பற்றி வீணாக ஏன் கோபித்துக்கொள்கிறீர்? அங்கு அப்படிப்பட்ட பலவான்கள் யார் இருக்கிறார்கள்? என் மனதில் ஏதோ தோன்றியதைச் சொன்னேன். நான் சொல்வதைக் கேட்டு நீர் சீக்கிரமாகவே வெளியே போய்விடவேண்டும்'' என்றாள்.

ராஜகுமாரன் மேலும் ஒரு அடி முன்னுக்குப் போய் துஷ்ட ஸ்வபாவத்துடன் ''நீ இங்கு வந்து வாதத்தில் நிபுணையாகி விட்டாய். நீ என் மேல் காதல் கொண்டிருந்துவிட்டு இப்பொழுது தர்மப் பிரசாரம் செய்கிறாய். நீ என்னைத் தீண்டிவிட்டு இப்பொழுது ஒரு நியமத்தை எனக்காகக் கண்டு பிடித்திருக்கிறாய். நான் என் கண்களால் ராணாவுடன் அதி சௌந்தரியவதியான நீ உல்லாசமாக வாழ்வதைக் காணச் சகிக்க மாட்டேன். என்னுடைய காரியங்கள் மண்ணோடு மண்ணாகி விட்டாலும் உன்னை இங்கே விட்டு விட்டுப் போகமாட்டேன். என்னுடைய வாழ்க்கையே நாசமாவதாய் இருந்தாலும், அதற்கு முன்னரே உன்னுடைய வாழ்க்கையை நாசம் செய்து விடுவேன். உன் நன்றி கெட்டதனத்திற்கு அது தான் தகுந்த தண்டனை. இதையாவது யோசித்துச் சொல்? இப்பொழுது என்னுடன் வருகிறாயா, இல்லையா? கோட்டைக்கு வெளியில் என்னுடைய ஆட்கள் காத்துக்கொண்டிருப்பார்க்ள்'' என்றான்.

பிரபா சிறிதும் பயமின்றி ''உங்களுடன் வரமாட்டேன்? என்றாள்.

''நன்றாக யோசித்துப்பார், இல்லாவிட்டால் வீணாக வருந்துவாய்!''

''நன்றாகவே யோசித்து விட்டேன்''

ராஜகுமாரன் கத்தியை உருவி பிரபாவின் மேல் வீசினான். பிரபா பயத்தால் கண்களை மூடிக்கொண்டு இரண்டடி பின்னுக்குப் போனாள்—மூர்ச்சையும் ஆகி விட்டாள்.

திடீரென்று ராணா எங்கிருந்தோ கத்தியை உருவிக் கொண்டு ராஜ குமாரன் முன் வந்து நின்றான். ராஜ குமாரனும் முதலில் திடுக்கிட்டு விட்டான், பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்டு எதிர்த்து நின்றான்.

ராணா சிங்கத்தைப் போல் கர்ஜித்து ''அப்பால் போ, க்ஷத்ரியப் பெண்களின் மேல் உன் கை வரிசையைக் காண்பிக்காதே'' என்றான்.

ராஜகுமாரன் சட்டென்று இரண்டடி பின்னுக்குப் போய் ''மானங்கெட்ட பெண்களுக்கு இது தான் சரியான தண்டனை'' என்றான்.

''நான் தான் உன்னுடைய விரோதி. என் எதிரில் உன் கை வரிசையைக் காண்பிக்க ஏன் பயப்படுகிறாய்? நானும் உன் கத்தி விளையாட்டைப் பார்க்க வேண்டும்'' என்றான் ராணா.

ராஜகுமாரன் கோபமாக ராணாவின் மேல் கத்தியை வீசினான். ராணா சஸ்திர வித்தையில் மிகவும் தேர்ச்சி அடைந்தவன். ராஜகுமாரனின் குறி அவன் மேல் படவில்லை. ராணா உடனே ராஜகுமாரன் மீது கத்தியை வீசினான். கத்தி ராஜகுமாரன் மேல் பாய்வதற்குள் பிரபா மயக்கத்திலிருந்து தெளிந்து நடக்கப் போவதைக் கண்டு மின்னலைப் போல ஓடி வந்து ராஜகுமாரனை மறைத்துக் கொண்டாள்.

ராணாவின் கத்தி பிரபாவின் கழுத்தில் பாய்ந்தது. ரத்தம் பன்னீர் போல் இருவர் மீதும் தெளித்தது. ராணா ஒரு பெருமூச்சுவிட்டு விட்டுக் கையிலிருந்த கத்தியைவீசி எறிந்து, பிரபா கீழே விழாதபடி தன் கைகளால் தாங்கிக் கொண்டான்.

ஒரு க்ஷணத்திற்குள் பிரபாவின் முகம் சோபையற்றுவிட்டது. கண்கள் மூடிக்கொண்டன. தேகம் 'ஜில்' என்றாகியது. மந்தார தேசத்து அரசகுமாரனும் கத்தியைவீசி எறிந்து விட்டான். கண்களில் நீர் ததும்பி பிரபாவின் முன் மண்டியிட்டு உட்கார்ந்தான். உயிரிழந்த காதலியின் காலடியில் இருவரும் உயிரைத் தியாகம் செய்யவும் தயாராக இருந்தார்கள்.

காதல் என்பது ஒரு ரகசியமான வஸ்து. சிறிது நேரத்திற்கு முன் ராஜ குமாரன் பிரபாவின்மீது கத்தியை வீசினான். பிரபா எந்த விதத்திலும் அவனுடன் போக மறுத்துவிட்டாள். உலக நிந்தனையின் பயம். விதியின் சுவரும் சேர்ந்து அவளை வழி மறைத்து நிறுத்தின. ஆனால் ராஜகுமாரன் மீது பாயவிருந்த கத்தியின் முன் எதிர்த்து நின்று தன் உயிரைத் தியாகம் செய்தாள். பதிக்கு மனைவி செய்யும் கடமை அது! ஆனால் அவள் சொன்னபடி அதே அரண்மனையில் தன் வாக்கைப்பூர்த்தி செய்து கொண்டாள்.

ஆமாம்! காதல் என்பது ஒரு மறை பொருள் தான். ஒரு க்ஷணத்திற்கு முன் ராஜகுமாரன் பிரபாவின் மேல் கத்தியை வீசியதும் உண்மைதான். அப்பொழுது அவனுக்கு ராக்ஷஸ புத்தி இருந்தது. காதல் என்ற 'தீ' அவன் மனதில் கொழுந்து விட்டு எரிந்துகொண்டிருந்தது. இப்பொழுது அவனுக்கு அந்த குரூரமெல்லாம் சாந்தியாகிவிட்டது. சிறிது நேரம் பிரமித்துப் போய் குழந்தையைப்போல் அழுதுகொண்டிருந்தான். பிறகு எழுந்து கத்தியை எடுத்து மேலே தூக்கி மார்பில் குத்திக் கொண்டான். திரும்பவும் அதே ரத்த வெள்ளம்! இரண்டு காதலர்களும் ஒன்று சேர்ந்தார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. பிரபா அவனுடன் போக சம்மதிக்கவில்லை. ஆனால் 'பிரேமை' என்ற விலங்கை அவளால் தகர்க்க முடியவில்லை. இருவரும் அந்த வீட்டிலிருந்து அல்ல—வாழ்க்கையிலிருந்தே—எங்கோ ஒரு கண்காணாத தேசத்திற்குப் பிரயாணமானார்கள்.

தசரா!
இப்பெரும் தேசியத் திருநாளில் ஒவ்வொரு வீட்டிலும் விருந்தளித்த வண்ணமே இருக்கின்றனர். இந்நன்னாளைக் கொண்டாட உங்கள் உற்றாரையும் நண்பர்களையும் காணச் செல்கிறீர்கள். எங்கு சென்றாலும் இனிய தின்பண்டங்களும் வழக்கம் போல் டீயும் அளிக்கிறார்கள். தசராவைப் போன்ற பெரும் விசேஷ நாட்களுக் கேற்ற ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் அளிக்கவல்ல பானம் டீ ஒன்று தான். ஒவ்வொரு விசேஷ நாளையும், டீ அளித்துபசரித்துக் கொண்டாடுங்கள்.

இந்தியன் டீ
விசேஷ சமயத்திற் குகந்த உயர்ந்த பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது — IK 153

41 வருடம் அனுபவம் உள்ளது; ஞாபகம் இருக்கட்டும்.

சூதக வயிற்றுவலி இருக்கும்வரை கெற்பம் தரிக்காது.

ஷை வயிற்று வலியை எடுத்து 6 வித மலட்டையும் நீக்கி

புத்திர்சந்தானம் உண்டாகவேண்டுமானால் R.M.K. கெற்ப சஞ்சீவி எண்ணெயை சாப்பிடுங்கள்.

ஸ்திரீகளுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்தக்ஷணமே நிறுத்தும். எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்ட சூதக வயிற்று வலியும் இதில் அவசியம் தீரும். சூதகம் கண்டும் காணாமலும், துப்பரவாகாமலும் டயப்படி ஆகாமலுமுள்ள சூதகபந்தமானாலுஞ்சரி, இதில் சுகமாகிவிடும். காலா காலத்தில் கிரமப்படி பஹிஷ்டை ஆகும். இன்னும் கெற்பநோய் சம்மந்தமான சகல வியாதிகளும் தீர்ந்து கெற்பம் தரித்துவிடும்! குணம் இல்லையேல் பணம் வாபீஸ்.

1 புட்டி ரூ. 2. சேலவு வேறு. — ஒரு நபருக்கு 3 புட்டி வேண்டும். ஒரே தடவையில் 3 புட்டி ரூ. 5.

வைத்திய ஆசிரியர் **ஆர். எம். கே. வேலுசாமி,**
சித்த வைத்திய சாலை, பழனி. PALNI. (S. I. R.)

பிராஞ்சுகள் :— 16, திருவல்லிக்கேணி ஹைரோடு, மதராஸ்,
,, :— 68, செட்டியார் தெரு, கொழும்பு.

புதிய பதிப்பு! — மலிந்த விலை!!

பாரதி நூல்கள்

(நேர்த்தியான காலிகோ பைண்டு)

1.	கவிதைகள்	Vol I	ரூ.	3	0	0
2.	வசனங்கள்	Vol II	,,	3	0	0
3.	கட்டுரைகள்	Vol III	,,	3	0	0
4.	பகவத்கீதை (காலிகோ)		,,	0	8	0
5.	Agni & other Poems & Translations		,,	1	0	0
6.	Essays & other Prose Fragments		,,	1	0	0
7.	சரித்திரம்		,,	0	4	0

பாரதி பிரசுராலயம்,
567, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

மூன்று அவசிய குடும்ப ஔஷதங்கள்.

இரண்டும் அணா 10. — ஸ்ரீகா கஸ்தூரி கோரோஜனை மாத்திரை — இரண்டும் அணா 10.

பாலக்ஸ்—பேதியாக மாத்திரை, — பாட்டில் அணா 4.
யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தாதெரு, மதராஸ் (மாடுங்கா)

ஆனந்த பற்பொடி

இந்த லேபிலைப்பார்த்து வாங்குங்கள். இதுதான் மார்க்கட்டில் சிறந்தது. எங்கும் கிடைக்கும்.

Certified by Rt. Hon. V. S. Srinivasa Sastri, P.C.
Hon. Sir R. K. Shanmukham Chetty, K.C.I.E.
Hon. Sir Md. Habibulla Sahib Bahadur, K.C.S.I.
Hon. Sir K. V. Reddi, Kt. Sir B. N. Sarma, K.C.S.I.
Hon. Sir P. S. Sivaswami Aiyar, K.C.S.I., C.I.E.
Hon. Sir C. P. Ramaswamy Aiyar, K.C.I.E.
Hon. Sir M. Krishnan Nair, Kt. Sir A. P. Patro, Kt.
Hon. A. T. Pannirselvam. Dr. P. Subbaroyan.
Hon. Justice K. Sundaram Chetti. Hon. P. T. Rajan

ANANDA TOOTH POWDER — TRADE MARK — REGISTERED

Hon. Justice Sir C. V. Kumaraswami Sastri, Kt.
Hon. Justice Sir V. Ramesam, Kt.
Hon. Justice Sir C. V. Ananthakrishna Aiyar, Kt.
,, C Madhavan Nair. Sir M. D. Devadoss, Kt.
,, M. Venkatasubba Rao. Raja of Sivaganga.
Rajas of Kollengode, Bobbili, Ramnad, Mandasa.
Gold medals from Mysore, Pudukkottai, Etc. States
MANUFACTURED BY—VAIDYARATNA PANDIT U. RAMANATHA SASTRI, MADRAS.



வைத்திய ஸித்தாச்ரமம்,
39, பஜார் ரோட்,
மைலாப்பூர் — மதராஸ்.

நான்காம் அங்கம்

முதல் காட்சி

ஔரங்கஸீபின் தனி அறை. மாலை வேளை.

ஜஹ்னரும், ஔரங்கஸீபும் பேசிய வண்ணம் வருகிறார்கள்.

ஜஹ்னர்:—அண்ணா, நான் தங்களைவிட சிறியவளாயிருந்தாலும் நான் சொல்வதைக் கேட்கக் கூடாதா?

ஔரங்கஸீப்:—என்ன உன் வார்த்தையைக் கேட்பதா, மிக்க நியாயவாதி! ஜஹ்னர் பீகம் ஸாப், உள்ளே செல்.

ஜஹ்னர்:—அண்ணா, தங்களுக்கு ஏன் என் மேல் இவ்வளவு கோபம்? நான் என்ன தவறு செய்தேன்?

ஔரங்கஸீப்:—என் கூடப் பிறந்தும் என்னுடைய மதத்துக்கும், ஆசாரங்களுக்கும் இடையூறு யிருப்பதே.

ஜஹ்னர்:—அண்ணா, யாராயிருந்தாலும் எம் மதத்தினராயிருந்தாலும் என்ன? நம் அல்லா ஹிந்துக்களுக்கு ராமர் என்ற பெயருடையவராயிருக்கிறார். எல்லோருக்கும் தெய்வம் ஒன்றுதானே? நாம் அவரவர்களின் ஆசாரங்களில் புகுந்து மனதை ஏன் கெடுக்கவேண்டும்?

ஔரங்கஸீப்:—ஜஹ்னர்! மதத்தைப்பற்றியும், ஆசாரங்களைப் பற்றியும் உனக்கென்ன கவலை? யாராயிருந்தால் என்ன? அவன் தலையில் மாணிக்க க்ரீடமிருந்தால் தானென்ன? அவன் என் ராஜ்யத்தினுள் இருப்பானாகில் ஒன்று என் மதத்தில் சேரவேண்டும், அல்லது என் அலம்கீருக்கு இரையாக வேண்டும்.

ஜஹ்னர்:—அண்ணா, நம் முன்னோர்களெல்லாம் இப்படி யிருந்தார்களா? அவர்கள் ஒருவிதத்தில் நம் உறவினர்களாகவில்லையா? அவர்கள் ரத்தம் நம் தேகத்தில் பாயவில்லையா?

ஔரங்கஸீப்:— ஜஹ்னர்! எல்லாம் உனக்குத்தான் தெரிந்ததுபோல் பேசுகிறாய். என் விஷயத்தில் தலையிடாதே.

ஜஹ்னர்:—அண்ணா......

ஔரங்கஸீப்:—போதும் நிறுத்து, உன் அதிகப் பிரஸங்கத்தை. உன் பிரஸங்கம் எனக்கு வேண்டாம்!

ஜஹ்னர்:— எதுவாயிருந்தாலும் நீ ஹிந்துக்களை இவ்விதமாக துன்புறுத்தக்கூடாது.

ஔரங்கஸீப்:— இதோ பார் ஜஹ்னர்! இன்னொரு முறை சொல்கிறேன். என் விஷயத்தில் யாராயிருந்தாலும் சரி, சகோதர — சகோதரியாயிருந்தாலும், தாய் தந்தையர்களாயிருந்தாலும் சரி, ஆப்த சிநேகிதர்களாயிருந்தாலும் சரி, தலைபோவதாயிருந்தாலும் சரி, அவர்களுக்குச் சரியான மரியாதை கிடைக்கும். நான் செய்வது நியாயமானாலும், அநியாயமானாலும், நான் கொலை செய்தாலும்கூட எனக்குத் தண்டனை விதிக்கவும் என்னை மெச்சிக்கொள்ளவும் அல்லா ஒருவர்தான் இருக்கிறார். எதுவாயிருந்தாலும் ஓர் மாதின் வார்த்தை இந்த அலம்கீர் பாதுஷா காதில் ஏறாது.

ஜஹ்னர்:—அண்ணா. ஆனால் மொகலாய ஸாம்ராஜ்யத்தை நாசமாக்குவதில் மிக்க சந்தோஷமோ?

ஔரங்கஸீப்:—ஜஹ்னர். என் பெருமையைப் பரிசோதிக்காதே.

ஜஹ்னர்:—அண்ணா, எப்பொழுதும் நியாயா நியாயங்களை விசாரித்தும் நாட்டிலுள்ள ஒவ்வொரு மதத்தினருக்கும் அவரவர் அனுஷ்டானங்களைச் செய்ய உரிமை கொடுத்து மனதை உல்லாஸமாக்குவது ராஜ காரியமல்லவா.

ஔரங்கஸீப்:—சீ போதும்! உள்ளே செல்.

ஜஹ்னர்:—அண்ணா, நாட்டில் எப்பொழுது அதர்மங்களும், அட்டூழியங்களும், அநியாயங்களும் தலைவிரித்தாட ஆரம்பிக்கின்றனவோ, அப்பொழுது சத்யம் தலை தூக்க இடமுண்டா அண்ணா? எப்போது ஒருவன் தான் தன் மனஸ் சாட்சிக்கு விரோதமாய் நடப்பதை உணர்ந்தும் அதை மாற்றிக் கொள்ளாது நடந்தால் அது நியாயமாகுமா? அல்லா கோயிலை இடிக்கச்சொன்னாரா? அல்லது ஜனங்களை கொலை செய்யச் சொன்னாரா?

ஔரங்கஸீப்:—ஜஹ்னர், எனக்குத் தாயும் தந்தையும், குருவும் என் மதம் தான். என் மதத்தில் எனக்குள்ள அன்பு யாருக்கும் இல்லை என்று, நான் நிச்சயமாய்ச் சொல்வேன். என்னை எவ்வளவு வேண்டுமானாலும் தூஷிக்கலாம். என் மதத்தை அவமதித்தால்............

ஜஹ்னர்:—சிறை வாசம்! வேறென்ன இருக்கிறது?

ஔரங்கஸீப்:—ஆம் நாளையிலிருந்து உனக்கு அதுவே ஜனனவாகும்! யாரங்கே!

(ரஹீம் வந்து நமஸ்காரம் செய்கிறான்)

ரகீம்:—ஹுஜூர் ஸர்க்கார்!

ஔரங்கஸீப்:—இழுத்துச்செல் இவளை.

ஜஹ்னர்:—சீ, தூர நில்! கேவலம் ஓர் நீசனுக்கு என் கையைப்பிடிக்க என்ன சுதந்திரமிருக்கிறது?

ஔரங்கஸீப்:—உம், இழுத்துச் செல் இவளை!

ஜஹ்னர்:-(திமிறிக் கொண்டு) அண்ணா! ஸ்திரீகளுக்கு, அதுவும் நம் குல ஸ்திரீகளுக்கு, அந்நிய மதத்தினரை பார்ப்பது மானக்குறைவல்லவா? அதிலும் நம் குலத்தவராயிருந்தால் எதிரில வருவது கேவலம் வேசித் தன்மையாயிற்றே, இப்போது அண்ணன் எதிரில் தங்கை அவமானப்படுவாளாகில் மிகவும் சந்தோஷமல்லவா? இதைப் பார்த்தும் உனக்கு ஒன்றும் புரியவில்லை. நீயும் ஓர் மகம்மதியனா? (போகிறாள்)

ஔரங்கஸீப்:— (சிரித்து) உற்றாருமில்லை, உறவினருமில்லை, எல்லோரையும் ஒருவர்பின் ஒருவராய் மண்ணுலகத்தில் சேர்ப்பித்தாய் விட்டது. இனி இஸ்லாமைச் சிறப்பிக்க வேண்டியதே. (போகிறான்)

இரண்டாம் காட்சி

அப்ஸல் கான் கூடாரம்: காலை நேரம் அப்ஸல் கான், சிவாஜி, சேவகன் முதலியோர் கூடியிருக்கின்றனர்.

அப்ஸல்கான் (பிரவேசித்து) இன்று என் வாழ்க்கையிலே ஓர் முக்யமான நாளாகும். இன்றோடு அம்மலையெலியை இப்பூனைக்கு இரையாக்கவேண்டியதே. தப்பிப்போவதற்கு ஓர்வித வழியுமில்லை......

சிவாஜி! என் கையிலிருந்து நீ எப்படி தப்பி போவாய்? மஹாராஷ்டிரர்களாம். அவர்களுக்கு ஓர் அதிபதியாம்? எவரேனும் வந்தால் அவர்களைப் பார்த்து மலையிடுக்குகளில் ஒளிந்து கொள்வதாம்! என்ன வீரம் அப்ஸல் கான்! இனி உன்னை வெல்லயார் இருக்கிறார்கள்? பீஜபூர், சுல்தானுக்கடுத்தவன் நீயாகப் போகிறாய், எதற்கும் அஞ்சுவானேன்.

சேவகன்:—(பிரவேசித்து) சத்ரபதி சிவாஜி வந்திருக்கிறார்.

அப்ஸல்கான்: சரி, வரச் சொல்.

(சிவாஜி வந்து உட்காருகிறார்.)

சிவாஜி:—கான் ஸாஹேப், நமஸ்காரம்.

அப்ஸல்கான்:—ஸலாம், ஷா சிவாஜி.

சிவாஜி:—தாங்கள் என்னை அழைத்தது எதற்காகவோ?

> மோகலாய சக்ரவர்த்தி ஷாஜஹானின் அந்திய காலத்தில் அவரது பிள்ளைகள் அவருக்கு எதிராகக் கிளம்புகின்றனர்: ப்ரிய புத்ரி ஜஹ்னாரா சிச்ருஷை செய்கிறாள்: ஷாஜஹான் இறக்கும் சமயம் மகாராஷ்டிர வீரர் சிவாஜி தமது ஆதிபத்தியத்தை ஸ்தாபிக்க முன் வருகிறார்; புதிய மோகலாய மன்னர் சிவாஜியைத் தந்திரத்தினால் பிடிக்கவேண்டும் என்று சூழ்ச்சி பண்ணுகிறார்: இது சிவாஜிக்குத் தெரிகிறது: அவர் இதற்குத் தயாராகவே இருக்கிறார்.

சுல்தானும், என் தந்தையும் சௌக்கியமாயிருக்கிறார்களா?

அப்ஸல்கான்:—ஷா இன்ஷா என்னை ஒரு காரணமாகத் தங்களிடத்தில் அனுப்பியிருக்கிறார்.........

சிவாஜி:—ஹா ஹா! தாராளமாய் எடுத்துக் கூறலாமே.

அப்ஸல்கான்:—தங்களுக்கு எடுத்துக் கூறுவதற்கு ஒன்றுமில்லை. எல்லாம் வல்லவராயிருக்கும் தங்களுக்கு நான் கூறப்போவது என்ன. தக்காணத்தில் எங்கள் அரசாட்சி அதிகப்பட்டு வருவது எல்லோரும் அறிந்த விஷயமே. தாங்கள் எங்கள் சுல்தான் அதில்ஷா விடத்தில் ஓர் பதவியையடைந்து சுல்தான் வேறு, நீர் வேறாக இல்லாமல், இஸ்லாமை எவ்வளவு கௌரவப்படுத்தக்கூடும்! தங்கள் மட்டும் எங்கள் சுல்தானிடம் ஆதரவாயிருப்பதாகில், நீங்கள்-ஜமேதாரோ அல்லது மான்சப்தாரோ-ஆகமாட்டீர்கள், ஆனால் சுல்தானே ஆவீர்கள்!

சிவாஜி:—அப்ஸல்கான், தங்கள் எதிரில் நிற்பது யாரென்று அறியாது என்னென்னமோ பேசுகின்றீரே!

அப்ஸல்கான்:—அறியாமலென்ன, அறிந்துதான் பேசுகிறேன். எங்கள் மதத்தைச் சேர்ந்தவரானால் எவ்வளவு நன்மை உண்டாகும் என்று எடுத்துரைத்தேன்.

சிவாஜி:—அதுதான் உங்களுக்கும் உங்களைச் சேர்ந்தவர்களுக்கும் மலையை உடைத்து எலியைப் பிடிப்பதுபோல் ஆயிற்றே.

அப்ஸல்கான்:—மலையைவிட்டு இறங்கிய எலிதான் பூனை கையில் சிக்கிவிட்டதே, இனி தப்ப வழியேது?

சிவாஜி:—அப்ஸல்கான், வாயைவிட்டுவிடாதே, நன்றாய் யோசித்துப்பார்.

அப்ஸல்கான்:—சிவாஜி, தங்கள் தகப்பனார் எங்கள் கையிலிருப்பதை யறியாது பேசுகின்றீர். நீங்கள் எனமேல் கைவைப்பீரானால் உங்கள் தகப்பனாரின் தலை எங்கள் சுல்தான் காலடியில் உருளும் என்பதை கவனத்தில் வையும். (உட்காருகிறான்)

சிவாஜி:—(தனிமையில்) ஆம், இவ்விடத்தில் நாம் நயமாகவே நடந்து கொள்ள வேண்டும். என்னவா யிருந்தாலும் என் தந்தையை இவர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டியதே. (அப்ஸல்கானைப் பார்த்து) கான் ஸாஹேப், எங்கள் தகப்பனார் இருக்க உங்கள் சுல்தான் சொல்வதை ஒப்புக்கொள்கிறேன்.

அப்ஸல்கான்:—(தனிமை) ஆம், பழம் நழுவிப் பாலில் விழுந்தது.

சிவாஜி:—என்ன? சந்தோஷம்தானே?

அப்ஸல்கான்:—கேட்கவும் வேண்டுமா?

(ஆவலுடன் அணைத்துக்கொள்ளும் சமயத்தில், அப்ஸல்கான் சிவாஜியின் கழுத்தை இறுகப் பிடித்துக்கொண்டு கத்தியையை ஓங்க, சிவாஜி திமிறிக்கொண்டு பிச்சுவாவினால் மாரில் குத்துகிறார்.)

மூன்றாம் காட்சி

ஒரு சாலை. மாலைப்பொழுது. சிவாஜி, தானாஜி, பஜனை கோஷ்டி நடக்கிறது. ஸெயிஷ்டகான் பிரவேசித்து உலாவுகிறான்.

ஸெயிஷ்டகான்:—என்னையும் பீஜபூர் சுல்தானின் சேனாதிபதி போல் நினைக்கிறான்போலிருக்கிறது. சபாஷ்! மொகலாய சக்ரவர்த்தி குடும்பத்தைச் சார்ந்தவன் நான் என்று அறியான் போலும். இவன் சூழ்ச்சிகளெல்லாம் என்னை என்ன செய்யக்கூடும்? சிவாஜி, இன்றோடு நீ ஒழிந்தாய்! (திரும்பி பார்த்து) என்ன அந்த கூட்டம்? (தானாஜி பாடுகிறான்) அது என்ன பாட்டு? அதனுள் வருவது யார். ஓர் கல்யாண கூட்டம் போலல்லவா இருக்கிறது! (உற்று நோக்கி) அல்ல, ஏதோ ஹிந்துக்களின் உத்சவம் போல் இருக்கிறது. சரி, நாம் இங்கிருப்பது சரியல்ல, நம் வீட்டிலிருந்தே இதைக் கவனிக்க வேண்டும். (சாலையில் ஓர் புறம் உள்ள வீட்டில் நுழைகிறான். தானாஜி பாடிக் கொண்டே வருகிறார்)

தானாஜி:—(பாட்டு முடிந்ததும்) சகோதர், சகோதரிகளே! நம் அன்னை பவானி மாதாவிற்கு ஏற்பட்டுள்ள துன்பம் எல்லோரும் அறிந்த விஷயமே. நம் ஆலயங்கள் நாசமடைந்து வருகின்றன. ஆனால் நம் அன்னையை நாம் பிரார்த்திக்க வசதிகள் நமக்கில்லை. ராமாயண, மஹாபாரத வீரர்களின் ரத்தத்தில் தோய்ந்த நாம் நம் வீரத்தை கை விடாது அன்னை பவானி மாதாவைத் தொழுது அன்னை காட்டிய வழியில் நம் தைர்யத்தைக் கை விடாது செல்வோம். பவானி மாதாவுக்கு......

எல்லோரும்:—ஜே.

தானாஜி:— ஜே பவானி மாதா (பாடுகிறார் அவர் பாட எல்லோரும் அவருடன் பாடுகிறார்கள். எல்லோரும் ஆனந்த பரவசமடைந்து கொண்டிருக்கும் சமயத்தில் ஸெயிஷ்டகான் பிரவேசிக்கிறான்.)

ஸெயிஷ்டகான்:— (தனிமை) என்ன இவர்களின் தைர்யம்? இன்னும் நொடிப் பொழுதில் தெரிந்து விடுகின்றது.

(சைகை செய்ய சிவாஜி ஸெயிஷ்டகான் வந்த வீட்டிலிருந்தே வெளியே வருகிறான்)

சிவாஜி:--பைத்தியக்கார ஸெயிஷ்டகான் என்னை நீ யாரென்று தெரிந்துகொள்ளவில்லை!

("ஜே பவானி" என்ற சப்தத்துடன் ஸெயிஷ்டகானின்மேல் பாய்கிறான். ஸெயிஷ்டகான் தன் கத்தியை எடுக்க மஹாராஷ்டிரர்கள் "ஜே" என்று மகம்மதிய வீரர்களின்மேல் பாய்கிறார்கள்; மோகலாய சைன்னியம் தோல்வியடைவதைப் பார்த்த ஸெயிஷ்டகான், அவ்விடத்தைவிட்டு ஓடுகிறான். சிவாஜி கத்தியை வீசி எறிகிறார்.)

நான்காம் காட்சி

சிறைச்சாலை : காலை நேரம்; ஜஹ்னரும் ரஸியாவும் இருக்கின்றனர்.

ஜஹ்னர்:—மாதா பிதாக்களை இழந்தும் சகோதரனால் துன்புறுத்தப்பட்டும் அவமதிக்கப்பட்டும் உயிர் வாழ்வானேன்? இந்த வாழ்க்கையை விட்டு உயிர் விடுவதே மேல். யார் இருந்தாலும் எனக்கு என்ன பயன்? நானோ ஓர் அநாதை, அல்லா என்னை ஏன் இவ்வாறு சோதிக்கிறாரோ தெரியவில்லையே! (ரஸியா உணவுடன் வருகிறாள்)

ஜஹ்னர்:—ரஸியா, எனக்கு ஏன் இவை எல்லாம்?

ரஸியா:—அம்மா, நீங்கள் உயிரை மாய்த்துக்கொள்ள பிரயத்தனப்பட்டபோது உங்களை அல்லா காப்பாற்றியது தங்களுக்கு நினைவு இல்லையா? உங்களை உலகத்தில் படைத்து நீடித்து வைத்திருப்பது எதற்காகவோ? இவை எல்லாம் வெறும் மனப்பித்து.

ஜஹ்னர்:—வெறென்ன இருக்கிறது ரஸியா?

ரஸியா:—அம்மா! சத்ரபதி சிவாஜி நம் ஆக்ராவுக்கு வரப் போகிறாராமே? இன்னும் என்ன என்ன செய்திகள் கிடைக்கப் போகின்றனவோ? அதைக் கேட்டு நீங்கள் சந்தோஷப்படலாமல்லவா?

ஜஹ்னர்:—(சந்தோஷத்துடன்) ரஸியா, சத்ரபதியா வரப்போகிறார்?

ரஸியா:—ஆம், பீகம் ஸாஹேப்.

ஜஹ்னர்:—(தனிமை) ஆஹா என்ன இனிமையான செய்தி! நெடுநாளாக என் மனதைக் கவர்ந்த மகராஜ் மகராஷ்டிர மன்னரே! தாங்கள் இவ்வடியாளை ஏற்றுக்கொள்ள மாட்டீரா! (ரஸியாவைப் பார்த்து) ஆனால் ரஸியா, அவர் எப்பொழுது வருகிறார்?

ரஸியா;—அம்மா: என்ன இவ்வளவு அவசரம்! பொறுத்தால் தெரிகிறது.

ஜஹ்னர்:— ரஸியா, சொல்ல மாட்டாயா? இது உனக்கு எப்படி தெரிந்தது?

ரஸியா:—குடி ஜனங்கள் பேச்சிலிருந்து இது தெரிந்தது. உங்கள் மனதிலிருப்பதை எனக்குச் சொல்லக் கூடாதா?

ஜஹ்னர்:—உன் மனதைப்போல் நினைத்துக்கொண்டாயா என்ன?

ரஸியா:—என் மனதில் என்ன இருக்கிறது. எல்லாம் தாங்கள் அறிந்த விஷயம் தானே?

ஜஹ்னர்:—ரஸியா உண்மையைச் சொல், ஒன்றுமில்லை.

ரஸியா:—பீகம்சாஹேப், தங்களிடம் நான் எதுவும் ஒளிக்கவில்லையே.

ஜஹ்னர்:—பாபம், சிறு குழந்தை, நீ என்ன அறிவாய்?

ரஸியா:—எனக்கு ஒன்றும் புரியவில்லையே!

ஜஹ்னர்:—புரியவில்லையா! சிறைக்கு வெளியே போனால் எல்லாம் புரிகிறது.

ரஸியா:—என்ன விளையாடுகிறீர்களே!

ஜஹ்னர்:—ஆம். உன் மனதை அவன் கவரவில்லை. உண்மையைச்சொல். நீ ரஹமட்டை காதலிக்கவில்லை.

(ரஸியா நாணத்தினால் தலை குனிகிறாள்)

ஜஹ்னர்:—ரஸியா உண்மையில்லையா அது? என்னைச் சொல்லப் பார்த்தாயே, நீ எவ்வளவு தூரத்தில் இருக்கிறாய்.

ரஸியா;—ஆம், பீகம்ஸாகேப், அவர் என் மனதைக் கவர்ந்ததென்னவோ வாஸ்தவமே. அவரை அடையவேண்டுமென்று என் மனம் கூறுகிறது.

ஜஹ்னர்:—ரஸியா! நீஙகள் இருவரும் ஒரு மனதாய் வாழ்க்கையின் கடமைகளைச் செலுத்தி ஆனந்தமாகக் கழிக்கலாம், உங்களை அப்படியிருக்க கடவுள் அருள் புரிந்திருக்கிறார். ஆனால் - ஆனால்-என்கதி வேறுதான் ரஸியா!

ரஸியா:—சத்ரபதி சிவாஜீ தங்களை ஏற்றுக் கொள்ள மாட்டாரா என்ன? தாங்கள் எந்த விதத்தில் அவருக்குத் தாழ்மைப் பட்டவர்.

ஜஹ்னர்:—ரஸியா, நானோ ஓர் முஸல்மான். அவரோ ஓர் ஹிந்து. அதிலும் தம் மதத்திற்கு தாழ்வு வராதபடி காப்பவர். நானோ கொடுங்கோல் புரிந்து இஸ்லாமை ஸ்தாபித்து வரும் அரசரின் சகோதரி. இருவரும் மதத்தில் ஜன்ம விரோதிகள். அப்படி இருக்க அவர் என்னை ஏற்றுக் கொள்வார் என்று மனப்பால் குடிப்பதா?

ரஸியா:—அம்மா! ஒவ்வொருவருக்கும் உலகத்தில் தங்களுடைய காதலுக்குகந்தவாறு மண வாழ்க்கை ஏற்படுகிறதா? ஆனால் காதல் என்பது வேரூன்றிவிட்டால் ஜாதி மதம் எதையும பொருட்படுத்தாமல் எதற்கும் உயர்வாக மதிக்கப்பட்டு வருகிறதல்லவா? தங்களுக்கு அவரிடத்திலுள்ள ப்ரேமை எனக்குத் தெரியுமம்மா? அவர் கட்டாயம் தங்களை ஏற்றுக் கொள்வார்.

ஜஹ்னர்:—நீ என்ன சொல்லியும் பயனென்ன? இந்த ராஜ்யத்தில்—பூமியில்—காதலை பலியிட முடியும். ஆனால் காதலுக்காக மதத்தைப் பலியிட முடியுமா?

ரஸியா:—அம்மா, உங்கள் மனமார்ந்த விஸ்வாஸத்தை அவர் அறிவாராகில் உங்களை ஏற்றுக் கொள்வது நிச்சயம்.

ரஹ்மட்:—(சிறைக்கு வெளியே இருந்த வண்ணம்) நாழியாகிவிட்டது. கதவைத் தாளிட்டு வேலையை மற்றவனிடம் ஒப்புவிக்கவேண்டும்.

ஜஹ்னர்:—(நகைத்து) ரஸியா, உன் நாயகன் கூப்பிடுகிறார், நாயகி போய்வா?

ரஸியா:—அம்மா, துக்கத்திலும் குறும்பு நம்மை விடவில்லையே.

[சிரித்துக்கொண்டே போகிறாள்.]

நான்காம் அங்கம் முடிந்தது.

(தொடரும்.)

சேலம் ஸ்ரீ விஜயராகவாச்சாரியார். "இந்தியாவின் தொண்டு கிழவர்" இவருக்கு காசி ஹிந்து சர்வகலாசாலை வெள்ளி விழாவின் போது கௌரவ "டாக்டர் அப்லாஸ்" பிருதம் வழங்கப்பட்டது.

சர்வகலாசாலை முன்னேறி வந்திருப்பதாகவும், இதற்குக் காரண பூதங்களான உபஅத்யக்ஷகர் முதலியோர் சரியான விதத்தில் தங்களது காரியத்தைத் தொடர்ந்திருப்பதாகவும் அவர்கள் மாணவர்களுக்காக செய்திருக்கும் சௌகர்யங்கள் மதிப்புக்குரியவைஎன்றும், மேலுட்டு சர்வகலாசாலைகளில் மாணவர்கள் புத்தகப் படிப்பினால் விஷயம் அறியவில்லை யென்றும், ஒருவருக்கொருவர் தொடர்பு ஏற்பட ஏற்பட அது நன்மையையே பயப்பதாகவும் அதேமாதிரி இந்த சர்வகலாசாலையிலும் இருப்பதாகவும் அவர் சொன்னார். "அகில இந்திய சர்வகலாசாலை, என்று அழைக்கப்பட இதைவிட வேறு எதற்கும் தகுதி கிடையாது. இதில் சேர்ந்துள்ள 2000 மாணவர்களில் பாதிக்குமேல் வெளி மாகாணங்களிலிருந்து வந்தவர்கள்" என்றார் இர்வின் பிரபு. இர்வின் பிரபு தமது பிரசங்கத்தில் சர்வகலாசாலை கடன்பட்டிருப்பதையும் பற்றிப் பிரஸ்தாபித்தார். இந்தக் கடனைத் தீர்ப்பதற்காக அவர் இந்திய ஸர்க்கார் 5 லக்ஷ ரூபா கொடுத்திருப்பதாகவும் கூறினார்.

அபிவிருத்தி திட்டங்கள்

இதுவரை வெளியான விவரங்களிலிருந்து சர்வகலாசாலை செய்து வந்த சேவையின் சிறப்பும் வெளியாகும்: பல பெரியார்களது பாராட்டு மொழிகள் உண்மையை எடுத்துக் காட்டுபவை. இர்வின் பிரபு மேற்கண்டபடி பேசிய காலத்தில் சர்வ கலாசாலைக்கு 135 லக்ஷ ரூபாய் நன்கொடை வாக்களிக்கப்பட்டது. இதில் 105 லக்ஷ ரூபா அதுவரை வசூலாயிருந்தது. சர்வகலாசாலைக் கட்டிடங்களைக் கட்டுவதற்காக முதலில் கடன் வாங்க நேர்ந்தது. சட்டம், வைத்தியம், விவசாயம், சரித்திரம், வர்த்தகம், பொருளாதாரம், ராஜ்யம், இன்ஜினிரிங் ஆகிய எல்லாப் பகுதிகளிலும் இங்கு பாடம் போதிக்கப்படுகிறது. ஸ்திரீகளுக்குத் தனியாக கலாசாலை கட்டவும அவசியம் ஏற்பட்டது: ஆஸ்பத்திரி ஏற்படுத்தவும் நிர்ப்பந்தம் பிறந்தது: சாஸ்திர விஞ்ஞான ஆராய்ச்சிப் பகுதிகளும் அபிவிருத்தியடைந்தன. முற்போக்கு விரைவில் ஏற்பட்டது. பிரதி வருஷமும் வருமானம் 7 லக்ஷ ரூபாய் இருந்த போது செலவு மட்டும் 10 லக்ஷத்திற்கு அதிகமாகிக்கொண்டேவந்தது. மாணவர்களிடமிருந்து கிடைக்கும் சம்பளத் தொகையும் மிகவும் சொற்பமே. கூடியவரையில் சிக்கனமாக நிர்வாகம் நடத்தப்பட்டும் பொறுப்பின் மிகுதி கடனைச் சுமத்தியது. ஆகவே இதற்கப்புறம் பல வருஷங்களாக சர்வகலாசாலை நிர்வாகம் சிரம சாத்தியமாகவே நடந்துவந்திருக்கிறது. இந்த நிலைமையில் பண்டித மதன் மோஹன மாளவியா மற்றொரு கோடி ரூபாய் நிதியை வேண்டி ஒரு வேண்டுகோளை விடுத்தார். 1936-ம் வருஷம் அவர் விடுத்த விஞ்ஞாபனத்திற்கு இப்போது நல்ல ஆதரவு கிடைத்து வருகிறது: இந்த கோடி ரூபாய் வந்து சேர்ந்தவுடன் இன்னும் அதிக அபிவிருத்தி செய்யவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கோவில் கட்டவேண்டும்; இன்னும் அதிகப்படி மாணவர்கள் தங்க விடுதிகளைக்கட்ட வேண்டும்: ஆசிரியர்கள் தங்கியிருக்க இடம் அமைக்க வேண்டும்: சம்ஸ்கிருத கலாசாலை நிர்மாணம்: சர்வகலாசாலை லைப்ரரியும் ம்யூஸியமும் இருப்பதற்கான மாளிகைகள்; சர்வ கலாசாலைக்காகப் பிரத்தயேக அச்சுக்கூட ஸ்தாபனம; இதர சாஸ்திரிய பகுதிகளை ஆரம்பித்தல் —இந்த காரியங்களைச் செய்ய பண்டித மாளவியா உத்தேசிக்கிறார். தமது 45-ம் ஆண்டில் இந்த மஹத்தான கைங்கர்யத்தில் பண்டித மாளவியா முனைந்தார்; 35 வருஷ காலம் ஓடிப் போய் விட்டது; இதில் 25 ஆண்டுகள் சர்வகலாசாலை பரிபாலனத்தில்; அவருக்கும் வயது 80 பூர்த்தியாகியிருக்கிறது; தேகத்தில் தளர்ச்சி ஏற்பட்ட போதிலும் சர்வகலாசாலையில் இருக்கும் சிரத்தை அபாரம்; சர்வகலாசாலை அவருக்குச் செல்வக் குழந்தை; தமக்கு வயது அதிகமாகி விட்டது. இனி யார் அதைப் பாதுகாப்பார்கள் என்பதே அவரது கவலை. சென்ற வருஷம் ஸர் எஸ். ராதாகிருஷ்ணன் இந்த சர்வகலாசாலையின் கௌரவ உப அத்யக்ஷகர் பதவியை பண்டிததோத்தமரது வற்புறுத்தலுக்கிணங்கி ஏற்றுக் கொண்டார்; இதற்காக ஸர் ராதாகிருஷ்ணன் கல்கத்தா சர்வகலாசாலையுடன் தாம் கொண்டிருந்த நீடித்த தொடர்பையும் துறந்தார்; காசிக்கு வந்து சேர்ந்தார்; மாளவியாஜியின் உள்ளமும் குளிர்ந்திருக்கிறது; பிக்ஷாடனத்திற்குப் பிரசித்திபெற்ற பண்டிதருக்குப் பின் பலரது பஹுமானத்திற்கும் ப்ரீதிக்கும் பாத்திரரான ஸர் ராதாகிருஷ்ணன் இந்த விச்வ வித்யாலயத்திற்காகச் சிரமப்பட்டு வருகிறார். இவரது முய

(28-ம் பக்கம் பார்க்க)



சர்வகலாசாலையின் கோபுரத் தோற்றம்.



1. ஓரியண்டல் காலேஜ் ஹாஸ்டல்.



2. ஸ்திரீகள் கலாசாலை.

வேவுகாரியின் வலை

★

நியாயவாதி

எழுதியது

★

சென்ற மஹாயுத்தம் ஆரம்பமாவதற்கு நான்கு வருஷங்களுக்கு முன்பு, பிரிட்டனும் பிரான்ஸும் ருஷ்யாவும் சேர்ந்து ஒரு ரகசியத்திட்டம் தயாரிக்க உத்தேசித்து அதற்காக ஏற்பாடுகள் நடந்து வந்தது. ஜெர்மன் வேவுகாரிய ஸ்தாபனம் இதைக்கண்டு பிடித்தது! ரகசியக் கூட்டம் இது காரணமாக நடைபெறமலே போய்விட்டது. இவ்விதம் பெரிய ராஜாங்கங்கள் ஒரு பெண் மணி காரணமாக எப்படி பின் வாங்கின என்பது இக்கதையில் காணப்படுகிறது.

1910-ம் வருஷம் ஐரோப்பிய வல்லரசுகளிடை பரஸ்பரம் உண்மையான நல்லுணர்ச்சியும் நம்பிக்கையும் இல்லையென்றுதான் கூறவேண்டும். ஒவ்வொரு ராஜாங்கமும் தன்னுடைய ரர்ணுவ பொருளாதார நிலைமையை வலுப்படுத்திக் கொள்வதில் சிரத்தையாயிருந்ததுடன் மற்றைய ராஜாங்கங்களின் அந்தரங்கங்களை அறிந்து கொள்வதில் ஆவல் கொண்டது.

ஜெர்மனியை ஆண்ட கெய்ஸர் வில்லியம் இரண்டாமவனது வேவு இலாகாவில் ஒப்பற்ற உளவுகாரர்கள் இருந்தனர். அவர்களதுஸாகஸங்களையும்ஆச்சரியமான தந்திரங்களையும் விவரித்து பல அதிசயமான கதைகளை எழுதலாம். உலகத்திலேயே மிகச் சிறந்த வேவுகாரர்கள் என்ற பிரஸித்தி அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. அவர்களுக்குப் புலப்படாத அரசியல் ரகசியம் ஒன்றுமில்லை. எந்தநாட்டில் எந்த சமயத்தில் எந்த ராஜதந்திரி என்ன அலுவலில் இருந்தான் என்பதைப் பற்றிய உண்மை விவரங்கள் அவர்களுக்கு முன் கூட்டியே கிடைத்துவிடும்.

ஆதலால் மாண்டி கார்லோ (Monte carlo) என்ற இடத்தில் ரஷ்ய சக்கிரவர்த்தியின் நம்பிக்கைக்கும் பாத்திரமான கே என்ற ராஜ புத்திரனும், பிரெஞ்சு அன்னிய நாட்டு மந்திரியும் சந்திக்கப் போவது ஜெர்மன் வேவு இலாகா அதிகாரிக்குத் தெரிந்தபின், அவன் சும்மா இருப்பானா? உடனே அவன் தன்னுடைய ஆட்களில் மிகத் திறமை வாய்ந்தவனான கிரேவ்ஸ் என்பவனை அழைத்தான். "நீ உடனே மாண்டிகார்லோவுக்குப் புறப்படவேண்டும். அங்கே ரஷ்ய—பிரெஞ்சு ராஜதந்திரிகளது சந்திப்பு ஏற்படப்போகிறது. இங்கிலாந்திலிருந்து யாரேனும் வந்து அவர்களுடன் கலந்து கொள்ளக்கூடும். நீ அவர்களது சம்பாஷணையை அறிந்துகொண்டு வரவேண்டியது. இந்தா உன் சிலவுக்குப் பணம்" என்று 20 ஆயிரம் மார்க்கு மதிப்புள்ள நோட்டுக்களைக் கொடுத்தான்.

அவன் மேலும் கூறியதாவது, "உனக்கு உதவி செய்ய நான் எம்மா சீமாட்டியை அனுப்புகிறேன். அவளை நீ மாண்டிகார்லோவில் சீக்கிரம் சந்திப்பாய். நீ அவளைப் பார்த்தது கிடையாதா? இதோ இருக்கிறது அவளது புகைப் படம்" என்று ஒரு அழகிய யுவதியின் புகைப் படத்தை வேவுகாரனிடம் அவன் கொடுத்தான்.

அன்றே கிரேப்ஸ் மாண்டிகார்லோவுக்குப் பிரயாணமானான்.

2

மாண்டி கார்லோ என்பது பிரான்சுக்கும் இத்தாலிக்கும் நடுவிலுள்ள ஒரு அழகிய ஸ்தலம். ஆரோக்கியத்தைக் கொடுக்கும் இடம் என்பது ஒரு புறமிருக்க, அங்கேயுள்ள சூதாட்ட நிலயங்கள் அது குபேரபுரி தானோ என்று காண்பவர் திகைக்கும்படியாய்த் தோற்றத்தைக் கொடுத்தன. ஐரோப்பாவிலுள்ள உயர்தர சமூக மக்களை அங்கே பார்க்கலாம.

அந்த அழகிய நகரத்தில் தோன்றிய கிரேவ்ஸ் தென்னாப்ரிக்காவிலிருந்து புறப்பட்டு வந்த சுரங்க முதலாளியாய் நடிக்கலானான். அவனுக்கு போயர் பாஷை நன்றாகத் தெரியும். தென்னாப்ரிக்காவில் அவன் வெகுநாட்கள் வசித்தவனானதால்; அந்தப் பிரதேசத்தாருடைய நடையுடைபாவனைகள் அவனுக்கு நன்றாய்த் தெரியும். ஆதலால் அவன் ஆடத் துணிந்த வேஷம் பொருத்தமாயும், வெற்றிகரமாயும் இருக்கும் என்பதைப்பற்றி அவனுக்குக் கவலையில்லை,

மாண்டிகார்லோவிலுள்ள ஒரு உன்னதமான ஹோட்டலை தனது வாசஸ்தலமாய் வைத்துக் கொண்டபின் கிரேவ்ஸின் அடுத்த காரியம் எம்மா சீமாட்டியை கண்டுபிடிப்பதே. அதில் அவனுக்கு எவ்விதமான சிரமமும் அவள் வைக்கவில்லை. ஏனெனில் அவளே அவனைத் தேடிக் கொண்டு அவன் இருந்த ஹோட்டலுக்கு வந்தாள்.

ஏற்கனவே அவளது புகைப் படத்தை பார்த்துள்ள கிரேவ்ஸ் அவளுக்கு முகமன் கூறினான். அவள் அழகிய முகமும் கண்ணைக்கவரும் வனப்பும், இன்பகரமான பேச்சும் அவள் எடுத்துக் கொள்ளும் காரியம் எதுவாகிலும் அதில் அவளுக்கு வெற்றி ஏற்படுவதற்கு உபயோகமான சாதனங்களாக இருந்தன. ஆரம்பத்திலேயே இதை உணர்ந்த கிரேவ்ஸ் அவளது உதவியால் தான் எடுத்துக்கொண்ட காரியம் நிச்சயமாய் சித்தி பெறும் என்று நம்பிக்கை கொண்டான்.

ருஷ்யாவிலிருந்து வந்த கே என்ற ராஜபுத்திரனும், பிரெஞ்சு அன்னியநாட்டு மந்திரியும் இங்கிலாந்திலிருந்து வந்த ராஜதந்திரியும் சீக்கிரம் சந்தித்துப் பேசுவார்கள் என்ற செய்தி உண்மையானது தான். ஏனெனில் அம்மூவரும் அந்த சமயத்தில் மாண்டி கார்லோவில் இருந்தனர். அவர்கள் வெவ்வேறு ஹோட்டல்களில் இருந்தனர் என்பதை யுணர்ந்த பின் கிரேவ்ஸும் அவனது புதிய சிநேகிதியான எம்மாவும், தங்களது வேவை எப்படி ஆரம்பிப்பது என்பதைப் பற்றி யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தனர்.

3

மறு நாள் சாயந்திரம் கிரேவ்ஸும் எம்மாவும் ஒரு உன்னதமான ஹோட்டலில் சிற்றுண்டி யருந்தி கொண்டிருந்தனர். வேவுகாரியின் உடைகளின் அற்புதமான சோபையையும் அவள் அணிந்த வைரங்களின் பிரகாசத்தையும் விட அவளது இயற்கைச் சாயலின் சுந்தரமே காண்போர்களது கண்களை கவரும் சக்தியுடன் விளங்கியது.

பக்கத்து மேஜையில் சிற்றுண்டி யருந்திக் கொண்டிருந்த கே இளவரசனின் பார்வை அவள் மீது சென்றது அப்புறம் கேட்பானேன்? அவள் மீது பதிந்திருந்த தனது கண்களை அவன் வேறு பக்கம் திருப்பவில்லை.

மோகனாஸ்த்ரப் பிரயோகத்தால் நல்ல பலன் ஏற்பட்டு விட்டது என்பதை வேவுகாரன் உணர்ந்து கொண்டான். உடனே அவன் பக்கத்தில் நின்ற பணியாளைக் கூப்பிட்டு கோபம் ததும்பிய குரலில் அதோ இருக்கிறவர் எங்களை கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார். அப்படிப் பார்ப்பது கண்ணியமானது அன்று என்று சொல்லு" என்று கே இளவரசனை சுட்டிக்காட்டினான்

ரஷ்ய ராஜதந்திரிக்கு அவ்வார்த்தைகள் பெருத்த அவமானத்தையும் ஆத்திரத்தையும் அளித்தன. ஆனால் அவன் என்ன பதில் கூறுவான்? வாயைத் திறவாமல் அவன் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

பத்து நிமிஷங்களுக்குபின் ஒரு வேலைக்காரன் எம்மா முன்பு தோன்றினான். அவளைப் பணிந்து அவளிடம் ஒரு கடிதத்தை நீட்டினான்,

ரஷ்ய இளவரசனால் எழுதப் பட்டது அக்கடிதம். அதில் அவன் தனது நடத்தையில் ஏதேனும் தவறு இருந்தால் அதற்காக தன்னை மன்னிக்கும்படி அவளை வேண்டிக் கொண்டிருந்தான்.

கடிதத்தைப் படித்து விட்டு எம்மா புன்னகை புரிந்தாள், "உனது யஜமானிடம் எனக்கு யாதொரு கோபமும் இல்லை என்று சொல்" என்றாள்.

அந்த சந்தர்ப்பத்தை கைவிட புருஷனான கே இளவரசன் இழப்பானா? அவனே நேரில் எம்மா முன்னர் தோன்றினான், தன்னை அவளுக்கு அறிமுகப் படுத்திக் கொண்டான். தன்னுடன் விருந்துண்ணும்படி அவளை வேண்டிக்கொண்டான்.

இப்படி ஆரம்பமான நட்பு வளர்பிறை போல் வளர்ந்தது. ரஷ்ய இளவரசனையும் ஜெர்மன் வேவுகாரியையும் உல்லாஸமான வேளைகளில் சேர்ந்து காணலாம். அவனை விட்டுப்பிரிந்து சென்றகிரேவ்ஸ் பிரெஞ்சு மந்திரியின்மீது மோகூல் வைக்கலானான். அம் மந்திரியும், பிரிட்டனிலிருந்து வந்த ராஜதந்திரியும் ரகசியமாய் சந்தித்துப்பேசின சந்தர்ப்பங்களை அவன் அறிந்துகொண்டான். ஆனால் அவர்கள் எது விஷயமாகப் பேசினர் என்பதைப்பற்றி நிச்சயமான விவரங்கள் அவனுக்குக்கிடைக்கவில்லை.

இந்த சந்தர்ப்பத்தில் அவனுக்கு எம்மாவிடமிருந்து தகவல் கிடைத்தது. தனது காதலனான ரஷ்யஇளவரசன் வசித்த அறைக்குப் பக்கத்து அறையைத்தான் வாடகைக்கு எடுத்துக்கொண்டு அதில் வசித்து வருவதாயும் அந்த இரு அறைகளுக்கும் நடுவிலுள்ள சுவரில் ஒரு துவாரம் செய்ததால், மூன்று ராஜ தந்திரிகளும் அங்கே சந்தித்துப் பேசின. சந்தர்ப்பங்களில்தான் ஒட்டுக்கேட்பது சுலபமாயிருந்தது என்றும் அவள்எழுதியிருந்தாள். தான் செவியுற்ற சம்பாஷணைகளின் சாராம்சத்தை அவள் குறிப்பிட்டு எழுதியிருந்தாள்.

இரண்டு நாட்களுக்குப்பின் வேவுகாரி தனது கூட்டாளி முன்பு அவசர அவசரமாய்த் தோன்றினாள். தன்னுடைய கையுறையிலிருந்து ஒரு சிறுகாகிதச் சுருளை எடுத்தாள். "இதை நீ பத்திரமாய் பெர்லினிலுள்ள நமமுடைய காரியாலயத்தில் சேர்ப்பிக்கவேண்டும். ஆங்கில-பிரெஞ்சு மந்திரிகளை பார்த்துவிட்டு அந்த மடையன் (கே இளவரசன்) இந்த காகிதத்தை தன் சட்டைப்பையில் போட்டுகொண்டு நேராய் என்னிடம் வந்தான். ஹோட்டலில் விருந்தளித்தான், அதன் பின் என்னுடன் நடனம் ஆடினான். நடனத்தின்பொழுது இதை அவன் பையிலிருநது எடுதது விட்டேன். நேராய் உன்னிடம் வந்தேன்" என்றாள்.

"இனி நாம இங்கிருப்பது அபாயமல்லவா?" என்றான் கிரேவ்ஸ்.

(16-ம் பக்கம் பார்க்க)

மூன்று கேள்விகள்

★

மஹாத்மாஜியின் பதில்

★

"ஒரு சகோதரி எனக்குப் பின் கண்ட பிரச்னைகளை அனுப்பி இருக்கிறள்: 1. ஒரு ஸோல்ஜர் ஒரு ஸ்திரீ மீது பலாத்காரத்தைப் பிரயோகித்தால் அந்த ஸ்திரீ பதிதையாகிவிடுவாளா? 2. இந்த ஸ்திரீயை சமூகம் கண்டித்து உதறித் தள்ளிவிடுமா? 3. இம்மாதிரி சந்தர்ப்பங்களில் ஸ்திரீகளும் பொது ஜனமும் செய்யவேண்டியதென்ன?" இந்தக் கேள்விகளைத் தமது "ஹரிஜன்" பத்திரிகையில் பிரசுரித்து, இவற்றிற்குத் தமது பதிலை மகாத்மா கொடுத்திருக்கிறர். ஒவ்வொருவரும் கட்டாயம் படித்தறியவேண்டியவை.

★

உலகத்திற்கே இப்போது சோதனைக் காலம் ஏற்பட்டிருக்கிறது. யுத்தத்திலிருந்துஒருவரும் தப்பமுடியாது. ராமாயண மஹாபாரதக்கதைகள் கவிகளின் கற்பனு சக்தியினுல் எழுதப்பட்டனவாயினும் கிரந்த கர்த்தாக்கள் வெறும் கவிகள் மட்டுமல்ல: அவர்கள் தீர்க்க தரிசிகள்என்றே கருதவேண்டும். அவர்கள் எவற்றைச் சுட்டிக் காட்டினரோ அவை தற்போது பிரத்யக்ஷமாக நடக்கின்றன. ராவணர்கள் ஒருவரோடொருவர் சண்டைபோடுகின்றனர்: நிகரிலா பலத்தையும் நிதர்சனமாக்குகின்றனர். ஆகாயத்திலிருந்து மகாகடுமையான பாணங்களைப் பொழிகின்றனர். யுத்தகளத்தில் அவர்களுக்கு சாத்தியமில்லாத தீரச்செயலே தற்சமயம் கிடையாது.

தேக வலிமை மமதை

மனுஷ்யன் இவ்விதம் சண்டையிட மாட்டான். தேவர்களும் இம்மாதிரி போர் புரியமாட்டார்கள் எனபது திண்ணம். கொடிய மிருகங்கள் தான் இவ்வாறு செய்யும். தம் தேகவலிமையால் மமதையுற்ற ஸோல்ஜர்கள் கடைகளைக் கொள்ளையடிப்பதுடன், ஸ்திரீ ஸல்லாபம் புரியவும் அவமானம் கொள்வதில்லை.. யுத்த காலத்தில் இம்மாதிரி காரியங்களைத் தடுக்க ஸர்க்காருக்குப் போதிய சக்தி இருப்பதில்லை. ராணுவமே முக்கிய அலுவலைக் கவனிக்கிறபடியால் ஸர்க்கார் அவர்கள் செய்யும் காரியங்களைக் கண்டு சும்மா இருந்துவிடுகின்றனர். தேசம் முழுதும் ராணுவமயமாக்கப்பட்டால், அந்ததேசத்தில் ராணுவ முறைகளும் அந்த தேசத்தில் நாகரீகத்தில் இடம்பெற்று விடுகின்றன: ஆகவே ஒரு ஸோல்ஜர் ஸ்திரீகளை யண்டுவது அங்கு கண்டனத்திற் குரித்தாவதில்லை. ஆனுல் இந்தியா இந்த நிலைமைக்கு வர பல தலைமுறைகளாகும்.

மூன்று கேள்விகள்

ஒரு சகோதரி எனக்குப் பின் கண்ட பிரச்னைகளை அனுப்பியிருக்கிருள்.

1. ஒரு ஸோல்ஜர் ஒரு ஸ்திரீ மீது பலாத்காரத்தைப் பிரயோகித்தால், அந்த ஸ்திரீ பதிதையாகி விடுவாளா?

2: இந்த ஸ்திரீயை சமூகம் கண்டித்து உதறித்தள்ளி விடுமா?

3. இம்மாதிரி சந்தர்ப்பங்களில் ஸ்திரீகளும் பொது ஜனமும் செய்யவேண்டியதென்ன?"

நம் அனுதாபம்

உண்மையில் அந்த ஸ்திரீயின் ஒழுக்கத்திற்குப் பங்கம் ஏற்படுகிறதாயினும், அந்த பங்கம் அவளை சமூகத்திலிருந்து ப்ரஷ்டம் பண்ண முடியாது: அவளிடம் நாம் அனுதாபம் காட்டவேண்டியதவசியம்: ஏனெனில் அவளுக்கு மகத்தான கொடுமை இழைக்கப்பட்டிருக்கிறது: ஒரு புண்பட்டவருக்கு எப்படி நாம் உதவுவோமோ அதே மாதிரி அந்த ஸ்திரீயின் புண்ணை ஆற்றவும் நாம் முன்வரவேண்டும்.

பொதுஜன அபிப்பிராயம்

இந்த தீய செயலுக்கு ஒரு ஸ்திரீ தானுகவே இணங்குவாளேயாகில், அவளை நாம் கண்டிக்கவேண்டும். பரஸ்திரீ கமனமும், பலவந்தப்படுத்துவதும் ஒன்றல்ல. இவ்விதம் நாம் இந்த விஷயத்தைப் பரிசீலித்தால் இதுவரைபோல் நாம் விஷயத்தை ஒளித்து வைக்க மாட்டோம். இவ்விதம் ஸ்திரீகளிடம் நடந்துகொள்ளும் புருஷர்களுக்கு எதிராக பொதுஜன அபிப்பிராயத்தை நாம் வளர்த்து அதைப் பிரயோகிக்க முடியும். பத்திரிகைகளும் கிளர்ச்சியை இடைவிடாமல் நடத்தினுல் ஸோல்ஜர்களும் சிப்பாய்களும் இவ்விதம் நடந்துகொள்ளமாட்டார்கள்: அவர்களது மேலதிகாரிகள் கெட்ட நடத்தையைக் கட்டாயம் தண்டிப்பார்கள்.

என்னுடைய யோசனை

ஸ்திரீகள் நகரங்களை விட்டு கிராமப் புறத்திற்குப் போய் அங்கு சேவை செய்ய வேண்டும் என்பதுதான் நான் விடுக்கும் யோசனை. கிராமங்களில் அவர்களை ஒருவரும் உபத்ரவிக்கமாட்டார்கள். இதில் ஒரு விஷயம்: அவர்கள் மிகவும் எளிய வாழ்க்கையை மேற்கொண்டு ஏழைகளுடன் வித்யாசமின்றி உறவாட வேண்டும். ஆனுல் தாங்கள் பணக்காரர்கள் என்பதைக் காட்டுவதற்காக பட்டுத் துணிகளையும், நகைகளையும் அணிந்துகொண்டால், அவர்கள் ஒரு ஆபத்திலிருந்து தப்பி மற்றொரு ஆபத்தில் தான் அகப்பட்டுக்கொள்வார்கள். நகரங்களிலேயே தங்கியிருக்கவேண்டி நேரிடுபவர்களுக்கு இந்த என் யோசனை உபயோகமற்றது.



புது டில்லியில் சிந்து பிரதம மந்திரி கான் பஹதூர் அல்லா பக்ஷ் தலைமையில் அகில இந்திய அஜாத் முஸ்லிம் மகாநாட்டுக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றபோது எடுத்தது. (என். என். பி. எஸ்.)

நிர்ப்பயமாயிருக்க வேண்டும்

நிர்ப்பயமாக இருப்பதை முதலில் ஸ்திரீகள் அறிய வேண்டும். தனது கற்பே தன் கவசம் என்று உணர்ந்து நிர்ப்பயமாக இருக்கும் ஸ்திரீயை எவரும் மானபங்கம் செய்ய முடியாது. மனுஷ்யன் எவ்வளவு மிருகத்தன்மை வாய்ந்தவனுயிருந்தபோதிலும், அவளது பரிசுத்தியின் பிரகாசத்தைக் கண்டு அவமானம் அடைந்து போவான். இவ்வாறு தங்களைக் காத்துக்கொண்ட ஸ்திரீகள் பலர். இதை எழுதும் போது எனக்கு இருவர் ஞாபகம் வருகிறது. ஆகவே இந்த வியாசத்தைப் படிக்கும் ஸ்திரீகளை, தைர்யத்தை மேற்கொள்ளும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்போது அவர்கள் பயத்தையே அறியமாட்டார்கள். இப்போது, அவர்களுக்கு பலவந்தத்தைப் பற்றிய ஞாபகம் வந்ததுமே உடல் நடுங்குகிறது: தன் தைர்யத்தை ஒரு ஸ்திரீ அனுபவ பூர்வமாக சோதித்துக்கொள்ள வேண்டுமென்பது அவசியமில்லை: பல்லாயிரக் கணக்கான பேர்களுக்கு-லக்ஷக் கணக்கானவர்களுக்குக் கூட இத்தகைய அனுபவம் ஏற்படாதது நம் பாக்கியம். ஒவ்வொரு ஸோல்ஜரும் ஒரு மிருகமல்ல: கௌரவ புத்தியை இழப்பவர் வெகு சொற்ப பேர்கள் தான். பாம்புகளில் 20 சத விகிதம் தான் விஷ முள்ளவை: அதிலும் கடிப்பவை மிகவும் சில. அவையும் மிதித்தால் தான் கடிக்கின்றன. பாம்பைப் பார்த்தவுடனேயே பயத்தால் நடுங்குபவர்களுக்கு இந்த ஞானம் பயன் படாது. பெற்றோர்களும், புருஷர்களும், ஸ்திரீகளுக்கு தைர்யத்தைக் கற்பிக்கவேண்டும்: கடவுளிடம் அழியாத நம்பிக்கை இருந்தால் இது தானுகவே கிட்டும். பகவான் நம் பார்வைக்குப் புலப்படாவிட்டாலும், நம்மை எந்த சமயத்திலும் கை விடுவதில்லை. இந்த நம்பிக்கை எவருக்கிருக்கிதோ அவரைப் போன்ற தைர்யசாலி இருக்க முடியாது.

செய்யவேண்டியது

இவ்விதமான நம்பிக்கையும் தைர்யமும் ஒரு நாளில் கிடைத்துவிடா, இதற்கிடையில் நாம் வேறுசில மார்க்கங்களையும் தேடவேண்டும். ஒரு ஸ்திரீ பலவந்தப்படுத்தப்பட்டால், அவளுக்கு ஹிம்சை அல்லது அஹிம்சைபற்றிய நினைவே ஏற்படாது. தற்காப்புதான் அவளுக்கு பிரதானம்: தன் மானத்தைக் காப்பாற்றிக் கொளவதற்காக, தனக்குதோன்றிய எல்லாவித முறைகளையும கைப்பற்ற அவளுக்கு சுதந்திரம் உண்டு, அவளுக்கு பகவான் நகங்களையும் பற்களையும் கொடுத்திருக்கிருர்; தன் முழுபலத்தைக் கொண்டு அவள் அந்த சாதனங்களை உபயோகிக்கவேண்டும். அவசிய' மேற்பட்டால் அவள் உயிரையும் துறக்க வேண்டும். எந்த ஸ்திரீ புருஷர்களுக்கு மரண பீதி இல்லையோ, அவர்கள் தங்களைக் காத்துக்கொள்வதுடன் தங்களது உயிரைத்தியாகம் செய்வதன் மூலம் பிறரையும் காக்கமுடியும். உண்மையில் நாம் மரணத்தைக்கண்டு மிகவும் அஞ்சுகிறேம்: ஆகையால் தான் இறுதியில் நாம் அதிக தேகவலிமை கொண்டவர் முன் அடங்கி நிற்கிறேம். எதிரி முன் சிலர் தலைவணங்குவர்: சிலர் லஞ்சம்கொடுத்துப் பார்ப்பார்கள்: இன்னும் சிலர் கேவலமாக நடந்து கொள்வார்கள்: மற்றும் சிலர் எவ்வித அவமானத்தையும் சகித்துக்கொண்டிருப்பார்கள். சில ஸ்திரீகள் உயிரை விட உடலே பிரதானம் எனக்கருதுவார்கள். இதை நான் குற்றம் காணும் நோக்கத்துடன் குறிப்பிடவில்லை. மனித ஸ்வபாவத்தைத்தான் நான் இங்கு சுட்டிக்காட்டுகிறேன். நாம் கேவலமாக நடந்துகொள்வதும், ஒரு ஸ்திரீ ஒருவனது காமப்பித்துக்குக் கீழ்ப்படிவதும்,நாம் எப்படியாவது நமது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்று கருதுவதற்கு அத்தாக்ஷிகளாகும். ஆகையால் உயிரை இழப்பவன் தான் அதைக்காப்பாற்ற முடியும்: "தேன த்யக்தேன புஞ்ஜீதா:" இந்த சிறந்த சுலோகத்தை ஒவ்வொருவரும் மனப்பாடம் பண்ணவேண்டும்: இதை உச்சரிப்பது மட்டுமே பலன் தராது. இதைப்பற்றி நாம் தீர்க்கமாக சிந்திக்கவேண்டும். சுகமாக வாழ விரும்புவர், வாழ்க்கையில் ஆசை கொள்ளக்கூடாது: இந்த குண விசேஷம் நம்மிடம் தோன்றவேண்டும்.

வேடிக்கை பார்ப்பதா?

ஸ்திரீகள் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி இதுவரை பிரஸ்தாபித்தாகிவிட்டது; இந்த மாதிரி குற்றங்கள் நடப்பதைப் பார்க்கும் புருஷன் செய்யவேண்டியது என்ன? இதற்குப் பதில் முந்தியே கூறப்பட்டிருக்கிறது. அவன் சும்மா வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது: அவன் அந்த ஸ்திரீயை ரக்ஷிக்க வேண்டும்: அவன் போலீஸார் உதவியை நாடக்கூடாது: ஒரு ரயில் வண்டியில் இருக்கும் அபாய எச்சரிக்கைச் சங்கிலியைப் பிடித்திழுக்கக்கூடாது. அஹிம்சையை அனுஷ்டிப்பது அவனுக்கு சாத்தியமானுல், அந்த அனுஷ்டானத்திலே அவன் ஆத்ம தியாகம் செய்வான். அந்த ஸ்திரீயையும் ஆபத்திலிருந்து விடுவிப்பான். அஹிம்சையில் நம்பிக்கையில்லாமலும் அதை அனுஷ்டிக்க சக்தியில்லாமலும் அவன் இருந்தால் தன் பூரண பலத்தைக் கொண்டு அவளைக் காப்பாற்றவேண்டும். இந்த இருவித மார்க்கங்களிலும், தன் உயிரைத் துறக்க அவன் சித்தமாக இருக்க வேண்டும்.

"துணிய வேண்டும்"

வயது மிகுந்து வலிமையையும் பற்களையும் இழந்த நான் அஹிம்சா தர்மத்தைச் சுட்டிக் காட்டி, ஒரு ஸ்திரீயின் கௌரவத்தைக் காப்பாற்ற அசக்தனுக இருப்பேனுகில், ஏன் மஹாத்மா பதவியைப் பரிகாசமாகக் கருதுவார்கள்: அவமதிப்பார்கள்: அதைப் பறித்துக் கொள்வார்கள். நானும் என் போன்றவர்களும் அஹிம்சா தர்மப் பிரயோகத்தாலோ அல்லது பலப் பிரயோகத்தாலோ முன் வந்து எங்களது உயிர்களைக் கொடுத்தால், ஸ்திரீயை ஹிம்சையிலிருந்து விடுவிக்க முடியும்: ஆனுல் அவளது மான பங்கத்தை உயிருடன் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம்.

'தன் கையே தனக்குப் பலம்'

சம்பவத்தைப் பார்ப்பவர்கள் பற்றி இவ்வளவு போதும்! இந்த தீர உணர்ச்சி நம் நாடு பூராவும் பரவி, ஸ்திரீகள் பலவந்தப்படுத்தப்படுவதை எந்த இந்தியரும் ஸகித்துக் கொண்டிருக்க மாட்டார் என்பது பிரசாரமாகிவிட்டால், எந்த ஸோல்ஜரும் அவர்களை அண்டமாட்டான் என்பது நிச்சயம். இத்தகைய உணர்ச்சி நம்முள் இல்லாதது நமக்கு பெருத்த அவமானமேயாகும். நமக்கிருக்கும் இந்த இழுக்கை அகற்ற பலர் சித்தமாகக் கிளம்பினுல் அது சற்று ஆறுதல் அளிக்கும். ஸர்க்காரிடம் சலுகையுள்ளவர்கள், அதிகாரிகள் தகுந்த நடவடிக்கையெடுக்க முயற்சிப்பார்கள். ஆனுல் தன் கை பலத்தைப்போன்ற பலம் கிடையாது! இந்த சமயத்தில் நமது சக்தியும் கடவுளின் கிருபையும் தான் நமக்கு ஆதரவு அளிக்க வல்லன!

பிரிந்தவர் கூடினால்...!

மத்திய கீழ்த்திசைப் பிரதேசத்தில் பிரிட்டிஷ் படையில் சேவை செய்து மேஜர் ராண்டோல்ப் சர்ச்சில் இங்கிலாந்து திரும்பியே தும் அவரது மனைவி அவரை [illegible], மேஜர் சர்ச்சில் பிரதம மந்திரியின் புத்திரர் ஆவார். (இ. என். பி.)

இங்கே கவனியுங்கள்

உங்கள் காலத்தையும், பலத்தையும், பணத்தையும் மற்றவர்களுடன் கலந்து பேசி என் வீண் செய்கிறீர்கள். எங்களுடைய மாயக் கண்ணுடியின் உதவியால் நீங்களே எஜமானுகிவிடுவீர்கள். இந்த மாயக் கண்ணுடி கைலாசத்திலுள்ள உயர்ந்த மூலிகையைக் கொண்டு தயார் செய்யப்பட்டது. இதன் சக்தியைக் கண்டால் நீங்கள் ஆச்சரியமடைவீர்கள். நீங்கள் ஆணுயிருந்தாலும் சரி, பெண்ணுயிருந்தாலும் சரி, எத்தனை வயதானவர்களானுலும் சரி, எந்த ஜாதியாயிருந்தாலும் சரி, ஜோதிஷர் உதவியை நாடாமலே நடந்தவைகளையும்,நடக்கப்போவதையும் கண்டறியலாம். இதைக் கொண்டு இறந்துபோன பந்துக்களுடனும், சிநேகிதர்களுடனும் கூடப்பேசலாம. உங்களுக்குச் சிநேகமுள்ளவர்கள் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் பார்க்க முடியும். இதைவைத்துக்கொண்டால் யுத்தத்தில்வெற்றி, வியாபாரம கலியாணம் முதலியவற்றில் வெற்றியடையலாம். புதையல் இருக்குமிடத்தையும் கெட்டுப்போன சாமான்களும்,அதிர்ஷ்டநம்பர்களும் கண்டுபிடிக்கலாம். இது உலகத்திற்கு ஒரு உண்மையான சிநேகிதன். விலை ரூ. 2/8. ஸ்பெஷல் ரூ. 4/8. போஸ்டேஜ் தனி. இன்றேஒன்றுக்குஎழுதுங்கள். பர்மா,சிலோன் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். பலனில்லையேல் பணம் வாபீஸ்.

SHRI MAHAMUNI JYOTISH ASHRAM, (S. M. W) DINA NAGAR. PUNJAB.
(B P S)

PARASURAM'S
சித்த எண்ணெய்.

இந்த எண்ணெயில் பதினெட்டு சித்தர்களால், அடி, நடு, முடி, என்ற முப்பு குரு பஸ்பம் சேர்ந்திருக்கிறபடியாலும், ஷை எண்ணெயிலுள்ள மூலிகைகளுக்கு நூறு மடங்கு சக்தி ஏற்பட்டு இருக்கிறபடியாலும் மூலிகை சத்துக்கள், ஆல்கலிஸ், ஆல்கலாய்ட்ஸ் (Alkalis, Alkaloids) களாக மாற்றப்பட்டு இருக்கின்றன.

குணமாகும் வியாதிகள்:- அஷ்ட குன்மங்கள், வாயு கட்டிகள், பாண்டு ரோகம், மூல வியாதி. சூலைகள், சர்ம ரோகம், மூத்திர தோஷம், பெரும்பாடு, தலை நோய், வயிற்றுப் புண், கீல்வாயு பிடிப்பு, பித்த பாண்டுகள், சொறி ரெணங்கள், ஸ்திரீகளுக்கு மாத விடாய்களில் உள்ள எவ்வகை தோஷங்களையும் நிவர்த்தி செய்யக் கூடியது. சிறு குழந்தைகளும் உட்கொள்ளலாம்.

விலை ½ அவுன்ஸ் ரூ. 1.

பரசுராம் சித்த ஔஷத ஆச்ரமம்
திருவண்ணுமலை.
(பிராஞ்சு: 59-A, லாயிட்ஸ் ரோட்,ராயப்பேட்டை மதராஸ்)

ஏஜண்டுகள்:—
மதராஸ்: அப்பா & கம்பெனி.
மதுரை: டி. என். சோக்கலிங்கம் பிள்ளை & ஸன்ஸ்.
காரைக்குடி: சாரதா ஸ்டோர்ஸ்.

சிறுவர் பகுதி

★

புத்திசாலி புக்குண்டன்

★

எம். எஸ். கமலா

முன்னொரு காலத்தில் காம்போஜ நகரத்தில் கருணாகரன் என்னும் மன்னன் நீதித் தவறாமல் ஆண்டு வந்தான்.

கருணாகர சக்ரவர்த்திக்கு காலையில் எழுந்ததும் நல்லவர் முகத்தைப் பார்ப்பது வழக்கம். அரச சபையில் அதிகக் கஷ்டமான தீர்ப்பு ஏற்படக் கூடாது: பகையரசர்கள் வந்து தன் ராஜ்யத்தை பிடிக்கக் கூடாது: இப்படி எல்லாம் மனோபாவம் அவருக்குண்டு.

கருணாகரனும் காலையில் எழுந்ததும் தன் உப்பரிகை மேல் வந்து காலை சூரியனின் செம்பொன் கிரணங்களையும், சிருங்கார சோலைகளையும், சிறு சிறு கூட்டங்களாய் சுறு சுறுப்புடன் இரை தேடிச் செல்லும் பக்ஷி ஜாலங்களையும் பார்ப்பான். பிறகு தான் வேறு எவ்வேலையும், இது தினசர்யை.

ஒரு நாள் வழக்கப்படி அவன் உப்பரிகை மேல் வந்து நின்று, காலைக்காக்ஷியை ஆவலுடன் பார்த்



துக் கொண்டு நிற்கும் போது, ஓர் குருவிக் கூட்டம் 'கீச்சு கீச்சு' என்று சப்தித்துக் கொண்டு பூமியிலிறங்கிற்று. அதை வெகு இன்பத்துடன் பார்த்துக்கொண்டு அவைகள் செல்லும் இடத்தை கவனிக்கலானான்.

அரண்மனை வீதியில் இன்னும் கதிரோனின் கிரணங்கள் வீசவில்லை. நிழல் படர்ந்து, ஜில்லென்றிருந்தது. அந்த பசும் புல் மேட்டில் பூதேவி தாலாட்ட புக்குண்டன் என்னும் பிச்சைக்காரச்சிறுவன் நிர்மலமாய் கந்தைத் துணியும், கப்பரையும், கலைந்த கூந்தலுமாய்த் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் முதல் நாள் சம்பாதித்த சோற்று மூட்டையை நாயோ, பூனையோ உருட்டித்தின்று விட்டுச் சென்றது போக மீதி இரைந்து கிடந்தது. சோற்றுப் பருக்கைகள் வெளேரென்று அவனை சுற்றி சிதறிக் கிடந்தன. அந்த பருக்கைகளை பொருக்கத் தான் குருவிக்கூட்டம் வந்து இறங்கியது.

குருவிகளின்குரலோசை புக்குண்டனை எழுப்பி விட்டது. அவன் எழுந்து கைகால்களை முறித்து கொட்டாவி விட்டுக் கொண்டு ஆகாயத்தை நிமிர்ந்து பார்த்தான், விடிந்து எவ்வளவு நேரமாகியதோ என்ற விசாரத்துடன்.

கருணாகரன் புக்குண்டனின் அழுக்கடைந்த முகத்தையும் அடங்காமல் விரைத்து நிற்கும் கூந்தலையும், தரித்திர தேவனின் ஆத்ம நண்பனுமான அந்த விகார ரூபத்தைக் கண்டதும் வெகுண்டு, காலை எழுந்ததும் இப்பேர்ப்பட்ட கஷ்ட ஜீவியைத் தரிசித்ததால் தனக்கு ஏதாகிலும் கஷ்டம் நேரிடினும் நேரிட்டலாம், அப்பேர்ப்பட்ட கஷ்டத்திற்கறி குறியாகிய அந்த கஷ்ட ரூபியையே அழித்து விட்டுத் தான் வேறு வேலை என்று திர்மானித்து உடனே தன் காவலாளியை அழைத்து, தெருவில் வீற்றிருக்கும் புக்குண்டனைக் காண்பித்து, அவனை, சிரச்சேதம் செய்து விடும்படி உத்திர விட்டான். சக்ரவர்த்தியின் உத்திரவு சிரச்சேதத்திற்கு மேல் பட்டதில்லையன்றோ?

பாவம்! இன்பமாய் இயற்கை யன்னையின் இடையில் தூங்கி, இயற்கை பள்ளி எழுச்சி பாட்டுகளால் எழுப்பப்பட்டு வீற்றிருக்கும் புக்குண்டனை அரண்மனை சேவகன் வந்து அரசனின் தண்டனையைச் சொல்லியழைத்தான். "புக்குண்டன் மருண்டான். சற்று நேரம் யோசனை செய்து "சரி, அப்படியானால் நான் கொல்லப்படுவதற்கு முன் அரசனை ஒரு முறை பார்க்க வேண்டும். நான் அரசனை பார்த்ததேயில்லை இந்த கஷ்டப்படும் ஜன்மத்திலிருந்து என்னை விடுவித்த கருணாகர சக்ரவர்த்தியை கண்டு களித்து பின் இறக்கிறேன்'' என்று சொன்னான்.

அரசனும் இறக்கும் ஓர் ஆத்மாவை திருப்தி செய்யும் நோக்கத்துடன் புக்குண்டனை தன்னைக்காண அனுமதியளித்தார். அரசனை அணுகிய புக்குண்டன் அரசனை வணங்கி 'மஹாராஜா! என்னை இவ்வளவு சீக்கிரம் கஷ்டத்தின் விலங்குகளிலிருந்து வேருக்கி என்னை சுகம் பெறச் செய்தீர். என் மனதில் ஒன்றிருக்கிறது. அதை சொல்லி விட்டுப் போகிறேன். உலகில் யாரும் எப்பொழுதும் சிரஞ்சீவியாய் இருந்ததில்லை. இருக்கப் போவதுமில்லை. அதற்கு உதாரணம்.

"பட்டி நஷ்ட:
பாரவி நஷ்ட:
பிக்ஷுர் நஷ்ட:
பீமசேனோபி நஷ்ட:
புக்குண்டோ அபயம்
பூபதிர் நஷ்ட:''

"மாப்பெரும் கவியாகிய பட்டபாணர் இறந்தார். அவர் செய்த காவ்யங்கள் இறக்கவில்லை. பாரவியும் அப்படியே, பிக்ஷுர் பிச்சைக்காரனும் இறந்தான். அவன் செய்து வந்த பிச்சைத் தொழில் இறக்கவில்லை. அசுராதி அசுரர்களை எல்லாம் அடக்கி கொன்ற பீமசேனனும் இறந்தான். புக்குண்டனாகிய நான் இறந்ததும் அடுத்தபடி பூபதியாகிய நீங்கள் இறந்துதானாக வேண்டும். என்னை பார்த்ததால் உங்களுக்கு ஏதாவது கஷ்டம் நேர்ந்து விடுமோ என்ற பயத்தால் என்னைக் கொன்றால் அடுத்த முறை பூபதியாகியஉங்களுக்கே'' என்றான்.

ஒன்றும் தவறு செய்யாமலிருக்கும் போதே சிரச்சேத தண்டனை. சிரச்சேத தண்டனைக்கு மேல் பட்ட தண்டனை எதுவுமில்லை. அப்படி இருக்க மனதிலிருப்பதை சொல்லி விட்டு மாள்வதில் ஒன்றும் தவறில்லை என்று தைரியத்துடன் அவன் சொன்னான்.

புக்குண்டனின் சமயோசித புத்திக்கு வியந்த கருணாகரன் அவனுக்கு கருணையுடன் உயிர்ப் பிச்சை யளித்து அவனுக்கு அரண்மனையிலேயே வேலையும் கொடுத்தான்.

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

எம்மா தலையை ஆட்டினாள், "உடனே இதைவிட்டு நாம் ஓடவேண்டும், இல்லாவிட்டால் போலீசார் நம்மைத்தேடி வருவார்கள். களவையுணர்ந்தபின் அந்த முட்டாள் சும்மா இருக்க மாட்டான். நான் ஸ்விட்ஸர்லாண்டுக்குப் புறப்படப் போகிறேன்'' என்றாள்.

"நான் இத்தாலிக்கு இன்றையே புறப்படுவேன்'' என்றான் வேவுகாரன்.

இத்தாலிய எல்லையை நோக்கி ஓடிய ரயிலில் ஒரு முதல் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்த கிரேவ்ஸ், எம்மா அளித்த காகிதங்களை கவனமாய்ப் படிக்கலானான்.

பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா என்ற மூன்று நாடுகளும் ஜெர்மனியின் பலத்தை ஓங்கவொட்டாமல் செய்வதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிய குறிப்புகள் அதில் இருந்தன அது மட்டுமல்ல; பிரெஞ்சு குடியரசுத் தலைவரும், ரஷ்ய சக்கிரவர்த்தியும் பிரிட்டிஷ் அரசரும் ரகசியமாய் சந்தித்துப் பேசுவதற்கும் அதில் திட்டம் போடப்பட்டிருந்தது. மூன்று ராஜ்யாபதிகளது இரகசிய பிரயாணங்களையும் சந்திப்பையும் பற்றிய கால அட்டவணையும் அதில் காணப்பட்டன.

ஆனால் இந்த ரகசிய தஸ்தாவேஜு ஜெர்மன் வேவுகாரனது திறமையின் பயனாய் ஜெர்மன் சக்கிரவர்த்தியின் கையில் சிக்கிய பின், அதில் காணப்பட்ட ரகசிய ஏற்பாடு கைவிடப்பட்டது. நேச ராஜாங்கங்களது அதிபதிகளது ரகசிய சந்திப்பு நடைபெறவில்லை.

கர்பத்தை நிறுத்த

லில்லி கர்ப்பத்தடை மாத்திரைகளை வருஷத்தில் 4 நாள் சாப்பிடுங்கள். இம்மாதிரி வருஷத்திற் கொருதரம் சங்கடமான கர்ப்பத்தடை மருந்துகள், பிஸாரி முதலியன வேண்டாம்.

ஆயுள் முழுதிற்கும் உத்தரவாதம். ஆரோக்யம், மாதவிடாய் இவற்றைப் பாதிக்காது. விலை ரூ. 3. வி. பி. செலவு தனி.

விவரங்களுக்கு:
LILY PRODUCTS Mfg Co.,
COLABA BOMBAY.
கடிதம் ஆங்கிலத்தில்தான்எழுதவேண்டும்

ஜோதிர்மண்டலம்

★

விஷு ஆ பங்குனி மாதம்

★

விசாகம்

இப்பக்கத்திலுள்ள படம், சென்னையில் இம்மாதம் முன்னிரவில் நமக்குப் புலப்படும் நக்ஷத்திரக் கூட்டங்களைக் காட்டுகின்றது. படத்திலுள்ளபடியே முதல் தேதி யன்று இரவு 10-30 மணிக்கும், 15-ம் தேதி யன்று 9-34 மணிக்கும், 30-ம் தேதி யன்று 8-35 மணிக்கும் நக்ஷத்திரங்கள் நமக்குத் தென்படும். சென்னைக்கு வெகு தூரத்திலில்லாத ஊர்களுக்கும் இப்படத்தை உபயோகிக்கலாம்,

உபயோகமுறை:— எந்த திசையை நோக்கி நிற்கிறோமோ அந்த திசை அடிப்பாகமாக வரும்படி படத்தை திருப்பி வைத்துக்கொள்ளவேண்டும். அப்பொழுது நமக்கு எதிரிலுள்ள நக்ஷத்திரக் கூட்டங்களை படத்தில் அடிப்பாக முதல் நடுவரையில் காணலாம்.

ஆகாயத்தின் கிரீடம்

ஆகாயத்திலுள்ள பல சிறு கூட்டங்களில், வட வானில் சிம்மக் கூட்டத்திற்கு வடக்கேயுள்ள கிரீடக் கூட்டம் ஒன்று தன் பெயருக்கேற்றாற்போல், அதன் நக்ஷத்திரங்கள் அழகாக ஒரு கிரீடத்தின் உருவை ஆகாயத்தில் சித்திரித்துக் காட்டுகின்றது. பண்டைக்கால கிரேக்கர்கள், இக்கூட்டத்தை ஒரு புஷ்பஹாரமாகக் கருதினர். அநேகமாக மற்ற எல்லா தேசத்தவர்களும் இக்கூட்டத்தை ஒரு கிரீடமாகவே நினைத்தார்கள்.

இதைப்பற்றிய கிரேக்க சரித்திரம் பின்வருமாறு தெஸியூஸ் எனும் மகாவீரன் கிரீட் தேச அரசனின் மகளாகிய அரியாட்னேவைக் காதலித்து அவளுடன் வசித்து வருகிறான். ஆனால் அவன் திடீரென்று அவளை விட்டுவிட்டுப் போய்விடுகிறான். இதனால் அவள் மனமுடைந்து வருத்தப்பட்டுக்கொண்டு இருக்கிறாள். அப்பொழுது, ஒரு கிரேக்கக் கடவுள் அவளை ஆறுதல் செய்வதற்காக இக்கிரீடத்தை அவளுக்கு கொடுத்ததாக கிரேக்கர்கள் கொள்கை.

இக் கூட்டத்திலுள்ள பிரகாசமான நக்ஷத்திரங்கள். ஆறு நக்ஷத்திரங்கள் ஒரே கோர்வையாக வளைந்து அமைந்திருக்கின்றது: அவைகளில் பிரகாசமானது அக்கோர்வையின் நடுவில் இருக்கிறது. இதை "கிரீடத்தின் முத்து'' என்றும் சொல்வார்கள். இது இரண்டாம் தர நக்ஷத்திரம், இதனிடமிருந்து நமக்கு ஒளி வந்து சேர சுமார் 53 வருஷங்கள் ஆகின்றன. இதற்கடுத்தாற்போலுள்ள பிரகாசமான நக்ஷத்திரம் ஒளியில் மூன்றும் தரத்தைச் சேர்ந்தது. சுமார் 270 வருஷங்கள் கழித்தே இதனிடமிருந்து இன்று புறப்பட்ட ஒளிக் கிரணம் நம் பூமியை வந்து சேரும். டெலஸ்கோப் வழியாக இவ்விரு நக்ஷத்திரங்களையும் பார்த்தால், அவை ஒவ்வொன்றும் இரு நக்ஷத்திரங்களாக விளங்கும். அதாவது, இரண்டு நக்ஷத்திரங்கள் ஒன்றையொன்று சுற்றி வருகிறது. ஒன்று பிரகாசமானது. மற்றொன்று நம்பார்வைக்கே புலப்படுகிறதில்லை. இவ்விரு நக்ஷத்திரங்களும் ஆகர்ஷண சக்தியால் பிணிக்கப்பட்டு ஒன்றையொன்று சுற்றி வருகிறது.

இம்மாதம் குறிப்பிட்டுள்ள நேரத்தில் கிரீடம், கிழக்கே உதயமாகி இருப்

ஜோதிஷத்தில் பிரியமுள்ளவர்கள் பொருட்டு இம்மாதத்திய ராசி சக்கரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

பங்குனிமீ 1உ

சூரியன் புதன் கேது		சனி குஜன் குரு	
	12உ—மீன—சூரியன் 16உ—கும்ப—சுக்கிரன் 19உ—மீன—புதன்		
சுக்கிரன்			ராகு

FREE

ART PHOTO ALBUM

French Art Photos of beautiful young girls in charming poses are sent against /5/- postage stamps with one album free. Limited albums left Order now lest you be disappointed.

LONDON COMMERCIAL CO.
P. B 165 (S. M. M.) LAHORE (INDIA)

(E. A. B.)

தோந்திரவளிக்கும் மூல வியாதிக்கு சீக்கிரம் நிவர்த்தி

நமைச்சல், வலியை இப்புகழ்பெற்ற மெழுகு போக்கும்.

மூல வியாதியால் வீக்கம், எரிச்சல் முதலியவற்றால் அவதிப்பட்டால் நிச்சயம் ஜாம்-பெக் உபயோகியுங்கள். ஆயிரக்கணக்கானவர்களுக்கு இவ்வியாதி நிச்சயம்குணமளித்திருக்கின்றது. வீங்கியுள்ள நரம்புகளைக் குணப்படுத்தும். ஜாம்-பெக் ஒரு பெட்டி வாங்கி, தினசரி இரண்டு அல்லது மூன்று முறை உபயோகியுங்கள். எல்லா மருந்து வியாபாரிகளாலும் ரூ. 1 அல்லது 2—4 வீதம் விற்கப்படுகின்றது. ஏஜண்டுகள்:—மெஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது

அமிர்தாஞ்சன்

போலிகள் எச்சரிக்கை

"சுதேஹமித்திரன்"

எல்லாவித நோய்களையும் தீர்க்கும்.

அமிர்தாஞ்சன் லிமிடெட்,
பம்பாய் - சென்னை - கல்கத்தா.

3 உயர்தர டானிக்குகள்

யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.
(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி)



பதைக் காணலாம். மற்ற கூட்டங்களில், முக்கியமாக ரிஷபமும், மிதுனமும் மேற்கே அழகாக விளங்குகின்றன. சிம்மம் மிகவும் கம்பீரத்துடன் உச்சியில் வீற்றிருக்கிறது அதன் முக்கிய நக்ஷத்திரம் மகம் மத்திய வானில் பிரகாசிக்கின்றது. தென் கிழக்கே கன்னியும் துலாமும் காணப்படுகின்றன. கன்னியின் சித்திரை நக்ஷத்திரத்தின் ஒளி நம் பார்வையைக் கவர்கின்றது,

வடவானில் முக்கிய காக்ஷி ஸப்தரிஷி மண்டலமே, இதன் அழகிய நக்ஷத்திரங்களின் பொது அமைப்பு, வெகுகாலமாக மனிதனின் உள்ளத்தைப் பரவசம் செய்திருக்கின்றது. தெற்கே மிகப் பெரிய கூட்டங்களாகிய ஆர்கோ நேவிஸ்ஸும் ஸென்டராலும் அடிவானத்தருகே காணப்படுகின்றன. தென்மேற்கே ஸிரியஸ் தன் உயர்ந்த ஒளியை வீசுகிறது, ஓரியன் மேற்கே அடிவானத்தை அணுகிவிட்டபின். பொதுவில் இம்மாதத்தின் இரவுக்காக்ஷி மற்ற மாதங்களை விட உயர்ந்தது என்றே சொல்ல வேண்டும்.

கிரஹங்களின் நிலை

புதன்:—மாத ஆரம்பத்தில் புதன் கும்பக் கூட்டத்தில் காணப் படுகின்றது. இக் கூட்டத்தைக் கடந்து மீனத்தை (2-4-42) 20-ம் தேதியன்று அடைகிறது: இக்கிரஹம், பொதுவாக சூரியனுக்கருகேயே இம்மாதமெல்லாம் இருப்பதால் நம் பார்வைக்குப் புலப்படுவது துர்லபம்.

சுக்கிரன்:—சென்ற மாத கடைசி வாரத்தில் தன் ஒளியின் சிகரத்தையடைந்த சுக்கிரன் இம்மாதம் முதல்வாரமெல்லாம் இந்த சிறந்த பிரகாசத்துடனே கீழ் வானில் சூரிய உதயத்திற்கு முன் தோன்றுகிறது, நாளுக்கு நாள் வெகு சீக்கிரமே உதயமாகி சூரியன் தோன்றும் வரையில் சுமார் 3 மணி நேரம் சுக்கிரன் காக்ஷி அளிக்கிறது, விடியற்காலையில் எழுந்திருப்பவர்கள். ஒருவராலும் இதன் பிரகாசத்தின் அழகில் ஈடுபடாமல் இருக்க முடியாது. முதல் வாரத்திற்கப்புறம் சுக்கிரன் தன் ஒளியைக் கொஞ்சம் கொஞ்சமாக இழக்க ஆரம்பிக்கிறது. இருந்தபோதிலும், மற்ற எல்லா நக்ஷத்திரங்களையும் விட பன்மடங்கு அதிகப் பிரகாசமாகவே இது என்றும் தோன்றும் மாத முதலில் மகரத்திலும், 19-ம் தேதிக்கப் புறம் கும்பத்திலும் இக்கிரஹம் ஊர்ந்துவரும்.

குஜன், குரு, சனி, உரானஸ் இந்த நான்கு கிரஹங்களும், ரிஷபத்தில் இம்மாதம் தங்கியிருக்கின்றன. இவைகளில் உரானஸ் நம் பார்வைக்குப் புலப்படாது. குருவே, இக்கிரஹங்களுள் பிரகாசமானது. அதற்கடுத்தாற்போல் சனி, அதற்குப் பிறகு குஜன். குரு, குஜன், சனி இம் மூன்று கிரஹங்களும் மிதுனத்தை நோக்கியே நகர்ந்து வருகின்றன. மாத முதலில் சனிக்கும் குருவுக்கும் நடுவே குஜன் காணப்படுகிறது. குஜனின் வேகம், மற்ற இரண்டையும்விட அதிகமாகையால், நாள் செல்லச் செல்ல குஜன், குருவை அணுகிவருகிறது. ஏப்ரல் மாதம் 4-ம் தேதியன்று அது குருவிற் கடுத்தாற்போல் காணப்படும். இவைகளினிடையேயிருக்கும் தூரத்தில் சுமார் 3 சந்திரன்களை அடுத்தடுத்து வைக்கலாம். அதற்கப்புறம் குருவைக் கடந்து குஜன் செல்கிறது. மாதக் கடைசியில் குரு, குஜனுக்கும், சனிக்கும் இடையே காணப்படும், இக்கிரஹங்களின் சஞ்சாரம் இம்மாதம் கவனிக்கத்தகுந்தது.

நெப்டியூன், கிரஹம் இம்மாதமும் கன்னியிலேயே ஊர்ந்து வருகிறது.

சந்திரன், ஆகாயத்தில் உலவி வருகையில் கீழ்க்கண்ட தேதிகளில் கிரஹங்களினருகே காணப்படும்.

மார்ச்சு மாதம்

15உ—புதனருகில்
21உ—சனியருகில்
22உ—உரானஸருகில்
23உ—குஜனருகில்
23உ—குருவினருகில்
31உ—நெப்டியூனருகில்

ஏப்ரல் மாதம்

11உ—சுக்கிரனருகில்

இம்மாதம் 3-ம்தேதி (16-3-42) ஒரு பார்சுவ சூரிய கிரஹணம் சம்பவிக்கிறது. ஆனால் இக்கிரஹணம் இந்தியாவில் நமக்குத் தெரியாது.

CATARACT

and all Eye diseases cured radically by COCONAUT Brand LOTUS Honey World-wide Reputed and Tested. ½ Dram Re. 1-4. 1 Dram Rs. 2

ULCERINE

A sovereign remedy for all sorts of Boils. Piles, Sinus. Fistulls, Carbuncles, Gangrenes, Foul-ulcers operated wounds, etc. Bottle Rs. 1-4 For these products All India Karachi Congress & Lucknow Govt. Exhibitions awarded medals Free details from:

DADHA & Co., P. T. Madras.

மாருதி

ஜன்ம நக்ஷத்திர பலன், தினசரிக் குறிப்பு-அதிருஷ்ட எண், ரேஸ், பஞ்சு, நூல், பொன், கோதுமை ஷேர் மற்றும் எல்லா வஸ்துக்களின் மார்க்கெட் எதிர்காலம், இதில் வெளி வரும். மாதப் பதிப்பு பிரதி 1 அணா. எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டு தேவை.

மாருதி ஆபீஸ், திருத்தணி.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

மிஸஸ் ச. கோ. இ.

காதர்மீரா சாயபு,

ஹெட் நர்ஸரி தோட்டம், சேலம் S.

ஒட்டு மாங்கன்களும், பழச்செடிகளும், இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகளுமிருக்கின்றன. கேட்லாக் இனாம்.

கவலைவேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

அறிவிப்பு.

1942-ம் ஆ மார்ச்சு மீ 7உ முதல் எமது வியாபாரத்தை தற்காலிகமாக நிறுத்தியுள்ளோமென்றும், சில மாதங்களுக்குப பின் திரும்ப ஆரம்பிப்போமென்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். பாக்கியை வசூலிக்கவும், கொடுக்க வேண்டிய தொகைகளை பட்டுவாடா செய்யவும் உள்ளூர் விலாசத்தில் ஏற்பாடு செய்துள்ளோம் எமது அபிமானிகள் அனைவரும் ஆதரவளித்து வந்ததற்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம.

பாபாலால் & கம்பெனி,

வைர வியாபாரிகள், ஜூவெல்லர்கள்

ராட்டன் பஜார் — பார்க்டவன், மதராஸ்,

நமது தொடர் கதை

ஸ்ரீகாந்தன்

சரத்சந்திரர் எழுதியது.

(ஸ்ரீ கு.ப.ராஜகோபாலன் மொழிபெயர்த்தது)

முன் கதைச் சுருக்கம்

சிறுபிராயத்தில் இந்திரநாதனுடன் சேர்ந்து ஸ்ரீ காந்தன் தனது இளமைப் பருவத்தை மிகவும் துணிகரமாகவும் நிர்ப்பயமாகவும் கழித்ததுடன் சமூகத்தை விரோதிக்கும் விதமாகவும் நடந்து கொள்கிறான். இதற்கப்புறம் ஸ்ரீகாந்தன் ஓர் நாள் தனது பழைய நண்பனான ஜமீன்தாரின் வீட்டில் பியாரியைச் சந்திக்கிறான். பியாரிக்கு ஸ்ரீ காந்தனிடம் விசேஷ ப்ரீதி: பிறகு அவன் வேறு இடம் கிளம்பி வழியில் ஒரு சந்யாஸியை அடைந்து சில காலம் தங்கி விட்டு அவரிடமிருந்து பிரிகிறான். ஸ்ரீ காந்தனுக்கு தேக அசௌக்யம் ஏற்படுகிறது. இந்தச் செய்தியை யறிந்து பியாரி அவனது உதவிக்கு வருகிறாள். பியாரி வீட்டிற்குப் போன அவன் அங்கு குதூஹலத்தைப் பார்க்கிறான. பிறகு அவன் பியாரிடம் தன விவாகம், ரங்கூன் பிரயாணம் இவற்றைப் பற்றி சம்பாஷித்து விடைபெற்று கப்பலேறிக் கிளம்புகிறான். கப்பலில் அவனுக்குப் பலருடன் பழக்க மேற்படுகிறது. ரங்கூன் போய்ச் சேர்ந்ததும் அவனுக்கு ஏற்படும் அனுபவம் விநோதமாக இருக்கிறது. அங்கு அவன் உத்யோகத்திற்காக அலைந்த பின் அதை சம்பாதிக்கிறான். இதனுடன் தான் கப்பலில் சந்தித்த அபயாவின் புருஷனைக் கண்டு பிடித்து, அவன் அபயாவை ஏற்கும்படி வழி தேடுகிறான். பிறகு அபயாவை ஸ்ரீகாந்தன் சந்தித்தபோது அவள் அவனிடம் பல சீரிய கருத்துகளை வெளியிடுகிறாள். ராஜலக்ஷ்மியிடமிருந்து ஒரு கடிதம் வர ஸ்ரீகாந்தன் ரங்கூனைவிட்டு புறப்பட்டு அவளிடமே வந்து சேருகிறான். சில தினங்களுக்கப்புறம் இருவரும் யாத்திரை கிளம்புகின்றனர். ஸ்ரீகாந்தன் மனோநிலை வேறுபடுகிறது. ஸ்ரீகாந்தன் தனியே புறப்பட்டுப் போய், ஊரில் தேக அசௌக்கியமடைகிறான். அந்நிலையில் அவன் ராஜலக்ஷ்மிக்குக் கடிதம் எழுத, அவள் அவனுக்கு சகாயம் புரிய உடனே அங்கு வந்து சேருகிறாள். ராஜலக்ஷ்மி அவனிடம் காட்டும் ப்ரீதி மிகவும் அபாரமானது. ஒருநாள் தன்னையே தான் அவனுக்கு அளித்து விட்டிருப்பதாகவும் அவள் சொல்கிறாள்.

3

வண்டி ஸாயிங்கியா ஸ்டேஷனை அடைந்தபொழுது, பொழுது விடிந்துவிட்டது. ராஜலக்ஷ்மியினுடைய குமாஸ்தா காசிராம், தானே ஸ்டேஷனுக்கு வர முடியவில்லை: ஆனால் இரண்டு ஆட்களை அனுப்பிக் கடிதமும் கொடுத்து அனுப்பி இருந்தான். கடவுள் புண்ணியத்தில் அங்கே எல்லோரும் சௌக்கியம் (அதாவது, கங்கா மாட்டியில்) என்று குறித்துவிட்டு உத்திரவுபடி நான்கு மாட்டு வண்டிகள் அனுப்பியிருக்கிறதாக எழுதி இருந்தான். இரண்டு சாமான் ஏற்ற: இரண்டு ஆட்கள் உடகார! ஒன்றில் நிறைய வைக்கோல் போட்டு மெத்தென்று விரிப்பு விரித்திருந்தது—எஜமானி அம்மாளுக்காக! மற்றொன்றிலும் சௌகரியமாக விரிப்பு போட்டிருந்தது. ஆனால் அது அவ்வளவு சிறப்பாக இல்லை. அதில் வேலையாட்களும் கூட வருபவர்களும் உட்கார வேண்டும். மற்ற இரண்டிலும் சாமான்களை நிரப்ப வேண்டும். அவசியமிருந்தால் ஆட்களிடம் சொல்லிவிட்டால் இன்னும் ஒரு வண்டி தயார் செய்து அனுப்புவதாக எழுதியிருந்தான். ஆகாராதிகளை முடித்துக்கொண்டு இருட்டினதும் புறப்பட வேண்டும் என்றும், இல்லாவிட்டால் எஜமானி அம்மாளுடைய தூக்கம் கெட்டுவிடும் என்றும், வழியில் யாதொரு பயமும் இல்லாததால் கவலையற்றுத் தூங்கலாம் என்றும் எழுதியிருந்தான்.

எஜமானி அம்மாள் கடிதத்தைப் படித்துவிட்டுக் கொஞ்சம் சிரித்துக்கொண்டாள்—பேஷ் அவ்வளவுதான்! பாதையின பயத்தைப்பற்றி யாதொரு கேள்வியும் கேட்காமல் வநதவர்களைப் பார்த்து "சரி அப்பா பக்கத்தில் ஏதாவது குளம் குட்டை இருக்கிறதா? ஒரு முழுக்குப் போட்டுவிட்டு வந்து விடுகிறேன்" என்றாள்.

"இல்லாமல் என்ன அம்மா! அது அங்கே—அதோ..." என்று ஆரம்பித்தான்.

"அப்படியானால் வா, வழி காட்டு!" என்று சொல்லி ரதனையும் துணைக்குக் கூப்பிட்டுக் கொண்டு, ஏதோ ஒரு குளத்தை நோக்கி ஸ்நானம் செய்வதற்காகப் புறப்பட்டாள். உடம்புக்கு ஒத்துக் கொள்ளுமோ, கொள்ளாதோ என்ற பயங்களைப்பற்றி அப்பொழுது தர்க்கம் செய்வது வீண் என்று நான் ஒன்றுமே சொல்லாமல் இருந்து விட்டேன். அதுவும் அவள் அன்று ஒன்றுமே சாப்பிடாததற்கு நான் ஏதாவது தடைசெய்தால் அதுவும் நினறு போகும்.

ஆனால் இன்று அவள் பத்து நிமிஷங்களுக்குள் திரும்பி வந்து விட்டாள். வண்டியில் சாமான்கள் ஏற்றப்பட்டுக்கொண்டிருந்தன.

அவள் என்னைப் பார்த்து "நீ இந்த வேளை ஒன்றும் சாப்பிட வேண்டாமா? எல்லாம் வந்திருக்கிறது" என்றாள்.

"கொடு!" என்றேன்.

மரத்தடியில் விரிப்புப்போட்டு ஒரு பாத்திரத்தில் அவள் எல்லாவற்றையும் பரிமாறினாள். நான் ஒரு வரண்ட பார்வையுடன் அவள் பக்கம் பார்த்துக்கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் அங்கே ஒரு உருவம் வந்து நின்று "நாராயணா!" என்றது.

ராஜலக்ஷ்மி தொங்கிக்கொண்டிருந்த மயிரை இடது கையால் விலக்கிக்கொண்டு புடவைத் தலைப்பை முகத்திலிருந்து கொஞ்சம் விலக்கி நிமிர்ந்து பார்த்தாள். உடனே "வாருங்கள்"! என்றாள்.

திடீரென்று ஒரு விதமான சங்கோசமுமின்றி பக்கத்தில் அந்தக் குரல் கேட்டதும் நான் தலை நிமிர்ந்து பார்த்தேன். ஒரு சாது நின்று கொண்டிருந்தார். நான் வெகு ஆச்சரியமடைந்து போனேன். அவருக்கு வயது அதிகமிருக்காது—இருபது இருபத்திரண்டு தானிருக்கும். நல்ல அழகும் அங்க அமைப்பும் கொண்டவர். முகம் கொஞ்சம் இளைத்துப்போய் இருந்தது. ஆனால் ஆள் உயர்ந்து இருந்ததால் அப்படித்தோன்றிற்று என்று எண்ணுகிறேன். உருக்கிய தங்கம் போன்ற நிறம்; கண்கள், முகம், புருவங்கள், நெற்றியின் அமைப்பு எல்லாம் குற்றமற்று இருந்தன. மொத்தத்தில் அப்பேர்ப்பட்ட ரூபத்தை நாம் அதிகமாகக் காண்பதில்லை என்று சொல்லலாம். அவர் கட்டியிருந்த காவி வஸ்திரம் சிற்சில இடங்களில் கிழிந்து போய் . தைக்கப்பட்டிருந்தது. மேலே இருந்த காவி அங்கியும் அதே மாதிரிதான் இருந்தது! காலில் அணிந்திருந்த பஞ்சாபிச் செருப்புகளும் அதே மாதிரி! ஆனால் அவரிடத்தில் இரக்கங் கொள்ள வேண்டிய அம்சம் ஒன்றுமில்லை. ராஜலக்ஷ்மி அவருக்கு நமஸ்காரம் செய்துவிட்டு ஆசனம் கொடுத்தாள். மறுபடியும் தலை நிமிர்ந்து "இப்பொழுது தான் போஜனத்திற்கு ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது. தாங்கள் கை கால் கழுவிக் கொள்ள ஜலம் கொடுக்கட்டுமா?" என்றாள்.

"ஆஹா, கொடுங்கள். ஆனால் நான் உங்களிடம் வேறொன்றை எதிர் பார்த்து வந்திருக்கிறேன்" என்றார் சாது.

"நல்லது நீங்கள் சாப்பிட உட்காருங்கள். பிறகு எல்லாம் பேசிக்கொள்வோம். ஊருக்குப் போக 'டிக்கட்' தானே வேண்டும்? நான் வாங்கித்தருகிறேன்'' என்று சொல்லி அவள் முகத்தைத் திருப்பி சிரிப்பை மறைத்துக் கொண்டாள்.

சாதுஜீ கம்பீரமாக "இல்லை, அதல்ல. நீங்கள் கங்கா மாட்டிக்குப் போவதாகக் கேள்விப்பட்டேன். என்னிடம ஒரு பெரிய பெட்டி இருக்கிறது. அதைக்கொஞ்சம் உங்கள் வண்டியில் ஏற்றிக்கொள்ளவேண்டும். நானும் அதே பக்கம் தான் வருகிறேன்.''

"அதற்கென்ன ஆட்சேபனை! ஆனால்...நீங்கள்?'' என்று ராஜலக்ஷ்மி கேட்டாள்.

"நான் நடந்தே போய் விடுவேன். ரொம்ப தூரமில்லை. பத்துப் பதினைந்து மைல்தான் இருக்கும்''

ராஜலக்ஷ்மி மேலே ஒன்றும் சொல்லாமல் ரதனைக் கூப்பிட்டுச் ஜலம் கொடுக்கச் சொன்னாள், தான் உடனே சாதுஜீக்குச் சாப்பாடு தயார் செய்வதில் ஈடுபட்டாள். இந்த மாதிரி காரியங்களில் ராஜலக்ஷ்மிக்கு வெகு பிரியமாதலால் அவள் வெகு உற்சாகமாக இருந்தாள்.

சாது சாப்பிட உட்கார்ந்தார், நானும் உட்கார்ந்தேன். ராஜலக்ஷ்மி ஆகாராதிகளை அருகில் கொண்டு வந்து வைத்தாள். இரண்டு நிமிஷங்கள் கழித்து ராஜலக்ஷ்மி பயபக்தியுடன் "சாதுஜீ, தங்கள் நாமதேயம் என்னமோ?'' என்று கேட்டாள்.

சாது சாப்பிட்ட வண்ணம் "வஜ்ரானந்தன்!'' என்றார்.

"அடேயப்பா! கூப்பிடும் பெயர்?''

அவள் பேசின மாதிரியைக் கவனித்து அவள் பக்கம் திரும்பி பார்த்தேன். அவள் முகம் பூராவும் சிரிப்பு ததும்பிக்கொண்டிருந்தது. ஆனால் அவள் சிரிக்கவில்லை, நானும் சாப்பாட்டில் ஈடுபட்டேன்.

"அந்தப் பெயருடன் இப்பொழுது யாதொரு சம்பந்தமுமில்லை. எனக்கு மில்லை-யாருக்குமில்லை'' என்றார் சாதுஜி.

ராஜலக்ஷ்மி சாதாரணமாக "சரிதான்!'' என்று சொல்லிச் சிறிது நேரம் கழித்து மறுபடியும "நல்லது சாதுஜி நீங்கள் வீட்டை விட்டு ஓடி வந்து எவ்வளவு நாட்கள் ஆகின்றன?'' என்று கேட்டாள்.

கேள்வி மிகவும் சங்கடமானதாக இருந்தது ராஜலக்ஷ்மியின் முகத்தைப் பார்த்தேன். அதில் சிரிப்பைக் காணோம் ஆனால் நான் மறந்து போயிருந்த பியாரியின் முகம் அப்பொழுது ராஜலக்ஷ்மியைப் பார்த்ததும் எனக்கு நினைவிற்கு வந்தது அதே பழைய காலத்து வேடிக்கையும் குதூகலமும் அவள் முகத்திலும் கண்களிலும் குரலிலும் மறுபடியும் உயிர் பெற்றுத் தென்பட்டன.

சாது ஒரு தரம் மென்று விழுங்கிக்கொண்டு "உங்களுடைய இந்த ஆவல் அநாவசியமானது'' என்றார.

ராஜலக்ஷ்மி கொஞ்சமேனும் வருத்தமடையவில்லை நல்ல மனிதரைப்போல தலையை ஆட்டி "அது வாஸ்தவம் தான். ஆனால் எனக்கேதோ ஆவல் அதிகமாக இருந்தது. அதனால் தான்!'' என்று சொல்லிவிட்டு என்னைப் பார்த்து "இதோ பார், பெரியது சிறியது என்று இரண்டு குதிரைகளைப்பற்றி ஒரு கதை சொல்லுவாயே, அதை சாதுஜி அவர்களுக்குச் சொல்லு—டே டே—வீட்டில் யாரோ நினைத்துக் கொள்ளுகிறார்கள்'' என்றாள்.

சாதுஜி தன்னுடைய சிரிப்பை அடக்க முயன்றதில் புறை ஏறி விட்டது. அதுவரை அவர் என்னுடன் பேசவேயில்லை. எஜமானி அம்மாள்கூட வந்த ஏதோ ஒரு வேலை ஆள்போல இருந்தேன். இப்பொழுது சாதுஜி நிலைமையை அறிந்து தன்னால் கூடுமான கம்பீரத்துடன் "அப்படியானால் நீங்கள் கூட ஒரு வேளை சன்னியாசியாக—'' என்று ஆரம்பித்தார்.

என் வாயில் பூரி இருந்தது. பதில் சொல்ல முடியவில்லை. ஆகையால் வலது கையின் விரல்களில் நான் கைத் தூக்கித் தலையை ஆட்டி "ஊஹூம், ஒரு தரம் இல்லை'' என்றேன்.

இந்தத் தடவை சாதுஜியினுடைய காம்பீரியம் நிலை நிற்கவில்லை. அவரும் ராஜலக்ஷ்மியும, கல கலவென்று சிரித்தார்கள். சிரிப்பு ஓய்ந்ததும் சாதுஜி "ஏன் திரும்பி வந்துவிட்டீர்கள்?'' என்று கேட்டார்.

பூரியை அப்பொழுதும் நான் மென்று விழுங்காததால் ராஜலக்ஷ்மியைச் சுட்டிக் காட்டினேன். ராஜலக்ஷ்மி என்னைப் பயமுறுத்திக்கொண்டே "ஓஹோ நன்றாய் இருக்கிறது! என்னால் ஒன்றுமில்லை. உடம்புக்கு வந்துவிட்டது. ஆனால் பிறகு மூன்றுதடவை?'' என்றாள்

"எல்லாம் அதேமாதிரிதான்!''

சாது சிரித்துக் கொண்டு "என்னை வஜ்ரானந்தன் என்றே கூப்பிடுங்கள். உங்கள் பெயர்-'' என்று ஆரம்பித்தார்.

எனக்கு முன்னால் ராஜலக்ஷ்மி பதில் சொன்னாள்.

"அவர் பெயர் எதற்கு? அவர் உங்களைக் காட்டிலும் பெரியவர். ஆகையால் அவரை 'அண்ணா' என்று அழையுங்கள். என்னையும் 'மதனி' என்று கூப்பிட்டாலும் நான் கோபித்துக் கொள்ளமாட்டேன். நானும் உன்னைக் காட்டிலும் வயதில் ஐந்து வயது தான் பெரியவளாக இருப்பேன்.''

சாதுஜியினுடைய முகம் சிவந்து விட்டது. நானும் அவள் அவ்வளவு தூரம் போவாள் என்று எண்ணவில்லை. நான் ஆச்சரியத்துடன் பார்த்தேன்- அதே பியாரி! அதே இயற்கையான சந்தோஷமும் சிநேகமும் துல்யமும் வாய்ந்த பெண்! நான் மயானத்திற்குப் போகக் கூடாது என்று தடுத்ததும் ஜமீன்தாரின் கூட்டத்தில் இருக்கக் கூடாது என்று ஆட்சேபனை செய்ததும் அதே பெண் தான்! வீட்டை விட்டு ஓடி வந்த அந்தப் பையனுடைய ஹிருதயத்தில் பிரிவாற்றாமையின் முழு வேதனையையும் கிளப்பி எப்படியாவது அவனை ஊருக்குத் திரும்பிப் போகும் படிச் செய்ய விரும்பினாள் போலும்!

சாது தன்னுடைய வெட்கத்தை அடக்கிக் கொண்டு "இதோ பாருங்கள் 'அண்ணா' என்று கூப்பிடுவதற்கு அவசியமில்லை. நாங்கள் சன்னியாசிகள். அப்படிக் கூப்பிடுவது வழக்கம் கிடையாது'' என்றாள்.

இதைக் கேட்டு ராஜலக்ஷ்மி கொஞ்சங்கூடத் தயக்கமடையவில்லை.

"ஏன் கூடாது? தம் தமையனையும் மதனியையும் சந்நியாசிகள் தான் பெயர் சொல்லிக் கூப்பிடக் கூடாது. நீ ஏன் செய்யக் கூடாது?'' என்றாள்.

சாது வேறு வழியின்றி வெட்கத்துடன் சிரித்துக் கொண்டே "நல்லது, இன்னும் ஏழெட்டு மணி நேரந்தான் உங்களுடன் கூட இருக்கப் போகிறேன். அதற்குள் அவசியமேற்பட்டால் அப்படியே செய்கிறேன்!'' என்றார்.

"அப்படியானால் ஒரு தரம் கூடக் கூப்பிட மாட்டாயா?'' என்றாள் ராஜலக்ஷ்மி.

சாது சிரித்துக்கொண்டு "அவசியமேற்பட்டால் கூப்பிடுகிறேன் பொய்க்காக கூப்பிடுவது சரியல்ல'' என்றார்.

ராஜலக்ஷ்மி அவருடைய தட்டில் ஐந்தாறு சந்தேஷ் (ஒரு விதத் தித்திப்புத் தின்பண்டம்) பர்பிகளும் போட்டு "நல்லது அதனால் என்னுடைய இஷ்டம் நிறைவேறி விட்டது ஆனால் அவசியமேற்பட்ட பிறகு உன்னை எப்படி அழைப்பது என்று தான் எனக்குத் தெரியவில்லை'' என்று சொல்லிப் பிறகு என்னைக் காட்டி "இவரை 'சன்னியாசி மகராஜ்' என்று கூப்பிட்டுக் கொண்டிருந்தேன். இப்பொழுது முடியவில்லை நல்லது அப்படியானால் உன்னை 'சந்நியாசி மைத்துனன்' என்று கூப்பிடுகிறேன். என்ன சொல்லுகிறாய்?'' என்றாள்.

சாதுஜி மேலும் ஒன்றும் சொல்லவில்லை.

"நல்லது!'' என்றார்.

அவர் வேறு விஷயத்தில் எப்படியிருந்தாலும் ஆகார விஷயத்தில் நல்ல தெளிவு இருந்தது என்று கண்டேன். மேற்கத்திய மிஷ்டான்னத்திற்கு அவர் கொஞ்சங்கூட அவமரியாதை செய்யவில்லை. ஆனால் நான் வெறுப்பு அடைந்து போனேன். சாதுஜீ இதற்கு முன்னால் என்ன செய்திருந்தாலும் இப்பொழுது வழங்கப்பட்ட போஜனத்தை அவ்வளவு சங்கோசமற்ற தோரணையில் சாப்பிடுவது எனக்கு அவ்வளவு நல்லது என்று தோன்றவில்லை. ராஜலக்ஷ்மி மறுபடியும் அவர் தட்டில் சில தித்திப்பு சாமான்களைப் போட்ட பொழுது என்னை அறியாமலேயே எனக்கு ஒரு பெருமூச்சு ஏற்பட்டது. அதைக் கண்டு ராஜலக்ஷ்மியும் அவளுடைய புது ஆட்கள் இருவரும் திடுக்கிட்டுப் போனார்கள். ராஜலக்ஷ்மி என்னைப் பார்த்து அவசர அவசரமாக "உனக்கு உடம்பு சரியில்லை, நீ எழுந்து கை அலம்பிக் கொள்ளேன். நீயும் எங்களுடன் உட்கார்ந்திருப்பானேன்?'' என்றாள்.

சாதுஜி என்னையும் ராஜலக்ஷ்மியையும் ஒரு முறை பார்த்துவிட்டுப் பிறகு பாத்திரத்தையும் பார்த்துவிட்டுச் சிரித்துக்கொண்டே "பெரு மூச்சு வரத்தான் செய்யும், பாக்கி ஒன்றுமில்லை அல்லவா?'' என்றார்.

"இன்னும் நிறைய இருக்கிறது!'' என்று சொல்லி ராஜலக்ஷ்மி என்னை ஒரு கோபப் பார்வை பார்த்தாள்!

அப்பொழுது ரதன் பின்னால் வந்து நின்று "அம்மா அவல் நிறையக்கிடைத்தது. ஆனால் நெய்யும் தயிரும தான் கிடைக்கவில்லை'' என்றான்.

சாது திடுக்கிட்டு "அடடா, உங்களுடைய அன்பிற்கு நான் பெரிய சோதனையை இட்டுவிட்டேன் போலிருக்கிறதே!'' என்று சொல்லி உடனே எழுந்திருக்க முயற்சித்தபொழுது ராஜலக்ஷ்மி வருத்தத்துடன் "எழுந்திருக்கவேகூடாது. எழுந்திருந்தாயானால் இங்கிருப்பதையெல்லாம் தூக்கிவிட்டெறிந்து விடுவேன்!'' என்றாள்.

சாது கண நேரம் அப்படியே பிரமித்துப்போய் 'ஏதடா, இந்தப் பெண் ஒரே அடியாக இவ்வளவு சிறிய பழக்கத்திற்குள் இவ்வளவு நெருங்கிவிட்டாள். என்று ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். ராஜலக்ஷ்மி பியாரியாய் இருந்த கதை தெரியாதவர்களுக்கு அந்த மாதிரி ஆச்சரியம் ஏற்படத் தான் செய்யும். அதற்குப் பிறகு அவன் சிறிது சிரித்துக்கொண்டு "நான் சன்னியாசி சாப்பிடுவதில் எனக்கொன்றும் தடையில்லை. ஆனால் நீங்களும் கொஞ்சம் சாப்பிட வேண்டும் அல்லவா?'' என்றார்.

"நான் இதை எல்லாவற்றையும் சாப்பிடப்போகிறேனா. முடியவே முடியாது! வேலைக்காரர்கள் சாப்பிடுவதற்கு வேறு இருக்கிறது இன்று இரவுக்கு நான் ஒரு பிடி அவல் கிவல் சாப்பிட்டு ஜலம் குடித்தால் தீர்ந்தது. ஆனால் பசியோடு நீ எழுந்திருந்து போய்விட்டால் நான் சாப்பிடுவதைக்கூட சாப்பிடமாட்டேன். நம்பிக்கை இல்லாவிட்டால் அவரைக் கேள்'' என்று சொல்லி ராஜலக்ஷ்மி என்னைச் சுட்டிக் காட்டினாள்.

நான் அப்பொழுது பதில் சொல்ல வேண்டியதாகிவிட்டது

"நான் இந்த விஷயத்தைமட்டும் சத்தியம் செய்து சொல்லக் கூடும. சாதுஜி அநாவசியமாக வாதாட வேண்டுவதில்லை. எவ்வளவு உங்களால் சாப்பிடமுடியுமோ அவ்வளவையும் சாப்பிட்டுத் தீர்த்துவிடுங்கள். இல்லாவிட்டால் இந்தச் சாமான்கள் எல்லாம் யாருக்கும் உபயோகமில்லாமல் போய்விடும். இந்த சாமான்கள் எல்லாம் ரயிலில் இருந்து வந்திருக்கின்றன. உயிர் போனாலும் கூட அவள் இதை எல்லாம் தொடக் கூடமாட்டாள்—இதுதான் விஷயம்!'' என்றேன்.

"ஆனால் இந்தத் தின்பண்டங்களெல்லாம் ரயிலில் தயார் செய்தனவாகத் தோன்றவில்லையே'' என்றார் சாதுஜி.

அந்த விஷயத்தை இன்றுவரை நான் பைசல் செய்து முடியவில்லையே, நீங்கள் வந்த உடனேயா முடியப் போகிறது? ஆகையால் கைக் காரியத்தை முடித்துக்கொண்டு நீங்கள் எழுந்திருபபது நல்லது. இல்லாவிட்டால் சூரியாஸ்தமனம் ஆகிவிட்டால் அவள் நெஞ்சில் சொட்டு ஜலம் இறங்குவதுகூட நின்று போய்விடும். சில மணி நேரம் நீர்கூட வந்தால், போகிற வழியில் சாவகாசமாகச் சாஸ்திர ஆராய்ச்சி செய்துகொண்டு போவோம், அதனால் காரியம் ஒன்றுமில்லை, ஆனாலும் காரியம் ஒன்றும் கெட்டுப் போய்விடாது. இப்பொழுது அவள் இஷ்டப்படி நடக்க வேண்டியதுதான்!'' என்றேன்,

"அபபடியானால் நாள் பூராவும் அவர்கள் ஒன்றுமே சாப்பிடவில்லையா?'' என்று சாதுஜி கேட்டார்.

"இல்லை. அது மட்டுமா? நேற்று கூட என்ன வாயிற்றோ தெரியவில்லை. நாலைந்து பழங்களைத் தவிர வேறொன்றையும் தொடவில்லை என்று கேள்வி'' என்றேன்.

ரதன் பின்னால் நின்றவன் தலையை அசைத்து ஏதோ சொல்ல வந்தான்-எஜமானி ரகசியமாக என்ன கண் ஜாடை செய்தாளோ சட்டென்று அவன் நிறுத்திக் கொண்டான்.

சாது ராஜலக்ஷ்மியைப் பார்த்து'' "இதனால் உங்களுக்கு ஒன்றும் சிரம மேற்படவில்லையா?'' என்று கேட்டார்.

பதிலுக்கு அவள் சிரித்தாள். அவ்வளவுதான்! பதிலுக்கு நான் ஆரம்பித்தேன்;

"அதைப்பற்றி நீர் நேரிலோ ஊகமாகவோ ஒன்றும் காண முடியாது. அப்படி ஏதாவது கண்ணுக்குத் தென்பட்டாலும் அதைப்பற்றி ஊகம் செய்ய இரண்டு நாட்களாகும்.''

ராஜலக்ஷ்மி குறுக்கிட்டு "நீ பார்த்திருக்கிறாயோ, ஒருநாளும் கிடையாது'' என்றாள்.

அதற்கு நான் ஒன்றும் பதில் சொல்லவில்லை. சாதுஜியும் மேலே கேள்விகள் கேட்கவில்லை, நேரமாவதை உத்தேசித்து மௌனமாக போஜனத்தை முடித்துக் கொண்டு எழுந்தார்.

ரதனும் மற்ற இருவர்களும் சாப்பிட்டு முடிவதற்கு நாழிகை ஆகி விட்டது. ராஜலக்ஷ்மி என்ன செய்தாள் என்பது அவளுக்குத் தான் தெரியும்! நாங்கள் கங்கா மாட்டியை நோக்கிப் புறப்பட்ட பொழுது சந்தியா காலம் வந்து விட்டது. த்ரயோதசிச்சந்திரன் இன்னும் பிரகாசமாக ஆகவில்லை. ஆனால் இருட்டுக் கூட எங்கும் தென்படவில்லை முதலில் எங்களுடையவண்டியும், நடுவில் ராஜலக்ஷ்மியினுடைய வண்டியும்பின்னால் மற்ற இரண்டு வண்டிகளுமாகப்புறப்பட்டன.

நான் சாதுஜியைக் கூப்பிட்டு "ஐயா, நீங்கள் நடந்து வருவானேன், என் வண்டியில் ஏறிக் கொள்ளுங்களேன்!'' என்றேன்.

"கூடவேதான் வந்துகொண்டு இருக்கிறேன். நடக்க முடியாவிட்டால் வண்டியில் ஏறிக் கொள்ளுகிறேன். இப்பொழுது நடக்கிறேன்'' என்றார் சாதுஜி.

ராஜலக்ஷ்மி முகத்தை வெளியே நீட்டி "அப்படியானால் என்னுடைய 'பாடி கார்டாக' வாருங்கள் லாலாஜீ. உங்களுடன் பேசிக்கொண்டு வருகிறேன்'' என்று சொல்லி சாதுவைத் தன் வண்டி அருகில் கூப்பிட்டாள். முன்னால் நான் இருந்தேன். நடு நடுவே வண்டி, மாடு, வண்டிக்காரன்—இந்த உபத்திரவத்தால் அவர்கள் பேசினது கொஞ்சம் கொஞ்சம் கேட்கவில்லை. ஆனால் பெரும்பான்மையான பேச்சு என் காதில் பட்டுக்கொண்டே வந்தது.

"உன்னுடைய ஊர் இந்தப் பக்கமில்லை. எங்கள் பக்கம்தான் என்று உன்னுடைய பேச்சில் இருந்தே கண்டு கொண்டேன். ஆகையால் இப்பொழுது எங்கே போக எண்ணி இருக்கிறாய் என்பதை உண்மையாகச்சொல் அப்பா?'' என்றாள் ராஜலக்ஷ்மி.

"கோபாலபுரம்!'' என்றார் சாது.

"கங்காமாட்டியிலிருந்து எவ்வளவு தூரம்''? என்று ராஜலக்ஷ்மி கேட்டாள்.

"கங்காமாட்டியும் எனக்குத் தெரியாது. கோபாலபுரம் தெரியாது. ஆனால் இரண்டும் அடுத்து அடுத்துத்தான் இருக்கவேண்டும். விசாரித்துப் பார்த்ததில் அப்படித்தான் கேள்விப்பட்டேன்.''

"அப்படியானால் இந்தஇரவில் கிராமத்தைத்தான் எப்படிக் கண்டு பிடிப்பது, அல்லது வீட்டைத்தான் எப்படி அடைவது?''

சாது சிரித்துக்கொண்டு "ஊரைக் கண்டு பிடிப்பது கஷ்டமில்லை. ஏனென்றால் வழியில் ஒரு வற்றிப் போன குளமிருக்கிறது. அதற்குத் தெற்கே இரண்டு மூன்று மைல் போனால் கிராமம் வந்துவிடும். வீட்டைத் தேடும் சிரமும் இல்லை. ஏனென்றால் எல்லோரும் தெரியாதவர்கள். ஆகையால் ஏதாவது மரத்தடியை அடைந்தால் போதும்!''

ராஜலக்ஷ்மி வருத்தத்துடன் "இரவு குளிராக இருககுமே, மரத்தடியிலா! ஒரு கம்பனியாவது வாங்கிக்கொள் இல்லாவிட்டால் எனக்குப்பொருக்காது'' என்றான்.

ஹிந்தி ஆசான்

உபாத்தியாயர் உதவியில்லாமல் தமிழ் உச்சரிப்பைக்கொண்டே நாலே வாரத்தில் நல்ல ஹிந்தி பாஷையை சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். விலை 12 அணா. ஒரு காபி அனுப்ப அணா 14 மணியார்டர் செய்யவம்.

எம். எஸ் ராமுலு கம்பெனி, 286, எஸ்பிளனேட், மதராஸ்.

குணமடைந்த சந்தோஷம்

ஜம்மி வேங்கட்ரமணய்யாவின் "லிவர்க்யூர்'' தான் இக்குழந்தையை ரக்ஷிக்க முடியும்.

ஜம்மி'ஸ் லிவர் க்யூர்

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு "லிவர்க்யூர்'' சிறந்த நிவாரணியென பிரக்யாதி பெற்ற டாக்டர்களால் கருதப் படுகிறது. சென்ற 36 வருஷ காலமாக இக்கொடிய வியாதியினின்றும் ஆயிரக் கணக்கான குழந்தைகளைக் காப்பாற்றியிருக்கிறது.

அபாயகரமான போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

ஜம்மி வேங்கட்ரமணய்யா & சன்ஸ். 1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

மற்றும்:-பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினாப்பள்ளி.

இனாம்! இனாம்!! இனாம்!!!

'திருவாசகத்தின் பெருமை' என்ற புத்தகம், விலாசம் தெரிவிப்பவர்களுக்கு இனாம்.

ஒற்றுமை ஆபீஸ், தியாகராய நகர் : : மதராஸ்.

கர்ப்பத்தைத்தடுக்க "ரஹாத்'

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவறாமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.



BURN'S STONE WARE PIPES

பர்ன் பீங்கான் குழாய்கள்

பர்ன் கம்பெனியாரின் பீங்கான் குழாய்கள் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷனுக்கு சரியாக பீ. எஸ். எஸ்-க்கு தயாரிக்கப்படுகின்றது. இக் குழாய்கள் பூமியிலுள்ள திராவகம் கலந்த காற்றுக்களால் தாக்கப்படாதது. அழிவற்றது.

சென்ற 80 வருஷங்களுக்கு மேலாக, இந்தியா, பர்மாவிலுள்ள முனிஸிபல் கார்ப்பொரேஷன்கள், சுகாதார இலாகாக்கள் மற்றுமுள்ள பொதுஸ்தாபனங்கள் பர்ன் பீங்கான் குழாய்களை உபயோகித்துத் திருப்தியடைந்துள்ளனர்.

SAVE FOR VICTORY
BRITISH WAR SAVINGS MOVEMENT
ASK YOUR BANK

பர்ன் & கம்பெனி லிமிடெட், ஸ்தாபிதம் : 1781.

12, மிஷன்ரோ, கல்கத்தா. தொழிற்சாலை:- ராணிகஞ்சு & ஜபல்பூர்.

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:—பம்பாய் கம்பெனி லிமிடெட், த. பெ. நெ. 109, மதராஸ்

BURN & CO., LTD.

ESTABLISHED 1781
12, MISSION ROW, CALCUTTA.
WORKS AT RANIGANJ AND JUBBULPORE

அவளுடைய உணர்ச்சி என்னைக் கூடத்தாக்கிவிட்டது. சாது சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு "எங்களுக்கு வீடு வாசல் ஏது, அம்மா? நாங்கள் மரத்தடியில் தானே இருக்க வேண்டும்" என்றாள்.

அப்பொழுது ராஜலக்ஷ்மி சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டுப்பிறகு "அதெல்லாம் உன் சகோதரியின் முன்பு வேண்டாம். இரவில் என் சகோதரனை தங்குமிடம் இல்லாதுவிட முடியாது. இன்று என்னுடன் கூட வா. நாளைக்கு உன்னை நானே தயார் செய்து அனுப்புகிறேன்!" என்றாள்.

சாது மௌனமாக இருந்தார். ராஜலக்ஷ்மி ரதனைக்கூப்பிட்டுத் தன் உத்திரவின்றி வண்டியில் இருந்து யாதொரு சாமானையும் இறக்கக்கூடாது என்று கட்டளையிட்டாள் அதாவது சன்னியாசியினுடைய பெட்டி இரவு வண்டியை விட்டு இறங்கக் கூடாது.

"பின் ஏன் குளிரில் அவஸ்தைப்படுகிறாய் அப்பா.என் வண்டியில் வந்து ஏறிக்கொள்ளேன்" என்றேன் நான்.

சாது சிறிது யோசித்து "சற்று போகட்டும். அக்காவுடன் கொஞ்சம பேசிக் கொண்டே வருகிறேன்!" என்றார்.

நானும் அது சரி தான் என்று எண்ணினேன். புது நட்பைக் கை விடும் விஷயத்தைப்பற்றி சாதுஜியின் மனத்தில் சச்சரவு நடந்து வருவதை நான் கவனித்து வந்தேன். கடைசி வரையில் ஒன்றும் நிச்சயமில்லை. திடீரென்று ஒரு சமயம் அவர் ஒத்துக்கொண்டுவிட்டால் 'அப்பா நீ தப்பிப் போய்விடுவது நல்லது. இல்லாவிட்டால் என் கதிபோல் உனக்கும் ஏற்பட்டு விடும்' என்று சொல்லிவிடலாம் என்றே நினைத்தேன்.

ஆனால் வாயை மூடிக்கொண்டு தான் இருந்தேன். இருவருடைய பேச்சும் தடைபடாமல் நடைபெற்று வந்தது. வண்டி மாடுகளின் சப்தமும, அச்சின் சப்தமும் நடு நடுவே பேச்சின் தொடர்பை அறுத்தபோதிலும் ஊகத்தின் மூலமாக அதைச் சேர்த்துககொண்டே போனதால் எனக்கும் நேரம் ஸ்வாரஸ்யமாகக் கழிந்தது.

ஒரு தடவை சப்தத்தில் மூழ்கினவன் திடீரென்று "ஆமாம ஆனந்தா உன்னுடைய பெட்டியில் என்ன இருக்கிறது அப்பா?" என்ற கேள்வியைக் காதால் கேட்டேன்.

"சில புஸ்தகங்களும் மூலிகைகளும், அக்கா!" என்று பதில் வந்தது,

"மருந்து எதற்கு? நீ டாக்டரா?"

"நான் சன்னியாசி அல்லவா? சன்னியாசிகளுக்கு அதில் கொஞ்சம் பைத்தியம் உண்டு என்று கேள்விப்பட்டதில்லையா?"

"இல்லையே! என் குமாஸ்தா அந்தமாதிரி என்னிடம் சொன்னதே இல்லையே! நல்லது உன்னால் வாந்தி பேதியை நிறுத்த முடியுமா?"

சாது சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டுப் பிறகு "நிறுத்துவதற்கு நாங்கள் அதிகாரிகள் அல்ல, அம்மா! மருந்து கொடுத்து முயற்சி செய்து பார்ப்போம்" என்றார்.

"சன்னியாசி ஔஷதம் கொடுக்கலாம். ஆனால் ஔஷதம் கொடுப்பதற்காகச் சன்னியாசி ஆவதா? நல்லது, ஆனந்தா, நீ அதற்காகவா சன்னியாசி ஆகி விட்டாய்?"

"அது எனக்குச் சரியாகத் தெரியாது அம்மா. ஆனால் தேச சேவை செய்வது எங்களுடைய வேலை"

"எங்களா! அப்படியானால் 'நீங்கள்' என்று ஒரு கூட்டமிருக்கிறீர்களா?"

சாது ஜவாப் சொல்லாமல் சும்மா இருந்தார். ராஜலக்ஷ்மி மறுபடியும் "சேவை புரிவதற்காக சன்னியாசியாக ஆக வேண்டுவது அவசியமில்லை. அப்பா. இது விஷயமாக நீ யோசித்துப் பார்த்திருக்கிறாயா, சொல்?" என்றாள்.

சாது இந்தக்கேள்விக்கு யாதொரு பதிலும் சொல்லவில்லை. ஏனென்றால் சிறிது நேரம் யார் பேசினதும் என் காதில் விழவில்லை. பத்து நிமிஷத்திற்குப் பிறகு சாது பேசினது என் காதில் விழுந்தது.

"தாயே,நான் மிகவும் சாமான்யமான சன்னியாசி. அந்தப் பெயரால் என்னை அழைப்பது கூடச்சரியல்ல. நான் என்னுடைய சிறு பாரத்தைத் தூரத் தள்ளிவிட்டு அதற்குப் பதிலாக வேறொரு சுமையை ஏற்றுக் கொண்டிருக்கிறேன்."

ராஜலக்ஷ்மி பேசவில்லை: சாது பேச ஆரம்பித்தார்.

"நான் முதலிலிருந்தே பார்க்கிறேன். நீங்கள் என்னை வீட்டுக்குத் திரும்பிப் போகச் செய்யப்பார்க்கிறீர்கள். ஏனோ தெரியவில்லை, 'அக்கா' என்பதற்காகவா? ஆனால் எந்த பாரத்தைச் சுமக்க வீட்டை விட்டு வெளிவந்திருக்கிறேனோ அது எவ்வளவு துர்லபமானது, சீர் கெட்டது, வழியற்றது, எத்தனை வகை ஆனது, என்பதை என்னால் எண்ணிக்கூடப் பார்க்கமுடியவில்லை."

இதற்கும் ராஜலக்ஷ்மி யாதொரு பதிலும் சொல்லவில்லை. ஆனால் எனக்குத்தெரிந்துவிட்டது, எப்பொழுது பேச்சு ஆரம்பித்து விட்டதோ அப்பொழுதே இருவருடைய மனமும் எண்ணமும் கலந்து விடத் தாமதமாகாது! சாதுஜியும் சரியான இடத்தில் தான் அடித்தான். தேசத்தின் நிலைமை, அதன் கஷ்ட சுகம், அதன் இல்லாமை அவற்றை நானும் நன்றாக அறிந்திருந்தேன். ஆனால் சன்னியாசியாக இருந்தானோ இல்லையோ—இவன் இந்த வயதிலேயே என்னைக் காட்டிலும் அதிகமாகக் கவனித்துப் பார்த்திருக்கிறான். உள்ளத்தை விரித்து அவற்றையெல்லாம்தன்னுடையதாகச்செய்துகொண்டிருக்கிறான் கேட்கக் கேட்க கண்களில் நீர் நிறைந்தது. உள்ளத்திலிருந்து பொறாமையும், வெறுப்பும், துக்கமும் மூண்டு எழுந்தன. அந்த வண்டியின் ஒரு மூலையில் இருட்டில் உட்கார்ந்து கொண்டு ராஜலக்ஷ்மி ஒரு கேள்வியும் கேட்காமலிருந்தாள் அவ்வளவு பேச்சில் ஒன்றில் கூடக் கலந்து கொள்ளவில்லை. அவளுடைய மௌனத்தைப்பற்றி சாதுஜி என்ன நினைத்துக்கொண்டாரோ அவருக்குத்தான் தெரியும்! ஆனால் அந்த ஏகாந்த மௌனத்தின் அர்த்தம் எனக்கு விளங்காமலில்லை.

நாம் தேசமென்று கூறும் ஜன சமூகத்தின் முக்கால் பங்குக்கு மேல் வாசம் செய்யும் கிராமங்களைப் பற்றி சாது விவரித்துச் சொல்ல ஆரம்பித்தார். நாட்டில் ஜலமில்லை. உயிரில்லை, சுகமில்லை, காடுகள் அழிந்து விட்டதால் எங்கும் நல்ல வெளிச்சமோ காற்றோ கிடையாது. ஜனங்களிடையே அறிவுமில்லை, கல்வியுமில்லை, தர்மம் திரும்பிக்கொண்டு பாதையை விட்டு விலகி விட்டது. ஜன்ம பூமியினுடைய இந்தச் சரித்திரம் அச்சிலும் பார்க்கிறோம் நேரிலும், பார்க்கிறோம். ஆனால் இது கூடாது என்று சொல்லும்போது, அது எவ்வளவு பெரிய கூடாது என்பதை நாம் இதற்கு முன் அறியவில்லை. தேசத்தினுடைய ஏழ்மை எப்படிப்பட்ட பயங்கரமான ஏழ்மை என்பது அது வரை எனக்குத் தெரியவில்லை!"

சரளை மண்ணின் நடுவில் வண்டி போய்க்கொண்டிருந்தது. பாதையின மண் பனியால் நனைந்து கனத்துப்போயிருந்தது. வண்டிச் சக்கரங்களின் சப்தமும் மாடுகளின் காலடிச்சப்தமும் சிற்சில சமயங்களில் கேட்டன. நிலா வெள்ளை வெளேர் என்று எங்கும் பரவியிருந்தது. அதனடியில் அந்தக் குளிரின் நிசப்தமான வெளியில் நாங்கள் அறிமுகமாகாத ஒரு திக்கை நோக்கிப் போய்கொண்டிருந்தோம். கூட வந்தவர்களில் யார் தூங்கினார்கள், யார் தூங்கவில்லை என்றே தெரியவில்லை. எல்லோரும் பனியால் குளிர்ந்த வஸ்திரத்தைப் போர்த்திக் கொண்டு மௌனமாக இருந்தார்கள். ஒரு சன்னியாசி மாத்திரம் எங்களுடன் வந்துகொண்டிருந்தான். அந்தப் பரிபூர்ணமான அமைதியின் நடுவில் அவனுடைய வாயிலிருந்து மாத்திரம், தேசத்தில் அறிமுகமாகாத எவ்வளவோ சகோதர சகோதரிகளின் தாங்க முடியாத தவிப்பின் கதை 'சல சல' வென்று பெருகிக்கொண்டிருந்தது. இந்தச் சொர்ண பூமி எப்படி நாளடைவில் மெதுவாக வரண்டு வர்ண மறறுப் போயிற்று, எப்படித் தேசத்தின் சமஸ்த சம்பத்துக்களும் விதேசிகளின் கைவசமாகி வெளி தேசங்களுக்குப் போயிற்று. எப்படி நமது தாய் நாட்டின் மாமிசம் மஜ்ஜை, ரத்தம்–எல்லாவற்றையும் விதேசிகள் உறிஞ்சிவிட்டார்கள் என்ற ஒளி மிக்கச் சரித்திரத்தை அந்தப் பையன் கண்ணுக்கு முன்னால் எடுத்துக் காட்டி விளக்க ஆரம்பித்தான்! திடீரென்று சாது ராஜலக்ஷ்மியை நோக்கி "அம்மா நான் உங்களைத் தெரிந்து கொண்டு விட்டேன் என்று நினைக்கிறேன். உங்களைப் போன்ற பெண்களைக் கூப்பிட்டுக் கொண்டு போய் நம்முடைய சகோதர சகோதரிகளுக்கு காட்ட வேண்டும் போல் தோன்றுகிறது" என்றான்.

முதலில் ராஜலக்ஷ்மியால் பேச முடியவில்லை. பிறகு அடைபட்ட குரலில் "ஆ! எனக்கு அந்த மாதிரி பாக்கியம் கிடைக்குமா ஆனந்தா? நான் இந்த வார்த்தைகளை எப்படி மறக்க முடியும் சகோதரா?" என்றாள்.

"ஏன் முடியாது சகோதரி? பெண்ணாயிருந்து இந்தவார்த்தைகளையெல்லாம் நீ மறந்து விட்டால் நான் சொல்வதில் லாபம் என்ன?" (தொடரும்)

FREE!

மாதம் ரூ. 575 சம்பாதிக்க வேண்டுமென்ற அபிப்பிராயமிருந்தால் எமது உண்மையான அமெரிக்கன் நியூ கோல்ட் சம்பந்தமான பூரா விவரங்களுக்கு எழுதவும். உரைகல்லில் உண்மை தங்கத்தைப் போலிருப்பதுடன்மட்டுமின்றி ஸ்பிரிட்டாகவுமிருக்கலாம். பிளேட்டாகவும் அடிக்கலாம். நிறம் மாறுவதில்லை. எமது தங்கத்தால் செய்யப்பட்ட எல்லாவித நகைகளும் எம்மிடம் கிடைக்கும். 6 தோலா அமெரிக்கன் நியூ கோல்ட் 2 ஜோடி அழகிய மூக்குப்பல்கள், 2 ஜோடி கடுக்கன். 2 மோதிரம் முதலியன சாம்பிளாக அனுப்பப்படும்.

இலவசம;—நகைகளின் பூரா காட்லாக். விவரங்கள் இலவசமாக அனுப்பப்படும் இன்றே எழுதுங்கள்.

American New Gold Co.
P. B. 61 (S·M M.) Lahore India)
(EAB.)

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற
குழந்தைகளின் டானிக்

பெற்ற மனம்

★

ஸ்ரீ எம். பி. சுப்பிரமணியம்

★

நாஸிருக்கு எப்படியாவது தகப்பனிடமிருந்து பட்டத்தை அபகரிக்கவேண்டும் என்ற பேராசை. அதற்காக அவன் ஒரு கொடிய சூழ்ச்சியைச் செய்தான். இரண்டு விசைகள் இப் பிரயத்தினம் வீணாகியது. நாஸிர் என்ன செய்வான்! ஆனால் தந்தைக்கு மட்டும் தனயனின் துர்ப்புத்தி தெரியும்! ஆகவே அவராகவே பெரும் போக்காக நடந்து கொண்டார். அது எவ்விதம்? இந்த சரித்திரக் கதையில் இந்த சம்பவத்தை நேரில் கண்டது போல் அனுபவிப்பீர்கள்.

காலம் பதினைந்தாம் நூற்றூண்டு. மாளவதேசத்தை கியாஸுடீன் ஆண்டு வந்தான். அவன் தேசமெங்கும் குடிகள் ஒரு குறையுமின்றி வாழ்ந்தனர். அவனுடைய ராஜ்யத்தில் ராஜ விசுவாசம் நிரம்பி இருந்தது. அரசன் நீடுழி வாழவேண்டும் என்று எல்லோரும் பிராத்தித்தனர். அப்பிராத்தனை பலித்தது போலும். கியாஸுடீன் ஒரு குறையுமின்றி நீண்ட காலம் ஆண்டு வந்தான், அவனுக்கு வயது எண்பதாகியது. ஆயினும் உடம்பில் ஒரு தளர்ச்சியுமின்றி ராஜாங்க காரியங்களைச் சரிவரச் செய்து வந்தான்.

அரசனின் மரணத்திற்காக காத்துக் கொண்டிருந்தவன் ஒருவன் தான். இந்தக் கிழம் இறக்கும் வழியைக் காணோம் என்று ஏங்கி இருந்தவன் அரசகுமாரன் நாஸிருடீன். அவனே கியாஸுடீனின் ஒரே மகன். கியாஸுடினுக்குப் பின் செங்கோல் கைகொள்ள வேண்டியவன்.

அரசனுக்கு நாஸிர் மேல் அதிக ஆசை. பிள்ளையோ தகப்பனைக்கண்டால் வெறுக்க ஆரம்பித்தான், தந்தை என்ற எண்ணம் போய், தனக்குக் கிடைக்கும் பாக்கியத்திற்கு தடையாக இருக்கும் ஓர் இடைஞ்சலாகத் தோன்றியது. தான் ராஜ்ய பரிபாலனம் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டான் நாஸிர். தினம் தானு அரசு புரியும் நாளை எண்ணி ஏங்குவான். கியாஸுடீனுக்கு வயதாகி விட்டது. அவன் இறப்பான் என்று பல நாள் காத்திருந்தான். ஆனால் கியாஸ் தன் உடம்பிற்கு ஒரு குறையுமின்றி இருந்தான். நாஸிருடீனுடைய ஆசை நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. அவனால் அதை அடக்க முடியவில்லை. இராப்பகல் தூக்கமில்லாது அரச உரிமையையே சிந்தித்து வந்தான்.

பல நாட்கள் தூக்கமில்லாது சிந்தித்தான். கடைசியில் ஒரு முடிவு தான் அவனுக்குத் தோன்றியது. மிகவும் கொடூரமானது தான். ஆனால் வேறு ஒரு வழியும் அவனுக்குத்தென்படவில்லை. கியாஸுடினைக் கொல்வதே சரி என்று தீர்மானித்தான். பதவி, செல்வம் சிறப்பு இவைகளுக்காக தன் பெற்ற தந்தையைக் கொல்லத்துணிந்தான் நாஸிருடீன்.

தான் தகப்பனைக் கொன்றது தான் என்று வெளியாருக்கு தெரிந்துவிடின் தான் எதற்காக கொலை புரிந்தானோ அப்பதவியை நிம்மதியுடன் அனுபவிக்க முடியாது என்று அவன் அறிவான். அதனால் அரசன் இறத்தல் வெளியார் பீதியடையும் முறையில் கூடாது என்று எண்ணி உணவில் விஷ மிட்டுக்கொல்லுவதே சிறந்தது என்ற முடிவிற்கு வந்தான்.

அரசனுக்கு உணவு கொண்டுக்கொண்டுப்பவன் கரீம் கான் என்ற வயது மிகுந்த வேலைக்காரன். நாஸிர் அவனைச் சந்தித்து பயமுறுத்தியும், பணம், பதவி முதலியன கொடுப்பதாகச் சொல்லியும் அரசன் உணவில் விஷம் கலக்கச் சொன்னான்.

அன்று இரவு அரசன் இறந்தான் என்று கூக்குரல் இடுவார்கள் என்று காத்திருந்தான் நாஸிர். அவன் மனம் ஒரு நிமிஷமாவது இருப்புக் கொள்ளவில்லை. தன் அறையில் கூண்டிவிட்ட வேங்கைபோல் திரிந்துக் கொண்டிருந்தான். இரவு அதிக நேரமாகியும் நாஸிர் நினைத்தபடி ஒன்றும் ஆகவில்லை. ஒரு வேளை அரசன் இறந்திருப்பான், யாருமே அவர் அறைக்குள் போயிருக்கமாட்டார்கள். நாளை காலை எல்லாம் வெளிப்படும் என்று மனதைச் சாந்தப்படுத்திக் கொண்டான். மறு நாள் நாஸிர் எழுந்ததும் அவன் மனதில் முன் இரவு நடந்தவை நினைவிற்கு வந்தன. உடனே ஒரு காவலாளியை விளித்து அரசன் எங்கே? என்று கேட்டான்.

"இப்பொழுதுதான் எழுந்து உலாவச் சென்றார்," என்றான் அவன்.

இப்பதில் நாஸிருக்கு பிரமிப்பை உண்டு பண்ணியது. தனக்கு வந்த கோபத்தை அடக்கிக் கொண்டான். கரீம் கான் தன்னை மோசம் பண்ணி விட்டான் என்று எண்ணி அவன் மேல் ஆத்திரம் கொண்டான். தான் கொடுத்த விஷத்தைக் கொடுத்திருந்தால் அரசன் இறந்திருப்பான், தான் கொடுத்த விஷம் மிகவும் கொடூரமானது என்று அவன் அறிவான்.

உடனே கரீம் கானைக் கூப்பிட்டனுப்பினான். கரீம் கான் நடுங்கிக்கொண்டு நாஸிர் அறைக்கு வந்தான். தான் விஷத்தைக் கொடுத்ததாகவும் அரசன் இறவாதது தனக்கு ஆச்சர்யத்தைக் கொடுப்பதாகவும் கூறினான். நாஸிருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அரசனுக்கு விஷம் கொடுத்தது தெரிந்திருந்தால் அவன் கரீம் கானை தண்டித்திருப்பான்; அரசனுக்குத் தெரிந்ததாகப் புலப்படவில்லை. கரீம் கானோ தான் விஷம் கொடுத்ததாக சத்தியம் செய்கின்றான். எல்லாம் நாஸிருக்கு ஒரு புதிராக இருந்தது.

"சரி. இன்று இரவும் விஷத்தை உணவோடு கலந்து விடு பயப்படாதே. அரசனுக்குத் தெரிந்திருந்தால் உன்னை நேற்று தண்டித்திருப்பார். அவருக்கு தெரியாது இந்த தடவை தப்ப மாட்டான். நீ இந்த தடவை ஜாக்கிரதையாக இரு, இந்த தடவை நான் சொல்வதைச் செய்யாவிட்டால் பின் உன் தலை போய் விடும். உஷார். நாஸிர் சொல்லை எவன் மீறுகிறானோ அவன் வேரோடு அழிக்கப் படுவான், ஜாக்கிரதை நாளை காலை அரசன் இறந்தான் என்ற செய்தி வர வேண்டும். இல்லையேல் கரீம் கான் இறந்தான் என்ற செய்தி வரும். எது வர வேண்டும் என்பதை நீயே முடிவு செய்" என்று கடும் கோபத்தோடு நாஸிருடீன் கூறினான்.

கரீம் கான் தான் முதல் நாள் விஷம் கொடுத்ததாகவும்,அன்று நிச்சயம் அப்படியே செய்வதாகவும் வாக்களித்துச் சென்றான்.

அரசன் தினம் இரவு சுமார் ஒன்பது மணிக்கு போஜனம் உன்பான். நாஸிர் தனதறையில் முள் மேல் இருப்பது போல் காத்திருந்தான். ஒரு மணி செல்வது ஒரு யுகமாகத் தோன்றியது அவனுக்கு. வெகு நேரம் காத்திருந்தான். அரண்மனையில் ஒன்றும் விபரீதமாக நடந்து விட்டதாகத் தெரிய வில்லை. அவன் ஆத்திரம் அவனை அங்கிருக்க இயலவில்லை. அப்பொழுதே போய் என்ன நடந்தது என்று பார்த்துவிட வேண்டும் இல்லாவிட்டால் அவன் நெஞ்சு பிளந்து விடும் போல் தோன்றியது. வேகமாக அரசன் அறைக்குச் சென்றான் அவன் தன் தகப்பன் அறைக்கு அதிகமாகப் போவதில்லை, மிகவும் முக்கியமான விஷயம் இருந்தால் தான் போவான்.

அரசன் அறைக்குப் போய் நாஸிர் மெதுவாகக் கதவைத் தட்டினான். அரசன் காலடி சப்தம் கேட்டது. அவன் இன்னும் தூங்கவில்லை. அரசன் நாஸிரைப் பார்த்துப் புன்னகை செய்து உள்ளே வந்து உட்காரும்படிச் சொன்னான். நாஸிருக்கு தான் என்ன செய்வது என்று புரியவில்லை. அரசனிடம் எதற்காக தான் வந்ததாக கூறுவது? சித்தப்ரமை கொண்டவன் போல் உள்ளே போய் உட்கார்ந்தான். மேஜை மேல் வைத்திருந்த ஷெர்பத்தை கொஞ்சம் குடித்தான். மனதிற்குக் கொஞ்சம் திடம் வந்தது. அரசன் தன் கையில் வைத்திருந்த புத்தகத்தை அலமாரியில் திரும்ப வைத்துக் கொண்டிருந்தான். நாஸிரின் மூளை அதி துரிதமாக வேலை செய்தது. மேஜையில் இருந்த ஷெர்பத்தைப் பார்த்ததும் அவனுக்கு ஒரு எண்ணம் உதித்

குறைந்தவற்றை உபயோகித்து சர்மத்தைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

புண், படை, சிறங்கு, சொப்பளம்
முதலிய சர்ம வியாதிகளுக்கு
சூர்யோதயம்

படை மருந்தை உங்கள் படைமீது தடவினால் சர்மத்தில் எவ்வித மச்சமும் ஏற்படாமல் சீக்கிரத்தில் குணமளிக்கும்.

அமிர்தாஞ்சனம் லிமிடெட், பம்பாய், சென்னை.

புதிய பதிப்பு! மலிந்த விலை!!

பாரதி நூல்கள்
(நேர்த்தியான காலிகோ பைண்டு)

1	கவிதைகள்	Vol I	ரூ. 3 0 0
2.	வசனங்கள்	Vol II	,, 3 0 0
3.	கட்டுரைகள்	Vol III	,, 3 0 0
4.	பகவத்கீதை (காலிகோ)		,, 0 8 0
5.	Agni & other Poems & Translations		,, 1 0 0
6.	Essays & other Prose Fragments		,, 1 0 0
7.	சரித்திரம்		,, 0 4 0

பாரதி பிரசுராலயம்,
567, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

ஓ ராமா! ஓ ராம! ஓம்காரதாம!
ஓ ராம! ஓ ராமா! ஓன ரின்த்ஸுப்ரேம

சரணம்

1. நாமேலுனந்தரு நவ்வுடகாயெ—
   னேமனி தாளுதுனிக தேவராய (ஓ)
2. நன்னே சினந்துகு நயமேமி கலிகெ?
   நின்னே நெரநம் மிதி நீவே நாஸலிக (ஓ)
3. நீகே தகியுன்னுனு நிஜமு நாமாட
   ஸாகேத ராம! ரக்ஷணசே யீபூட
4. தரலோன ரக்ஷகுலு லேரு தேவா!
   மரசிதே வெரசிதே மாகேமி தோவ
5. ஈஜன் மமெந்துகு யெவரு தனகேல?
   ராஜீவ நேத்ர! தயரானிதி மேலா
6. ஹ்ருதயமு சலுவைதே முதமு நீ பாலு
   ஸுதயாளுடவைதே ஸுகமு நீவேலு
7. ஆத்மகை யொகடைன ஆஸிஞ்சலேது
   பரமாத்ம! நீகனி பல்க மனஸேல ராது
8. நீரைன பாலைன நீகேயனு கொண்டி
   தீரைன சக்கனி தேவதனு கொண்டி
9. நீகாஸிஞ்சிதி கானி நிமிஷமு மான
   ஏகமை நன்னேலு கோகண்டே ஆன
10. நீகண்டே தொரகுன நிருபமகாத்ர!
    பராகேல? ஸ்ரீத்யாகராஜுனி மித்ர!

II

ஓராம! ஓராம!
ஓம்கார தாம
ப்ரேம ஓனரின்த்ஸு
நாமேலுன்
அந்தருநவ்வுடகாயெனு
தேவராய
இக
ஏமனி தாளுது
நன்னே சினந்துகு
நயமேமி கலிகெ
நின்னே நெர நம்மிதி
நீவே நா ஸலிக
ஸாகேத ராம!
நீகே தகி யுன்னுனு

நாமாட நிஜமு
யீபூட
ரக்ஷண சேயு
தேவ!
தரலோன
ரக்ஷகுலு லேறு
மரசிதே
வெரசிதே
மாகேமி தோவ
ராஜீவ நேத்ர!
ஈ ஜன்மமு எந்துகு

எவரு தனகு ஏல
தயரானி இதி மேலா

ஹ்ருதயமு சலுவைதே
முதமு நீ பாலு
ஸுதயாளுடுவைதே
ஸுகமு நீவு ஏலு
பரமாத்ம!
ஆத்மகை

—ஸ்ரீராமா!
—ப்ரணவ ஸ்வரூபனே!
—அன்பு வைத்தென்னை ரக்ஷித்தருள்
—என்னுடைய மேன்மையான் தீ
—அனைவரும் கண்டு சிரிக்கத் தகுந்ததாய் விட்டது
—தேவாதி தேவனே!
—இனிமேல்
—நான் எவ்விதம் பொறுப்பேன்
—என்னைப் பரிகாசம் செய்ததற்கு
—என்ன பலன் கிடைத்தது
—ஸ்ரீராமா! உன்னையே உறுதியாக நம்பினேன்.
—நீயே என் துணைவன்
—அயோத்தியா புரியில் அவதரித்த ஸ்ரீராமா!
—நான் உன் தயவை கோரியே காத்திருக்கிறேன் (உனக்கே தகுதியுள்ளவனுயிருக்கிறேன்)
—நான் சொல்வது உன்மை
—இந்த வேளை
—என்னை ரக்ஷித்தருள்வாய்
—என் தைவமே!
—இவ்வுலகில்
—எனக்கு ரக்ஷகர்கள் ஒருவரும் இல்லை
—நீ என்னை மறந்தால்
—ரக்ஷிக்க பயங்கொண்டால்
—எங்களுக்குப் புகலிடம் ஏது உளது.
—தாமரைக் கண்ணனே!
—உன் கிருபை கிட்டாத இந்த ஜன்மம் எனக்கு ஏன்
—இவ்வுலகில் யாருக்கு யார் என்ன ஸம்மந்தம்
—உனது தயவு கிட்டாது நான் துன்புறுவது உனக்கு மேன்மையா
—மனது குளிர்ந்தால்
—சந்தோஷம் உன்னைச் சேர்ந்ததேயாகும்
—நீ தயாளனுயிருந்தால்
—நீயே சௌக்யம் பெருவாய்
—எங்கும் நிறைந்த பரம் பொருளே
—எனக்காக வென்று

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்
காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மல விரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

உண்மை உறுதிக்கும் உத்திர வாதம்..
—:—
"ஷண்முகம் பிராண்டு"
ஸ்டீல் டிரங்கு & சூட்கேஸ்கள்
தேவைக்கு வேண்டிய புது மாதிரி தினுசுகளில் கிடைக்கும்.

ஷண்முகம்பிராண்டு ஸ்டீல்டிரங்குஒர்க்ஸ்
தயாரிப்பவர்:- சி. ஞானசுந்திர நாயகர்,
P. 3094. 341, எஸ்பிளநேட், மதராஸ்.

IMMEDIATE VASHIKARAN
On contract basis we undertake to influence or subjugate like spellbound anyone or more persons (male or female) instantly and surely cause them entirely at your own grasp quite easily. Particulars against Stamps SANTI ASRAM, Dacca (Bengal)

ஒகடைன ஆஸிஞ்சலேது
நீ கனி பல்க
மனஸேல ராது
நீரைன
பாலைன
நீகே யனு கொண்டி
திரைன
சக்கனி தேவத
அனு கொண்டி
நீகாஸிஞ்சிதி கானி
நிமிஷமு மான
ஏகமை
நன்னேலு கோகண்டே
நிமிஷமு மான
ஆன
நிருபம காத்ர!

ஸ்ரீ த்யாகராஜுனி மித்ர!

நீகண்டே தொரகுன?

பராகேல

—ஒன்றைக் கூட நான் விரும்பவில்லை
—உனக்காக வென்று நான் சொல்லி விரும்பியும்
—உனக்கு மனம் ஏன் வரவில்லை
—தண்ணீரேயானுலும்
—நன்ருகக் காய்ச்சின பாலானுலும்
—உனக்கே என்று சொல்லிக் கொண்டேன்
—ஒழுங்கானவனும்
—அழகு நிறைந்தவனுமான தைவம் நீதானென்று
—அறிந்து கொண்டேன்
—உன்னை விரும்பினேனே யல்லாது
—க்ஷணப் பொழுதும் உன்னை விட மாட்டேன்
—என்னை உன்னுடன் ஐக்யப் படுத்திக் கொண்டு,
—என்னை ஏற்று ரக்ஷித்தருளாவிட்டால்
—க்ஷணப் பொழுதும் உன்னை விட மாட்டேன்
—ஆணையிட்டுள்ளேன்
—உவமை சொல்வதற் கரிய வடிவம் கொண்டவனே!
—த்யாகராஜனெனப் பெயர் கொண்டுள்ள பரம சிவனின் தோழனே!
—உன்னைக் காட்டிலும் ரக்ஷகன் எனக்கு அகப்படுவானு?
—என்னை ஏன் அலக்ஷ்யம் செய்கிருய் (என்னை ரக்ஷித்தருள்வாய்)

III

இது திவ்ய நாம ஸங்கீர்த்தனப் பகுதியைச் சேர்ந்த கீர்த்தனங்களில் ஒன்ருகும். ஸ்வாமிகள் ஸ்ரீராமனைத்தவிர தனக்கு வேறு துணை எவரும் இல்லை என்பதை நன்குணர்ந்து, தான் அவரையே தஞ்சமென்று உறுதியாக நம்பி பஜனம் செய்வதை தெளிவாக எடுத்துக் கூறி தன்னை ரக்ஷித்தருளுமாறு இக்கீர்த்தனத்தால் பகவானைப் பிரார்த்திக்கிருர்.

நாமேலு:—'ராம ராம கோவிந்த' என்ற ஸௌராஷ்ட்ர ராகத்திலுள்ள கீர்த்தனத்திலும் இது போன்றே குறிப்பிட்டுள்ளார்.

நன்னேசி:—'ராம ராம' என்ற ஹுஸேனி ராக கீர்த்தனத்தின் நாலாவது சரணத்தில் 'சசிமுக நன்நேசுநதி யசமா நாது வசமா' என்று கூறப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

தரலோன ரக்ஷகுல:—'பாஹி ராமசந்த்ர ராகவ' என்ற கீர்த்தனத்தின் 8-வது சரணத்திலும் இதுபோன்றே தெரிவித்துள்ளார்.

எவரு தனகேல:—ஆதி சங்கர பகவத் பாதாள்

காதே காந்தாகஸ்தே புத்ர:
ஸம்ஸா ரோய மதீவ விசித்ர: |
கஸ்ய த்வம்வா குத ஆயாத:
தத்வம் சிந்தய ததிஹ ப்ராத:|| என்று தெரிவித்துள்ள அபிப்ராயத்தையே ஸ்வாமிகள் சொல்வதிலும் காண்கிருேம்.

ஹ்ருதயமு:—ஸ்வாமிகள் பகவானுடன் இரண்டரக் கலந்த தன்மையை அடைந்து, சுக துக்கங்கள் தன்னைச் சேர்ந்ததல்ல என்ற உண்மையை வெளியிடுகிருர்.

ஏகமை நன்னேனி:—தன்னை ஏற்று அருளாவிட்டால் தான் அவரைவிடப் போவதில்லை என்று பகவான்மீது ஆணையிட்டுச் சொல்லுகிருர். இச்சந்தர்ப்பத்தில் அருட்ப்ரகாசவள்ளல் இது போன்றே தெரிவித்துள்ள,

"அடுத்தெனை யாட்கொண்ட தந்தையரே யெந்தனிப் பெருந்தலைவரே சபை நடந்தவரே
தொடுத்தொன்று சொல்கிறேன் சொப்பனத்தேனுந் தாயநுந்-திருவருணையம் விட்டறியேன்
விடுத்திடிலென்னை நீர் விடுப்பனென்னுயிரை வெருவுளக் கருத்தெலாந் திருவுளத்தறிவீர்

அடுத்தினிப் பாயலிற் படுக்கவுமாட்டேனருட் பெருஞ்சோதி யீராணைநும்மீதே" என்ற அருட்பா ஞாபகத்திற்கு வரும்.

IV

ராகம் ஆரபி — ஆதி தாளம்

(29-வது மேள :ஜன்யம். ஆ. ஸரிமபதஸ். அவ. ஸம்பூர்ணம்)

பல்லவி

1.	பா, பா, பா	பா, பா, பா	மபதப	மாமா	மகரீ	ரிஸரிம
	ஓ ரா ம	ஓ ரா ம	ஓம் கா .	. ர	தா . .	ம . . .
2.	பதஸ் பதப பா	பா, பா. பா	மபதரி	ஸ்நிதப	தபமக	ரிஸரீ
	ஓ . . ரா . . ம	ஓ ரா ம	ஓம் . கா .	. . ர .	தா . . .	ம . .
	ஸரி மக ரீரீ	ஸரி ரிஸ ஸா ஸா	தாஸா	ரீ :	ரீமக	ரிஸரிம
	ஓ . ரா . . ம	ஓ . ரா . . ம	ஓ ன	ரின் த்	ஸுப்ரே .	. . ம .

சரணம்

பம பா ; தா	தாஸ்ா ரிஸ்ரீ	ரீம்க்	ரீஸ்ா	ஸ்நிதா	ஸ்ா ;
நா . மே லு	னந் . த . ரு	நவ் .	வு ட	கா . .	யே
தாதரி ஸ்ாஸ்ா	ஸ்நிதா பாபா	பமபா	தா பா	பாமக	ரிஸரிம
னே . . மனி	தா . . ளுது	னி . க	தே .	வரா .	. . ய .

(மற்ற சரணங்களையும் இது போன்றே பாடவும்.)

தாய்மார்களே!
பயஸ்யா
குழந்தைகளுக்கு தாய்ப்பால் தவிர மற்ற எந்த உணவும் ஏற்றதல்ல.
உங்கள் பாலை விருத்தி செய்து கொண்டு குழந்தைகளை நீங்களே ஆரோக்கியமாய் வளருங்கள்.
தாய்ப்பாலினுல் வளர்ப்பது ஆரோக்கியம் மட்டுமல்ல. மிகச் சிக்கனம்கூட.

பயஸ்யா (Regd)
தாய்ப்பாலை மிகுதியாய் உண்டு பண்ணும் உத்தம ரஸாயனம்.
விலை ரூ. 2—8—0
(Packing & Postage Extra.)
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.
அல்லது நேரில்:—
ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ், தென்னூர்ரோடு, திருச்சினுப்பள்ளி.
Prop. V. B. Nataraja Sastri, Ayurvedacharya.
(தாய்மாருக்கு உபயோகமுள்ள பயஸ்யா புஸ்தகம் இனும்.)

நினைவிருக்கட்டும்

தேகாரோக்கியம் கெடாமலிருப்பதற்கு எப்படி கலப்பற்ற சுத்தமான உணவு உட்கொள்ளுகிருேமோ அதுபோலவே, கண்களுக்கும், மூளைக்கும் கெடுதல் நேரிடாது. ஞாபக சக்தியும் சுறு சுறுப்பும் அடைவதற்கு கலப்பற்ற பொடியே அவசியமென்பதை பொடி உபயோகிக்கும் சகோதரர்கள் அறிதல் வேண்டும். இவ்வித கலப்பற்ற பொடிக்கு மதராஸ் ஸ்ரீ அம்பாள் அண்டு கம்பெனி, யார் 35 ஆண்டுகளாக புகழ் பெற்றவர்களென்பது யர்வரும் அறிந்ததே. பொடி வாங்கும் போது **ஸ்ரீ அம்பாள் பட்டணம் பொடியை**யே கவனித்து வாங்க நினைவிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிருேம்.

நவநாகரீகம்

★

ஒரு வளையல்

★

காசினி எழுதியது

* * * 'வாழ்கை என்னிக்குமே அனித்யம்! அதுவும் இந்த உலக யுத்தம் ஆரம்பித்தாலும் ஆரம்பித்தது! அது எவ்வளவு அனித்யமானது என்பது நன்ருகத் தெரிகிறது!' என்று சுலோசனு சொன்னுள்.

'ஏதுக்கு இவ்வளவு தத்துவ ஞானம் உதயமாகி இருக்கிறது? இன்னும் ஒரு புதிய புடவை வாங்கிக் கொள்ளப் போகிருயா?' என்று கமலினி சட்டென்று கேட்டாள்.

'புதிய புடவை இல்லே; ஒரு புதிய நகை பண்ணிக்கொள்ளலாமா என்று பார்க்கிறேன்!' என்று சுலோசனு உத்சாகத்துடன் சொன்னுள்.

'புதிய நகையா? பவுன் கிட்டத்தட்ட நாற்பது ரூபாய்க்கு விற்கும் நாளிலா புதிய நகை? சுய புத்திதானு? ஏதாவது கிறுக்கு உண்டா?' என்ருள் நளினு.

'நல்ல சுய புத்தியில் தான் சொல்லுகிறேன்! சாகாமல் இருந்தால் சகடியும் பூணலாம், நோகாமல் இரு நெஞ்சே, என்று அத்தை ஒரு வசனம் சொல்லுவார்; ஆனுல் சாகாமெ இருந்தால் தானே? வாழ்க்கை இவ்வளவு அநித்யமாக விட்டு, வேண்டியது ஆட்டிட் பூட்டி அனுபவிப்பது தான் புத்திசாலித் தனம்!' என்று சுலோசனு நீண்டதொரு பிரசங்கம் செய்தாள்.

'சரி! கண்டதே காக்ஷி, கொண்டதே கோலம் என்று தோன்றினுல், அனுபவித்து அலுத்துப் போவதே நல்லது. இதுவும் என் அத்தை சொல்லும் வசனங்களில் ஒன்று தான்! என்ன நகை பண்ணிக் கொள்ளப் போகிறீர்கள்?' என்று கேட்டேன்.



பாலக்காடு ஸ்ரீ ராமா பாகவதர் குமாரி ஸ்ரீமதி அலமேலுவுக்கும மிருதங்க வித்வான் ஸ்ரீ சுப்பய்யர் அண்ணு குமாரன் ஸ்ரீ பி. ஆர். மணிக்கும் சமீபத்தில் கல்பாத்தியில் கல்யாணம் நடந்தது.

நாலைந்து மாதங்களுக்கு முன் ஒரு தேயிலைக் கச்சேரிக்கு சுலோசனு போயிருந்தாளாம். அங்கே ஒருத்தி ஒரு புதிய தினுசு வளையல் போட்டுக் கொண்டு வந்திருந்தாளாம். அதைப் பார்த்ததுமே தனக்கும் அப்படி ஒன்னு பண்ணிக் கொள்ள வேண்டும் என்று ரொம்பவும் ஆசையாக இருந்ததாம். கச்சேரி முடிவதற்குள் மெதுவாக அவளுடன் சிநேகம் பண்ணிக் கொண்டாளாம். பிறகு 'உங்கள் கையில் உள்ள வளையல் எத்தனை பவுன்? கூலி என்ன?' என்று கேட்டாளாம்.

'வளையல் பண்ண பத்துப் பவுன் பிடித்தது; கூலி ஐம்பது ரூபாய்கள் ஆச்சுது' என்று நினைக்கிறேன். எங்க அம்மா பண்ணி அனுப்பினுள்; சரியாகத் தெரியலே!' என்ருளாம்.

'நான் கம் என்று வந்து விட்டேன். ஆனுல், தூங்கும் போதும் முழிச்சுச் கொண்டு இருக்கும் போதும் அந்த வளையல் என் கண் முன்னுலேயே நிற்கிறது!' என்று சுலோசனு முடித்தாள்.

'அது என்ன அவ்வளவு அதிசயமான வளையல்? இப்படி உன் மனசைக் கொள்ளைக்கொள்ள?' என்று கமலினி கேட்டாள்.

சிறிய சிறிய யானைகள் மாதிரியும் தாமரைப் பூக்கள் மாதிரியும் செய்திருந்ததாம்: யானைகள் தும்பிக்கைகளைத் தூக்கிக் கொண்டு நின்றதாம். இரண்டு தும்பிக்கைகளுக்கு நடுவில் ஒரு சிறிய தாமரைப் பூவை கொடுத்திருந்ததாம். அடுத்தாற்போல் ஒரு சிறிய தூண் மாதிரியில் நிறுத்தி இருந்ததாம். இதில் யானைகளுடைய இரண்டு வால்களை மேலே படும்படிப் பொருத்தி இருந்ததாம். மறுபடியும் ஒரே பூவைத் தூக்கிக் கொண்டு எதிர் முகமாக நிற்கும் இரண்டு யானைகள் என்று செய்திருந்ததாம். அடியில் அரும்பு கட்டிய விளிம்பாம். எல்லாம் கெட்டியாகச் செய்திருந்ததாம்.

'நீ சொல்வது எனக்குச் சரியாகப் புரியலையே?'' என்ருள் நளினுதேவி.

'இன்னும் நாலு நாளில் வந்து விடும்; அப்போ பாரு!'' என்ருள் சுலோசனு,

'பத்துப் பவுனு வாங்கினுய்? என்று கமலினி ஆச்சரியம் தாங்காமல் கேட்டாள்.

'இல்லே, இல்லே! எங்க அம்மாளுடைய பழய வங்கியை அழிச்சுப் பண்ணச் சொன்னேன்!' என்ருள் சுலோசனு.

'உன் நகை வர வரைக்கும் எனக்குனு தூக்கம் வராது போலிருக்கு!' என்ருள் கமலினி. * * * *

'உங்காத்திலே என்ன சமையல்? நல்ல வாசனை வரதே?' என்று நளினுதேவி கேட்டாள்.

'அத்தை ஓலன் பண்ணச் சொல்லி இருந்தாள்; அதுவாக இருக்கும்!' என்றேன்.

'ஓலனு? அது என்ன?' என்ருள் நளினுதேவி.

இளம் பறங்கி, அல்லது பூசணிக் கொட்டையை வில்லை வில்லையாக நறுக்கிக் கொள்ள வேண்டும். இது ஒரு மலையாள தேசத்துச் சமையல், அவர்கள் இதற்கு இளவன் என்ற ஒரு தினுசுப் பூசணிக்காயை உபயோகிக்கிருர்கள். காயை வில்லை வில்லையாக நறுக்கிக்கொள்ள வேண்டும். இளம் பயத்தம் காயை ஆய்ந்து நீள நீளமாக ஒடித்துக்கொள்ள வேண்டும். முத்தலாக இருந்தால், உரித்துப் பருப்பை வேருக எடுத்துக் கொள்ளவேண்டும்.

அடுப்பில் ஒரு உருளி, கற்சட்டி, அல்லது வேறு களிம்பேருத பாத்திரத்தில் கொஞ்சம் ஜலம் வைத்து பயத்தங்காய், அல்லது பயத்தம் பருப்பை முதலில் நன்ருக வெந்து கொள்ளவேண்டும். இது வெந்ததும், அலம்பின தானையையும் நாலு கீறின பச்சை மிளகாயையும் திட்டமாக உப்பையும் போட்டு, தான் உடையாமல் திருப்பி வேக வைக்க வேண்டும். தான் நன்ருக வெந்ததும், சுயம் பாலாகக் கொஞ்சம் தேங்காய்ப் பால், ஒரு முட்டை தேங்காய் எண்ணை ஒரு கொத்து கறி வேப்பிலை போட்டு இறக்க வேண்டும். காரமே' இல்லாமல், ருசியாக. மணமாக இருக்கும்.

வேண்டிய வாசனை

'மணம் என்றதும் எனக்கு ஞாபகம் வரது; கோழி முட்டைக்கு வேண்டிய வாசனை ஏற்றலாமமே?' என்ருள் சுலோசனு.

சமாசாரம் இவ்வளவுதான்: சீமையில் ஒருத்தி தன் வீட்டுக் கோழி இட்ட முட்டை அருதா வாசனையாக இருப்பதை கவனித்தாளாம். கோழி தோட்டத்தில் புகுந்து தழைகளை அதற்கு முன் மேய்ந்ததாம், இதைக் கேட்ட அவள் சிநேகிதி ஒருத்தி வாசனைச் சரக்குகளைக் கோழிக்கு ஆகாரமாகக் கொடுத்து, பரீக்ஷை பண்ணிப் பார்த்தாளாம். சீமைத் தக்காளி, காபி, கோகோ முதலிய வாசனையுடன் கொடுத்த 'ஆகாரத்தின் சாப்பாட்டிற்கு ஏற்பகோழிமுட்டை இட்டுதாம்.

'இதெல்லாம் நமக்கு எதுக்கு, என்ருள் பங்கஜம்.

'நன்னுக் கேட்டாய் போ. இப்போ அநேக வியாதிகளில் இருந்து குணமானதும் உடம்பு பலப்பட முட்டை சாப்பிடத் தானே சொல்லுகிருர்கள்? இது எவ்வளவு கஷ்டமாக இருக்கு. இதற்கு பதிலாக முட்டை பன்னீர் வாசனையாக இருந்தால் சுலுபமாக இருக்காதோ?' என்ருள் கமலினி. இதைவிட வியாதியை வரவழித்துக் கொள்ளாமல் இருந்தால் என்று நளினு சொல்ல, தர்க்கம் வலுத்தது.

ரூ. 60,000 பெருமானமுள்ள ஆபரணங்கள் வழங்கப்பட்டன

உலகின் எட்டாவது அதிசயம். அமெரிக்கன் நியூ கோல்டு எங்கள் சிருஷ்டி. அது இந்தியா பூராவும் பிரபல்யம் அடைந்துவிட்டது. அதற்கு அறிமுகமே தேவையில்லை. பத்திரிகைகளும், பொது மக்களும் அதை எங்கும் புகழ்கிருர்கள். அதன் கெமிகல் நிறம் எப்பொழுதும் தங்க நிறமாகவே இருக்கிறது. இந்தத் தங்கத்தைக்கொண்டு நீங்கள் சிறந்த ஆபரணங்களை செய்து கொள்ளலாம்.

இந்த அமெரிக்கன் நியூ கோல்டை பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் ஒரு சாம்பிள் செட் விநியோகம் செய்ய நாங்கள்நிச்சயித்துள்ளோம்.

இந்த செட்டில் உண்மையான அமெரிக்கன் நியூகோல்டு 6 தோலாவும். ஒரு ஜதை புது மோஸ்தர் வளையல்களும் ஒரு ஜதை மூக்குத்திகளும் 2 பம்பாய் மோஸ்தர் மோதிரங்களும், ஒரு ஜதை தோடுகளும் இருக்கும்.

AMERICAN NEW GOLD WORKS, (S.M.W) Dina Nagar (Punjab)

BLACK LOCK& MACARTHUR LTD., GLASGOW

வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளைதான் உயர்ந்தது. வெண்மை மாருது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டு வரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்க வேண்டிய அவசியமுமிராது. 541 கெக்கின்பேரில் மான் மார்க்கும் இரண்டு ஈய ஸீல்களும் இருக்கிற கெக்காகப் பார்த்து வாங்குகள். போலிகளை வாங்கி ஏமாருதீர்கள். செந்தூரத்தில் ''மான் மார்க்'' செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents:- M.R.V. AIYER & CO., 49, பந்தர் தெரு, மதராஸ்.

கர்ந்தி ஜோஸியர்

ஒரு வருஷப் பலன் மாதவாரி ரூ. 3. ஆருடம் 5 கேள்விகளுக்குப் பதில் ரூ. 1. வி. பி. செலவு அணு 5. ஜனனகால விவரம் or எழுதும் நேரம், சுமார் வயது தேவை.

ஹனுமான் ஆச்ரமம், திருத்தணி S.I.

சித்திரமும் சிருங்காரமும்

★

'பரத் மிலாப்'—பிரகாஷ் பிக்சர்சாரின் உன்னத சித்திரம்—'கரோலினுடன் என் வாழ்க்கை'—வேடிக்கை மயமான கதை — கார்போ கட்டளை — டார்ஸன் பெயர் அடைந்த பிராபல்யம்—சில புது உண்மைகள்—நாய் எப் பேர்ப் பட்ட பிராணி ?—சில :பிரபல நடிகர்கள்—மேஜர் பார் பரா—சில தமாஷ் சம்பவங்கள்.

"பரத் மிலாப்".

"பரத் மிலாப்'' அதாவது பரதன் சந்திப்பு—என்ற படம் ராமாயணக்கதையின் ஒருபாகமாகும். இது பிரகாஷ் பிக்சர்ஸார் தயாரித்திருக்கும் உன்னத சித்திரம்: உயர்தரமான கதையை அடிப்படையாகக் கொண்டு உயிர்ப்பிக்கப் பெற்ற படம்: மிகுந்த பொருட் செலவில் அதிக சிரத்தையுடனும் சிரமத்துடனும் தயாரிக்கப்பட்டது. இந்தப் படம் நகரில் ஸாகர் டாக்கிசுக்கு வெகு விரைவில் வரவிருக்கிறது: பம்பாயில் இப்போது இது காட்டப்பட்டு வருகிறது. இதைப் பற்றி ஒரு பிரபல பத்திரிகை விமர்சனம் எழுதுகையில் "யாரே அழகுக்கு அழகுசெய்ய முடியும்?'' என்று குறிப்பிட்டது, பல அம்சங்களிலும் பெருமையுடன் பிரகாசிக்கும் ஒரு படத்தைப்பற்றி அதிகம் போற்ற வேண்டுமா?

இதில் துர்க்கா கோடே தசரத சக்கிரவர்த்தியின் இரண்டாவது மகிஷி கைகேயியாக நடிக்கிருர்: அவரது நடிப்பு இந்த வேஷத்தில் மிகவும் பொருந்தி இருக்கிறது. தமயனுனை ராமனிடத்தில் அத்யந்த நட்புகாட்டும் பரதனுக ஸாஹு மோடக் காட்டியிருக்கும் நடிப்பு மெச்சத்தக்கதாக இருக்கிறது. கதையை உருப்படுத்திய மந்தரையாக விமலா வாஸிஷ்டா நடித்திருப்பதும் போற்றத்தக்கது: கைகேயியிடம் போய் சூழ்ச்சிபண்ணி ராமனைக் காட்டுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யும் காட்சி குறிப்பிடத்தக்கது. ப்ரேம் அதீபும், ஸோபனு ஸமர்த்தும் ராமனுகவும், சீதையாகவும் நன்கு சோபிக்கின்றனர்.

இப்படத்தின் வசனத்தை எழுதியவர் பண்டிட் அனுஜ்: உள்ளத்தை கொள்ளை கொண்டு உணர்ச்சியை எழுப்ப வல்ல வாக்கியங்களை அவர் வரைந்திருக்கிருர்: எந்த படத்திலும் சம்பாஷணை ரசமாக இருந்தால் தான் சிறப்பு அதிகரிக்கும். சங்கீதமும் இதில் நன்கு அமைந்திருக்கிறது. டைரக்ட் செய்த விஜய்பட், கலைப்பகுதியைக் கவனித்த கனு தேஸாய், இவர்கள் சேவை சிலாகிக்கத்தக்கதாகும்.

இந்திய படங்களுள் இது தலை நிமிர்ந்து நிற்கிறது. "மஹா காவியத்தின் உயர்வையும் சிறப்பையும் நாம் உணருமாறு செய்யும் மஹத்தான படம். இதைப் பார்க்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு இது பயனளிக்கும்'' என்ருர் ஸர் எஸ். ராதாகிருஷ்ணன் இப் படத்தைப் பார்த்த பின்னர், ஆகவே நம் நகரிலும் இப்படம் பெருமித ஆதரவைப் பெறும் என எதிர்பார்க்கலாம்.

* * * *

இன்னும் என்ன கவலே?

ஜோன் பாண்டேய்ன் "சந்தேகம்'' என்ற ஆர். கே. ஓ. ரேடியோ படத்தில் மிகவும் சிறப்பாக நடித்ததற்காக அவருக்கு அமெரிக்கா சினிமாப்பட அகடமியார் தங்கப் பொம்மையை இவ்வருஷம் பரிசளித்தனர். இது மிகவும் உயர்ந்த கௌரவமாகும்.

மிகவும் உல்லாஸ புருஷர் !

"கரோலினுடன் என் வாழ்க்கை'' என்ற படத்தில் ரொனுல்ட் கோல்மன் நன்கு நடித்திருக்கிருர்.

'கரோலினுடன் என் வாழ்க்கை'

'கரோலினுடன் என் வாழ்க்கை' என்ற ஆர். கே. ஓ. ரேடியோ படத்தில் ரோனுல்ட் கோல்மனும் அன்னு லீயும் நடிக்கின்றனர். ஒரு கணவன் தனது மனைவியை அலக்ஷியம் செய்கிருன். இந்தநிலைமையில் மனைவி வேறு சிலருடன் நட்பு கொள்ளத் துணிவதை அந்த கணவன் தடுப்பதும், பிறகு இருவரும் சந்தோஷமாகக்காலம் கழிப்பதும் தான் இந்த படத்தின் சாராம்சம்.

அலுவல் அதிகம் காரணமாக அந்தோனி மேஸன் (கோல்மன்) தனது மனைவி கரோலினுடன் (அன்னு லீ) அதிக நேரம் இருக்க முடிவதில்லை. கரோலின் தனது தகப்பனுருடன் சில ஹோட்டல்களில் காலம் கழித்து அதிகபணத்தை செலவழிக்கிருள்: இந்த சமயத்தில் பணக்கார யுவர் பலர் அவளிடம் வந்து அவளது புருஷன் அவளை இம்மாதிரி நடத்துவது தகாது என்று கூறி அவளுடன் உறவு பாராட்டப்பார்க்கின்றனர். கரோலினுக்கு ஒருவனிடம் காதல் ஏற்படுகிறது: அந்தோனியை விட்டுவிடவும் அவள் நிச்சயிக்கிருள். இந்த சமயம் அவ்விடத்திற்கு அந்தோனி வந்து சேருகிருன். தனக்கெதிராக நடந்துவரும் சதியையறிந்து அந்தோனி கரோலினிடம் அதிக நட்புகாட்டி, அவளுடைய மனே நிலைமையை மாற்றி விடுகிருன்.

எல்பின்ஸ்டனில் காட்டப்படவிருக்கும் இந்தப் படம் மிகுந்த வேடிக்கை மயமானது: நல்ல உயர்தர பொழுது போக்கு என்றும் கூறலாம்.

* * * *

கார்போ கட்டளை

ஹாலிவுட்டில் இருக்கும் இளைய நடிகர்களுக்கு தங்களுக்கு க்ரேடா கார்போ நடிக்கும் படத்தில் ஏதாவது ஒரு பாகம் கிடைக்க வேண்டும் என்ற ஆசை அதி

கரித்து வருகிறது: ஆனால் அவர்களுக்கு இந்த ஆசை நிறைவேறுவதில்லை. ராபர்ட் ஆல்டன் என்பவர் மட்டும் தாம் நடிக்க விரும்பவில்லை என்று எவ்வளவோ பிடிவாதம் பண்ணிப் பார்த்தும் முடியவில்லை: கார்போவுடன் அவர் நடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ராபர்ட் ஆல்டன் நடனக் காட்சிகளை டைரக்ட் செய்பவர்: இருபத்திரண்டு பிராட்வே காட்சிகளில் அவர் தான் நடன முறைகளைத் தயார்படுத்திக் கொடுத்தவர்: இவற்றில் இருபது காட்சிகள் மிகுந்த ப்ரக்யாதி அடைந்துவிட்டன. ஹாலிவுட்டிற்கு ப்ரெட் ஆஸ்டேர் நடிக்கும் படத்தில் புதிய நடன முறைகளைக் கற்பிப்பதற்காக அவர் வந்தார். அவர் நியூ யார்க்குக்குத் திரும்பும் சமயத்தில் மெட்ரோகோல்ட்வின் மேயர் அதிகாரிகள் "ரம்பா" நடனத்தையும் இன்னும் கடினமான "சிக்கசோகா" நடனத்தையும் நடத்திக் காட்டிக் கற்பிக்கும்படி அவரைக்கேட்டுக் கொண்டனர். "இரட்டை முகமுள்ள ஸ்திரீ" என்ற புதிய படத்திற்காக அவர்கள் ஆல்டனைக் கேட்டுக்கொண்டனர்: இதில் க்ரேடா கார்போ நடிக்கிறார்.

ஆகவே ஆல்டன் ஊருக்குப் புறப்படாமல், மெட்ரோ-கோல்ட்வின் மேயர் ஸ்டூடியோ அதிகாரிகள் அழைப்பை ஏற்றுக் கொண்டு அவ்விடம் போனார். அப்போது டைரக்டர் ஜார்ஜ் ஷுகோர் அவரிடம் வந்து கார்போ புதிய நடன முறைகளை அப்யஸிப்பதற்கு மிகுந்த வெட்கப்படுவதாகக் கூறினார். பிறகு அவர் கார்போவை பெரிய நடன மேடைக்கு அழைத்துக்கொண்டு போய் அதைக் கற்றுக்கொடுத்தார்.

கார்போ முறையைக் கற்றுக் கொண்டு விட்டதை அறிந்த ஆல்டன், "நாளையதினம் உங்களுக்கு நல்ல ஜோடி பிடித்துக் கொடுக்கப் போகிறேன்" என்றார்.

கார்போ இதைக் கேட்டவுடன், சிரித்துக்கொண்டே "நான் என் ஜோடியைக் கண்டு பிடித்தாகி விட்டது" என்றாள்.

ஆல்டனுக்கு ஆவல் சற்று அதிகரித்தது: "அவர் சரிவர நடனம் புரிவார் என்பது உங்களுக்கு நிச்சயம் தானா" என்று வினவினார்,

"நிச்சயமே, ஜோடி நீங்கள் தான்" என்றாள் க்ரேடா கார்போ.

இதற்கப்புறம் ஆல்டன் தாம் போதிப்பவரே தவிர நடிப்பவர் அல்ல என்று எவ்வளவோ வாதாடிப்பார்த்தார். கார்போவிடம் அவர் வாக்குவாதம் பலிக்கவில்லை. இரண்டு தினங்களுக்கப்புறம் கார்போவுடன் படத்தில் அவர் சித்தமாகி விட்டார். மறுமுறை கார்போவுக்கு வெற்றி கிடைத்தது.

* * * *

'டார்ஸான்'

"டார்ஸான்" புத்தகங்கள் பலவற்றை எழுதிய எட்கர் ரைஸ்பரோஸ், இப்போது "டார்ஸான்" என்ற பெயர் காரணமாக அதிகபணம் சம்பாதித்து வருகிறார். இந்த "டார்ஸான்" பெயரை வியாபாரிகள் தங்களது சரக்குகளைக் குறிப்பதற்கு உபயோகப்படுத்துகின்றனர். ஆகவே அவர்கள் இந்த பெயரைத் தங்களது உபயோகத்தில் எடுத்துக்கொண்டதற்காக புத்தகாசிரியருக்கு பணம் கொடுத்து வருகின்றனர். இரண்டரை கோடி புத்தங்கள் விற்பனையாகி யிருக்கின்றன. அவை 56 பாஷைகளில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன.

* * * *

சில புது உண்மைகள்

உங்களுக்கு இவை தெரியுமா? — உலகத்திலேயே மிகவும் ஆக்ரோஷமுள்ள பிராணி நாய் தான். ரைனோஸிரஸ் ஐந்து நிமிஷத்திற்கு மேல் எந்த விஷயத்தையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்வதில்லை—ஹிப்போ போடமஸ், பார்ப்பதற்கு ஹிதம்போல் இருந்தாலும் மிகவும் சாதுவானது.

மெட்ரோ-கோல்ட்வின் மேயர் கம்பெனியார் "டார்ஸானின் ரகஸ்யச் சொத்து" என்ற படப்பிடிப்பில் சமீபத்தில் ஈடுபட்டிருந்த போது இந்த உண்மைகளைக் கண்டெடுத்தனர். ரிச்சர்ட் தார்ப் டைரக்ட் செய்யும் இந்தப் படத்தில் ஜான்னி வீஸ்மூல வரும் மாரீன் ஓஸல்லிவனும் நடிக்கின்றனர்.

காட்டு நாயைப் போல் கடுமையானது வேறு எதுவும் இல்லை என்பதை டைரக்டர் தார்ப் கண்டு பிடித்தார். இந்த நாய்கள் கூட்டமாகப் போகும் போது வழியில் எதைக் கண்டாலும் கொன்று தின்று விடுகின்றனவாம். ஒரு காட்டில் நாய்க் கூட்டம் வந்தால் சிங்கம் புலி கூட அவற்றைக் கண்டு பயந்து ஓடி விடுகின்றனவாம்.

ரைனோஸிரஸின் மூளை மிகவும் சிறியது: ஆகையால்தான் அதற்கு ஞாபக சக்தி அதிகம் இருப்பதில்லையாம்: மூளை மிகச் சிறிதாக இருப்பதே அது மிகவும் கொடும் புத்தி கொண்டிருப்பதற்கும் காரணம் என டைரக்டர் தார்ப் கருதுகிறார். அநேகம் ஆண்டுகளாக இந்தப் பிராணிகளைப் பழக்குவது முடியாத் காரியம் என்று எண்ணப்பட்டு வந்தது. ஆனால் டார்ஸான் படத்திற்காக பிராணிகளைப் பழக்கி வைக்கும் ஜார்ஜ் மெர்ஸன் ஒரு ரைனோஸிரஸை பழக்கி வைத்ததுடன் அதன் மேல் ஒருவர் சவாரி பண்ணவும் ஏற்பாடு செய்தார்.

* * * *

பிரபல நடிகர்கள்

ஜனவரி மாதம் 2-ம் தேதி வெளியான "மோஷன் பிக்சர் டெய்லி" என்ற பத்திரிகையில் பிரிட்டனில் இருக்கும் தியேட்டர் சொந்தக்காரர்கள் செய்த முடிவு பிரசுரமாகியிருக்கிறது. எவர்களது படங்களைக்காட்டினால் படத்திற்கு அதிக கும்பல் சேருகிறது என்பதைப்பற்றி அவர்கள் தெரிவித்தனர். பிரிட்டிஷ் அமெரிக்க நடிகர்களில் முதல் நிற்கும் பத்துபேர்களை அவர்கள் நிச்சயித்தனர். அந்த விவரம் வருமாறு:—

மிக்கி ரூனி (மெட்ரோ) டியன்னா டர்பின், ஸ்பென்ஸர் ட்ரேஸி (மெட்ரோ), ஜார்ஜ் பார்ம்பி, ஜீனட் மக்டானல்ட் (மெட்ரோ), எர்ரால் ப்ளின், நெல்ஸன் எட்டி (மெட்ரோ) காரி கூப்பர், ஜேம்ஸ் காக்னி, பிங் க்ராஸ்பி.

(முன் பக்கத்தொடர்ச்சி)

* * * *

"ஸ்திரீ ஸ்பர்சம்"

மெட்ரோ கோல்ட்வின் மேயர் தயாரித்த "ஸ்திரீ ஸ்பர்சம்" என்ற ஆங்கில படத்தில் தோன்றும், தத்துவ சாஸ்திர ஆசிரியர் பொறுமை என்பதில் தாம் நம்புவதில்லை என்கிறார்.

இந்தப் படத்தில் ராஸலிண்ட் ரஸ்ஸல். டான் அமீச்சி. கே பிரான்ஸிஸ் முதலியோர் நடிக்கின்றனர். இது ஒரு காதல் கதை: இதில் நான்கு பேர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றனர். இண்டாம் வான் டைக் இந்தப் படத்தைத் தயாரித்திருப்பதால், இதில் நகைச் சுவையும், உத்சாகத்தை தளர்த்தாத சம்பாஷணைகளும் நிரம்பியிருக்கின்றன.

தத்துவ சாஸ்திர போதகாசிரியர் பொறுமை என்பது, மனுஷ ஸ்வபாவத்திற்கு விரோதமானது என்கிறார். அவர் மனைவி (ராஸலிண்ட் ரஸ்ஸல்) அவர் கருத்தை ஆக்ஷேபிக்கிறாள். அவர் ஒரு புத்தகம் எழுதுகிறார். அதை நியூ யார்க்கில் பிரசுரகர்த்தர் ஒருவர் பிரசுரத்திற்காக எடுத்துக்கொள்ள சம்மதிக்கிறார்.

போதகாசிரியரது மனைவி பிரசுரகர்த்தர் தனது கூற்றுக்கு ஆதாரமெனக் கருதுகிறாள். ஒரு அழகான முகத்தைக் கண்டால் பிரசுரகர்த்தர் மனோநிலை மாறிவிடும்: பிரசுரகர்த்தரின் அஸிஸ்டண்டான ஒரு அழகிய யுவதி. தன் கணவனிடம் அதிக சிரத்தை காட்டும் வரையில், அவள் (ரஸ்ஸல்) பொறுமையின்றி இருக்கிறாள். அந்த அழகிய யுவதி புத்தகாசிரியரிடம், காதலுடன் நடித்ததற்கு தான் உண்மையிலேயே காதலித்து வந்த பிரசுரகர்த்தர் அதிக பொறுமைப்பட வேண்டும் என்பதே காரணமாகும். அவ்வளவு தான்! இதற்கப்புறம் சிக்கல் அதிகரிக்கிறது: நான்கு பேர்கள் சிக்கிக் கொள்கின்றனர்: சம்பாஷணைகள் சுருக்கமாகவும் ரஸமாகவும் இருக்கின்றன. விபரீதமான சந்தர்ப்பங்கள் படத்தில் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றிய போதிலும் கதையின் கோர்வையில் குற்றம் காண முடியாது.

* * * *

இலவசம்! இலவசம்!! இலவசம்!!!

படத்திலுள்ளதுபோன்ற அமைப்பு. உண்மை ரிவால்வரைப்போலிருப்பதுடன் 15 அவு. எடை 7" நீளம். 6 ரவைகளை சேர்ந்தாற்போல் சுடலாம். இதன் சப்தத்தால் அனைவரையும் விரட்டலாம். . திருடர்கள், விரோதிகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள சிறந்தது. நெ. 7777, 30 ரவைகளுடன் ரூ. 4/8. நெ. 8888, 45 ரவைகளுடன் ரூ. 5/13. நெ.1111, 55 ரவைகளுடன ரூ. 6/8. அதிகப்படி 1000 ரவைகள் ரூ. 3/- பெல்டுடன் கேஸ் ரூ. 1/8. பிஸ்டல் ஆயில் அணா 6. இலவசம் : ஒரு அழகிய மியூட்கை கடியாரம், ஒரு தோலா "பாரிஸ் நியூகோல்ட்" ஒவ்வொரு பிஸ்டலுடனும் இனாமாகக் கொடுக்கப்படும். இவை உண்மை தங்கத்தைப்போலிருப்பதுமட்டுமின்றி, கம்பிகளாகவும் இழுக்கலாம், பிளேட்டுகளாகவும் அடிக்கலாம், எல்லாவித நகைகளும் செய்யலாம். குறிப்பு :—அங்கீகரிக்கப்படாவிடில் பணம் வாபீஸ் என்ற உத்திரவாதத்தின் கீழ் விற்கப்படுவன. 2 பிஸ்டல் வாங்குவோருக்கு 2 அழகிய மியூட் கை கடியாரமும், 2 தோலா "பாரீஸ் நியூ கோல்ட்"டும் கொடுக்கப்படும். தபால் சார்ஜ் இலவசம்.

இந்த குறைந்த கட்டணங்கள் வாபீஸ் பெறுமுன் எழுதுங்கள்.

AMERICAN CORPORATION

(S. M. W.) DINA NAGAR (PUNJAB)

(B. P. S.)

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி"

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளை குணப்படுத்தும்

Dr பிள்ளா பாபய்ய பாத்ருடு & Bros.,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர். போன் 86257. :: திருச்சி பிராஞ்சு: 81, ஆண்டார் தெரு, தெப்பக்குளம்.

மார்ச்சுமீ 14உ முதல் 17உ செவ்வாய் வரை

ஏல்பின்ஸ்டன்

சனி, ஞாயிறுகளில் மாடினி பகல் 3-மணிக்கு

ஞாயிறு காலை 10 மணிக்கு காலை காட்சி

காதல் சம்பந்தமாக கணவன் மனைவிக்கு ஏற்படும் அபிப்பிராய பேதத்தை விளக்கும் ஹாஸ்யம் நிறைந்த படக்காட்சி.

ரொனல்ட் கோல்மன் & அன்னா லீ

நடிக்கும்

MY LIFE WITH CAROLINE

(காரலினுடன் எனது வாழ்க்கை)

சார்லஸ் வினின்கர் — ரெஜினல்ட் கார்டினர்

கில்பர்ட் ரோலண்ட் — காதரின் லெஸ்லி

நடிப்பது

பரவசப்படுத்தும் அற்புத காட்சி!

ஆர். கே. ஓ. ரேடியோ படம்.

மதிப்புரை

கதைக் கோவை

தொகுதி இரண்டு. அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. கிளேஸ் பதிப்பு ரூ 4. பேதர்வேயிட் ரூ 5:

கதைக் கோவையில் இரண்டு தொகுதிகள் வெளிவந்திருப்பது நவீன இலக்கிய முன்னேற்றத்தில் ஒரு முக்கியமான சந்தர்ப்பம். இவற்றின் மூலம் தமிழ் நாட்டில் நூற்றுக்குமேற்பட்ட எழுத்தாளர்கள் இருக்கிறார்கள் என்பதும், அவர்களில் குறைந்தது ஐம்பது பேர்கள் மும்முரமாக இலக்கியத்தில் ஈடுபட்டவர்கள் என்பதும் தெளிவாகிறது.

கதை புனையும் திறமையும் தமிழ் நாட்டில் எவ்வளவு சிறந்து தென்படுகிறது என்பதையும் இந்தத் தொகுதிகளில் காணலாம். முக்யமாக இந்த இரண்டாம் தொகுதியில் பெண் எழுத்தாளர்கள் 11 பேர் இருப்பது கவனிக்க வேண்டிய விஷயம். கதை எப்படி இருக்கவேண்டுமென்பதையும், இந்தக் கதைகள் எவ்வளவு தூரம் அந்த நிர்ணயத்தின் திட்டத்திற்கு வருகின்றன என்பதையும் ஒருவாறு சூசனை செய்வது தான் இந்த விமர்சனத்தின் வேலை.

கதை என்பது என்ன என்ற கேள்விக்கு "எஸ். வி. வி." அவர்கள் முகவுரையில் எழுதியிருக்கும் முதல் வாக்கியத்திற்கு ஒரு திருத்தப் பிரேரணை செய்யலாம்.

"கதை என்றாலே வாஸ்தவத்தில் நடந்த சம்பவங்களைச் சொல்லுவதல்ல, கட்டிச் சொல்லுவதென்று எல்லோருக்கும் நன்றாய்த் தெரியும்" என்று அவர் எழுதுகிறார்.

"கதை என்றாலே வாஸ்தவத்தில் நடந்த சம்பவங்களைக் கட்டிச் சொல்லுவதென்று எல்லோருக்கும் நன்றாய்த் தெரியும்" என்று அதைத் திருத்தலாம்.

வாஸ்தவத்தில் நடந்த சம்பவங்கள் இல்லாமல் கதையே எழுத முடியாது அவற்றைவேறு அமைப்பில் தொகுத்தோ, மிகைப்படுத்தியோ, குறைத்தோ மனோபாவப்படி கட்டி எழுதுவதுதான் கதை. கதையில் நடந்த சம்பவம் என்பது ரத்னம்; அதைப் பதித்திருக்கும் உம்மிசம் மனோபாவம், இந்த இரண்டும் சேர்ந்து ஆபரணமாகின்றன.

இந்த இரண்டாம் தொகுதியில் காணப்படும் கதைகள் எல்லாமே ஒவ்வொரு வகையில் ஸ்வாரஸ்யமாக இருக்கின்றன. கதை அமைப்பு என்பது சிலவற்றிற்கே இருக்கிறது என்றாலும் முதல் பரீட்சையில் எழுத்தாளர்கள் இவ்வளவு தேர்ச்சி கொண்டிருப்பது மிகவும் பாராட்ட வேண்டிய விஷயம்.

கதையில் ஒரே சம்பவம் இருந்தால் போதும். அதனுடைய பிறப்பு வளர்ச்சி முடிவு மனோதத்துவ ரீதியாக திருப்தி அளிப்பனவாக இருந்தால் போதும். இந்தக் கட்டுக் கோப்பை அடைய இடம் காலம் நிகழ்ச்சி இவற்றில் வேற்றுமை இல்லாமல் இருந்தால் போதும். நவீன இலக்கியத்தில் கதை என்பது "ஸ்னாப் ஷாட்": ஒரு நிமிஷம் ஒரு தோற்றம், அதன் பசைப் புலன்—அவ்வளவுதான்.

இந்தத் தொகுதியில் "சுதந்திரப் போர்" "நாலு அவுன்ஸ் பிராந்தி" "அபலை மீராள்" "துர்க்கையின் சாபம்"—இவை மிகவும் நன்றாக அமைந்திருக்கின்றன. "விளம்பர மோட்டார்" "அனுபவ நாடகம்" "ரோஜாப் பூ மாலை" "பால கிருஷ்ணன் படம்"—இவை சாதுரியமாக இருக்கின்றன. "தாயில்லாக் குழந்தை" "களத்து வாசலில்" "வித்தியாப்பியாயம்" "தீத்துப் பணம்" முதலியவற்றில் உணர்ச்சி இருக்கிறது. "அமர வாழ்வு" "முதல் தாமரை" "சிற்றன்னை" "வானவில்" "கோட்டை வீடு"—இவற்றில் மனோபாவ வர்ணனை அழகாக இருக்கிறது.

பதிப்பு ஆங்கிலப் புத்தகத்தின் பதிப்புபோல் இருக்கிறது. நல்ல காகிதம்: சுத்தமான அச்சு பிழையற்று கிட்டத்தட்ட 600 பக்கங்கள் கொண்ட புத்தகத்திற்கு விலை குறைவென்றுதான்சொல்லவேண்டும்.

இந்த இரண்டாவது தொகுதியை வெளியிட்டு தமிழ் நாட்டின் இலக்கிய வளர்ச்சிக்கு ஒரு அத்தாட்சியை அளித்ததற்காக நாம் அல்லயன்ஸ் கம்பெனியாரை மிகவும் பாராட்டவேண்டும்.

——

ஸாகர் டாக்கீஸ் உதவி மானேஜர் ஸ்ரீ ஜாம்பை ராம்ஷா ஏ. ஆர். பி. உத்யோகத்தை யேற்றுக்கொண்டபோது, மேற்படி தியேட்டரில் சொந்தக்காரர் ஸ்ரீ படேல் உள்பட, சிப்பந்திகள் அவருக்கு பிரிவு உபசாரம் நடத்தினர்.

டார்வின்மீது குண்டுவீச்சு

டார்வின், புரூம், விண்டுஹாம், வா (நியூகினி) ஆகிய விடங்களை ஜப்பானியர் தாக்கிய போது பெட்ரோல் கிடங்குகளையும் எண்ணெய்க் கிடங்குகளையும் தாக்க எரிகுண்டுகளையும் வெடிக்கக்கூடிய பீரங்கி குண்டுகளையும் ஜப்பானியர் உபயோகித்தனர். 8000 முதல் 9000 அடி உயரத்திலிருந்து விமானங்கள் யந்திர பீரங்கிப் பிரயோகஞ் செய்யப்பட்டன.

உயர்ந்த ரக பாக்குகளை மைசூரிலிருந்து தருவித்துக் கொள்ளுங்கள்.

உங்களுடைய தேவைக்கு உடனே எழுதவும் :

பூபாலம் R. சந்திரசேகரய்யா & கம்பெனி,

பாக்கு வியாபாரிகள்,

ஷிமோகா (மைசூர்சமஸ்தானம்)

ஒரு மாதத்திற்கு மட்டும் சரஸ விலை

100 கார்டுகள் கொண்ட ஸெட் 1-க்கு விலை ரூ. 5-12-0

கார்டு படங்கள்

கணவன் மனைவியின் அந்தரங்கமான நிலைகளைக் காட்டும் அழகான தோற்றங்களுடைய அபூர்வமான ஸெட், தபால் சார்ஜ் உள்பட 100 கார்டுகளடங்கிய ஸெட் 1க்கு ரூ 5/12/- பொறுக்கியெடுத்த 25 கார்டுகள் கொண்ட ஸெட் 1-க்கு தபால் சார்ஜ் உள்பட ரூ. 2/10/- ஒரு சமயத்தில் 25 கார்டுகளுக்கு குறைவாக அனுப்புவதில்லை.

AMERICAN CORPORATION (S.M.W)

(B P S) DINA NAGAR (PUNJAB)

(மேல்)

ஊஸ்மானியா சர்வ கலா சாலைப் பட்டமளிப்பு விழாவில் ஸர் ஸி. பி. ராமசாமி அய்யர் பிரசங்கம் புரிந்தார்
(என். என். பி. எஸ்.)

(வலது)

பம்பாயில் ஸேத் ஜம்னுலால் பஜாஜ மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்க ஸ்திரீகள் கூட்டம் நடந்தது: அச்சமயம் ஸ்ரீமான் விநோபாபாவே பேசினர்.
(பி. என். கே.)

(கீழ்)

ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியாருக்கு சிதம்பரம் நகர சபை அளித்த வரவேற்பு.

திராவிட ரத்தினம்

★

ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி சர்மா

இயற்றியவை

	ரூ.	அ.		ரூ.	அ.
மகாத்மா காந்தி	1	8	இராஜ இராஜ சோழன்	0	10
நெப்போலியன்	1	8	ஆத்ம சக்தியும் சாந்தி நிலையும்	0	10
இராஜரீக சாஸ்திரம்	1	0	அசோக சக்ரவர்த்தி	0	8
புத்தர் ஜாதகக் கதை	0	10	கும்பமஹாராணு	0	6

வேதோபநிஷத ஆசிரியர்

ஜம்புநாதரின் நூல்கள்

	ரூ.	அ.		ரூ.	அ.
அதர்வ வேதம்	5	0	சிரத்தானந்நர் சரித்திரம்	0	8
யஜுர்வேதம்	3	0	கதா ர[illegible]ம்	0	8
ஸாமவேதம்	1	8	திரிமூர்த்தி உண்மை	0	8
மாஜினியும் மனிதர் கடமைகளும்	1	0	வேதசந்திரிகை	0	8
யஜுர்வேத கதைகள்	0	9	யோகாசனம் (இங்கிலீஷ்)	0	8
உபநிஷத் கதைகள்	0	8	கடோபநிஷதம்	0	4
சீனவேதம்	0	8	ரோஜாத் தோட்டம்	0	4

தபாற்செலவு, ரயில் செலவு பிரத்யேகம்.

எமது எல்லா ரயில்வே புத்தகசாலைகளிலும், ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

இவைகள் தவிர வியாபாரிகளுக்கும், வாசக சாலைகளுக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் கோர்வையான அகப்படக்கூடிய நாவல்கள் முதலியன ஆர்டரின் பேரில் அனுப்பப்படும்.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

Printed and Published by T S Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor, C.R. Srinivasan, B A